விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 பங்குனி 02 ஞாயிற்றுக்கிழமை (16.03.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 087

## நடுவர் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

போட்டி விதிமுறைகளை மீறி கிரிக்கெட் நடுவர் மீது ரசிகர்கள் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான வடக்கின் மாபெரும் போர் கிரிக்கெட் போட்டி கடந்த மூன்று நாட்களாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இதில் மூன்றாம் நாள் ஆட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் துணை நடுவர் கொடுத்த ஆட்டமிழப்பு தொடர்பாக ஏற்பட்ட சர்ச்சை காரணமாக துணை நடுவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மைதானத்தில் பொலிஸார் பாது

24 ஆம் பக்கம் பார்க்க..

## ஆங்கிலப் பேச்சு பரீட்சை அமுலாகும்

(கொழும்பு)

அடுத்த வருடம் அமுலாகும் வகையில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் ஆங்கில மொழிப் பரீட்சையில் கேட்டல் மற்றும் பேசும் ஆற்றல்களுக்கு 20 புள்ளிகளை வழங்க யோசனை முன்வைக்கப் பட்டுள்ளது.

24 ஆம் பக்கம் பார்க்க..

### வடக்கின் மாபெரும் போர்

## 108-வது கிரிக்கெட் போட்டி கைவிடப்பட்டதாக அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் சென் ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையிலான 108-வது கிரிக்கட் போட்டி கிரிக்கெட் ரசிகர்கள் ஏற்படுத்திய களேபரத்தையடுத்து கைவிடப்பட்டுள்ளது.


108-வ்து வடக்கின் போர் போட்டியின் 3-ம் நாள் ஆட்டம் நேற்று காலை மத்திய கல்லூரியில். ஆரம்பமாகியது.

2-ம் நாள் ஆட்டநேர நிறைவில யாழ் மத்திய கல்லூரி 9 விக்கட்களை இழந்து 94 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இருந்தது. நேற்று ஆட்டம் ஆரம்பமாகிய போது முதலாவது ஓவரினை சென் ஜோன்ஸ் கல்லூரியைச் லோகதஸ்வர் வீச அழைக்கப்பட்டார்.

23 ஆம் பக்கம் பார்க்க..

## கிரிக்கெட் மைதானத்தில் வைத்து

# இளம் குடும்பஸ்தர் அடித்துக் கொலை



அமலன்

## பலரும் பார்த்திருக்க கொடூரம்

(யாழ்ப்பாணம்)

பொன்னணிகளின் போர் என வர்ணிக்கப்படும் யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் – வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரிக்கும் இடையிலான துடுப்பாட்டப் போட்டி நேற்றைய தினம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றபோது சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவனும் இளம் குடும்பஸ்தருமான அமலன் மைதானத்தில் வைத்து 50இற்கும் மேற்பட்ட நபர்களினால் ரம்ஸினாலும், கை, கால்களினால் அடித்தும் உதைத்தும் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.



(23ஆம் பக்கம் பார்க்க..)

## அம்புலன்ஸ் மோதி படுகாயமடைந்தவர் மரணமானார்

கோண்டாவில் பகுதியில் இராணுவ அம்புலன்ஸ் வாகனம் ஒன்று வீதியில் சென்றுகொண்டிருந்த இளைஞர்களை நேற்று முன்தினம் மோதித் தள்ளியதில் மூவர் படுகாயமடைந்தனர். அவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையிலும் நேற்றைய தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ்.கோண்டாவில் டிப்போவுக்கு அருகில் இராணுவத்தின் அம்புலனஸ் ஒன்று எதிரே

24 ஆம் பக்கம் பார்க்க..



## இராட்சத மீன்

யாழ். வடமராட்சி இன்பருட்டிப் பகுதியில் 16 அடி நீளமான இராட்சத மீன் ஒன்று இறந்த நிலையில் நேற்று அதிகாலை கரையொ துங்கியுள்ளது.

குறித்த மீன் திமிங்கல வகையினைச்சேர்ந்ததாக இருக்கலாம் என கூறப்படுகிறது.

## புகையிரதத்துடன் மோதுண்ட கொடிகாமம்வாசி உயிரிழப்பு

### கடவையை கடந்த வேளை விபத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். கொடிகாமம் பகுதியில் புகையிரதப் பாதை அமைப்பதற்கு தேவையான சல்லிக் கற்களை கொண்டு வந்த புகையிரதம் மோதி படுகாயமடைந்த இளம் குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கொடிகாமம் நாவலடியினைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான சிவராசா ஜெகன் (வயது 32) என்பவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் மரணமடைந்துள்ளார் என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

புகையிரதம் வந்துகொண்டிருப்பது அறியாமல் திடீரென கடவையினை மோட்டார் சைக்கிளில்

23 ஆம் பக்கம் பார்க்க..

தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு
SISIL WORLD
வழங்கும் அதிவிசேட பண்ட மாற்றுக்கொடுப்பனவு
விசேட சலுகை ஏப்ரல் 30 மட்டுமே
No106, K.K.S Road, Jaffna 021-2219291
No125, K.K.S Road, Chunnakam 021-2242335
No17/3, Kandy Road, Kilinochchi 021-2283755
(C-6750)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## அரசியலமைப்பு குறித்து பேராசிரியர் உரை

(யாழ்ப்பாணம்)

கனடா, விண்ட்சர் பல்கலைக் கழகத்தின் இளைப்பாறிய சட்டப் பேராசிரியரும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் இடைவருகைப் பேராசிரியருமான கலாநிதி லக்ஷ்மன் மாறசிங்க இனப்பிரச்சினைகளும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களும் என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் உரையாற்றவுள்ளார்.

இந்த நிகழ்வு எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை, மாலை 4 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆர்வமுள்ள அனைவரும் இதில் பங்குபற்றி பயனடையுமாறு கேட்கப்பட்டுள்ளது. அனைவரும் அழைக்கப்படுகின்றனர். (செ-11)

## மாயமானது மலேசிய விமானம்

# தொலைத்தொடர்பு கருவி திட்டமிடப்பட்டு முடக்கம்

(கோலாலம்பூர்)

காணாமல் போன மலேசியன் ஏரலைன்ஸ் விமானத்தின் தொலை தொடர்பு அமைப்புகள் வேண்டுமென்றே முடக்கப்பட்டதாகத்தெரியவருவதாக மலேசியப் பிரதமர் நஜிப் ரஸாக் கூறியிருக்கிறார்.


விமானத்தை செய்கோள் மற்றும் ராடார் கருவிகள் மூலம் கண்காணித்த தரவுகளின் அடிப்படையில் கிடைத்திருக்கும் இந்தப் புதிய ஆதாரம், விமானத்தில் யாரோ ஒருவர் வேண்டுமென்றே இந்த கருவிகளை முடக்கியிருப்பதைக் காட்டுவதாக அவர் கூறினார்.

இப்போது விமானம் காணாமல போனது குறித்த விசாரணைகள், விமானக் குழுவினர் மற்றும் பயணிகள் மீது திரும்பியிருக்கிறது.

இத்தகவலை ஓரளவு நிச்சயமாகத் தன்னால் சொல்ல முடியும் என்று பிரதமர் ரஸாக் கூறினார்.

**திசை மாறிய விமானம், திசை மாறும் விசாரணை**

மிகச் சமீபத்திய செய்கோள் தரவுகளை வைத்துப் பார்க்கையில், விமானம் கோலாலம்பூரிலிருந்து பீஜிங் செல்லும் வழியில் இரண்டு முறை திசை மாறியிருக்கிறது, முதலில் மேற்குப் புறமாகவும் பின்னர் வடமேற்காகவும் திரும்பியது என்று அவர் கூறினார்.





இதனை அடுத்து, இந்த விமானத்துக்கான தேடுதல் வேட்டையை, தனது அரசு தெற்கு சீனக் கடல் பகுதியில் நிறுத்துவதாகவும், இனி விமானத்தைத் தேடும் முயற்சி, வேறு இரண்டு பகுதிகளில் தொடரும் என்றும் அவர் கூறினார்.

ஒன்று, கஜகஸ்தான் -துருக்மேனிஸ்தான் எல்லையில் தொடங்கி, வட தாய்லாந்து வரையிலான பகுதி இரண்டாவது, இந்தோனேசியாவில் தொடங்கி இந்தியப் பெருங்கடலின் தென்பகுதி வரையிலானது.

விமானம் கடத்தப்பட்டிருக்கலாம் என்ற வதந்திகள் இருந்தாலும், மலேசிய அதிகாரிகள் அனைத்து சாத்தியக்கூறுகளையும்விசாரிக்கிறார்கள் என்று ரசாக் கூறினார். (செ-11)

# வரலாறு காணாத அளவிற்கு பொருளாதாரம் பெரும் வீழ்ச்சி!

## ஜே.வி.பி. தலைவர் சுட்டிகாட்டு



(கொழும்பு)

வரலாறு காணாத அளவிற்கு நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது என ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வர்த்தகர்களுக்கு வியாபாரம் இல்லை. ஆனால்மகிந்த பொருளாதாரம் வளர்ச்சியடைந்துள்ளது.

நாட்டின் கல்வி வீழ்ச்சியடைந்துள்ளது. சுகாதார சேவை பாதிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்திடம் இப்போது பணமில்லை.

எல்லா விடயங்களுக்கும் வரியை அறவீடு செய்து அதன் மூலம் ஆட்சி நடத்த அரசாங்கம் முயற்சிக்கின்றது.

மத்திய கிழக்கு நாடுகளில் பத்து ஆண்டுகளுக்கு முன்னதாக ரொட்டியின் விலை எவ்வாறு இருந்ததோ அதே நிலைமை காணப்படுகின்றது.

எனினும், இலங்கையில் எல்லா பொருட்களின் விலைகளும் உயர்த்தப்பட்டுள்ளன.

ஒரு கிலோ பால் இறக்குமதி செய்யும் போது விலை 350 ரூபா, அதற்கான வரி 400 ரூபாவாகும். வரி அறவீடுகளுக்கு மேலதிகமாக அபராதங்களும் விதிக்கப்படுகின்றன.

இன்று இவ்வளவு ரூபாய் அபராதம விதிக்க வேண்டுமென உத்தரவிட்டே பொலிஸார் வீதிகளில் இறக்கப்படுகின்றனர் என அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (செ-11)

# சட்ட ஒழுங்குகளில் பிரச்சினை இருக்கிறது

## ஒப்புக்கொண்டார் பீரிஸ்

(கொழும்பு)

இலங்கையில் சட்ட ஒழுங்கு விடயங்களில்பிரச்சினைகள்இருக்கின்றன எனபதை ஒப்புக் கொள்வதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

லண்டனில் பொதுநலவாய நாடுகளின் அமைச்சர்கள் செயற்குழு கூட்டத்தை ஒத்ததாக இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எனினும் இலங்கையில் காணப்படுகின்ற சட்ட ஒழுங்கு பிரச்சினைகளை சீர் செய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறியிருந்தார். (செ-11)

# இலங்கையில் கணிசமான முன்னேற்றம் - சீனா பாராட்டு

(கொழும்பு)

இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின்னர் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக சீன அரசாங்கம் நேற்று பாராட்டியுள்ளது.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின இரண்டாம் கட்டத்தை நேற்று திறந்து வைக்கும் நிகழ்வில் பேசிய இலங்கைக்கான சீன தூதுவர்வூ ஜியாங்வூ இதனை கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின்னர், நாடு முழுவதும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை காணமுடிகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக இலங்கையின் தூதுவராக பணியாற்றி வருவதால், கொழும்பு மட்டுமல்லாது நாட்டின் ஏனைய பிரதேசங்களின் வளர்ச்சி தொடர்பில் தனிப்பட்ட ரீதியாக சாட்சியாக இருக்க முடியும். பயங்கரவாதத்தை தோற்கடித்த பின்னர் மேலும் பலவற்றை செய்ய வேண்டியுள்ளது. இலங்கை தனது சாதனைகளால் தற்போது மிகவும் பிரபலமான நாடாக மாறியுள்ளது.

இலங்கை ஏன் முன்னேற்ற மடையவில்லை என்று மக்கள் என்னிடம் கேட்டனர். இலங்கை மிக வேகமாக முன்னேறி வருகிறது என்று நான் கூறினேன். இலங்கையின்பொருளாதாரம்மற்றும்சுற்றுலாத்துறையினவளர்சசிக்கு சீனா உதவும் என்றார். (செ-11)


## சிறுநீரகம் தேவை

சிறுநீரக நோயாளி ஒருவருக்கு (O) பொசிற்றிவ் ("O" Possitive) அல்லது (O) நெக்கரிவ் ("O" Negative) குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் அவசரமாகத் தேவை.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்

தொடர்புகளுக்கு :—

011 250 1010

(C-6756)

## நிரந்தர வேலைவாய்ப்பு

தொழில் அடிப்படையில் சம்பளம் 18000/- + 38000/- கொழும்பை அண்மித்த ஜேம்/டொபி/பிஸ்கட்/தேங்காய் பால்மா/இறைச்சி/Puc/Paint/கிளவுஸ் மற்றும் பல தொழிற்சாலைக்கு 18-50 வயது ஆண், பெண் தேவை. (உற்பத்தி, லேபல், பொதியிடல், களஞ்சியப் பிரிவு) உணவு தங்குமிடம் குறைந்த விலைகளில் நண்பர்கள் குழுக்களாக ஒரே தொழிற்சாலைகளில் (தமிழ்,முஸ்லிம் மக்களுக்கு விசேடம்) வருகை அன்றே தொழிலுக்கு செல்லலாம்.

தொடர்பு :- 077 683 8231

(C-6752)

## வேலைவாய்ப்பு

உங்களுக்கு தனியார் துறைமுகம் விமான நிலையத்தில் வேலை செய்ய விருப்பமாயின் 18-45 வயதை உடையவராயின் கப்பல் புனர்நிர்மாணப்பிரிவில் சாதாரண ஊழியர்கள் வெல்டர், தச்சு, விமான நிலையத்தில் சுத்திகரிப்பாளர், கேட்ரிங் லொன்றி சம்பளம் 18000/- 35000/- உணவு தங்குமிடம் குறைந்த விலைகளில்

தொடர்பு :-077 431 2176, 077 556 1883

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

(C-6751)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

## வேலைவாய்ப்பு

யாழ்.நகரிலுள்ள பல் தேசிய கம்பனிக்கு விற்பனை பிரதிநிதிகள்தேவை

- வயதெல்லை 18-35
- நிரந்தர தொழில் வாய்ப்பு
- வெளிநாட்டில் பணிபுரியலாம்
- தங்குமிடம் & உணவு
- [illegible] இலவசம்
- ஆண்/பெண் இருபாலரும் இணையலாம்
- அடிப்படைச் சம்பளம் 18,000 - 20,000
- படிப்படியாக 06 மாதகால திற்குள் பதவி உயர்வுகள்
- அடிப்படைத் தகைமை O/L

தொடர்புகளுக்கு :- 077 230 2795, 077 556 6224

(5825)

## வீடு பகுதியாக வாடகைக்குண்டு

நல்லூர் கோவிலுக்கு அருகில் குளியல் அறை, சமையலறை, ஓர் அறையுடன் கூடிய அனெக்ஸ் ஒன்று வாடகைக்கு உண்டு.

தொடர்பு :- 077 293 5509

## வாடகைக்கு வீடு

கன்னாதிட்டி கஸ்தூரியார் லேனில் நாற்சாரம் வீடு அலுவலக அல்லது ஸ்ரோர் பாவனைக்கு, வாடகைக்கு உண்டு.

(5827) தொடர்பு :- 077 285 0753

## சேல்ஸ்மன் தேவை

யாழ்.நகரில் இயங்கும் எமது புடைவை கடைக்கு அனுபவம் உள்ள ஆண்,பெண் ஊழியர்கள் தேவை.

தொடர்பு :- 0777 035 457


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுவர் மற்றும் பெண்களுக்கான ஆடை வடிவமைப்பு கற்கை நெறி

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது நல்லூர் தொழிற்பயிற்சி நிலையத்தில் சிறுவர் மற்றும் பெண்களுக்கான ஆடை வடிவமைப்பு கற்கை நெறியை ஆரம்பிக்கவுள்ளது

இக்கற்கை நெறியானது நாளை திங்கட்கிழமை ஆரம்பிக்கவுள்ளதாக இவ்வதிகார சபையின் உதவிப்பணிப்பாளர் நிரஞ்சன் அறிவித்துள்ளார்.

இக்கற்கை நெறி தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சியாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இக்கற்கை நெறியை கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், முதலாம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் அல்லது நல்லூர் தொழிற்பயிற்சி நிலையத்தில் மேற்கொள்ளுமாறு யாழ் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை உதவிப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (2)

# கற்கை நெறிகள் நாளை ஆரம்பம்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது, காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), மரவேலை தொழில்நுட்பவியலாளர் (தளபாடம்) ஆகிய கற்கை நெறிகள் இலவசமாக ஆரம்பிக்கப்படவுள்ளதாக இவ்வதிகார சபையின் உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். இக்கற்கைநெறிகள் அனைத்தும் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இக்கற்கைநெறிகள் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும்.

கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம் , முதலாம்மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் அல்லது காரைநகர் தொழிற்பயிற்சி நிலையம், வலந்தலை என்னும் இடங்களில் மேற்கொள்ளுமாறு யாழ்.இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார்.

# வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

யாழ் .மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தினரால் வலைப்பந்தாட்டச்சுற்றுப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை மைதானத்தில் திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சட்டத்தரணி சி.ஞானலோஜினி, சிறப்பு விருந்தினர்களாக யாழ் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அதிபர் திருமதி வேணுகா சண்முகரட்ணம், ஓய்வு பெற்ற உடற் கல்விப்பணிப்பாளர்களான ரி.அருணகிரிராஜா ,கே.குமரசாமி, வடமாகாண சபை உறுப்பினர் இமானுவேல் ஆனொல்ட், கல்விக் காருண்யன் எஸ்.பி.நாகரத்தினம் கிருபா லேணர்ஸ் உரிமையாளர் எ.கிருபாகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். தொடர்ந்து நிகழ்வுகளும் இடம் பெறும். (2)

# வாரம் ஒரு தகவல்

## ஒரு காதல் கதை

"அப்பா உங்களிடம் ஒரு கேள்வி"

"என்ன கேட்கப் போகிறாய்?"

"வாழ்க்கையில் 3 முக்கியமான விடயங்கள் என்ன தெரியுமா?"

"தெரியவில்லையே"

"எனக்கு தெரியுமே, ஒரு புத்தகத்தில் படித்தேன்"

"என்ன படித்தாய்?"

"வாழ்க்கையில் மிக முக்கியமான ஒரு விடயம் யாரையாவது காதலிக்க வேண்டும்."

"இரண்டாவது முக்கியமான ஒரு விடயம்: யாராவது நம்மைக் காதலிக்க வேண்டும்"

"மூன்றாவது முக்கியமான விடயம்: இவையிரண்டும் ஒரே நேரத்தில் நடக்க வேண்டும்"

"இப்பதான் தெரியுது... நீ எப்படியான விடயங்களை அதிகமாகப் படிக்கிறாய் என்று"

"நான் என்னப்பா... இன்னமும் சின்னக் குழந்தையா? வயதாகி விட்டதல்லவா!"

"புரியுதடா... ஏற்பாடு பண்ணுறேன்"

"நேற்றுக் கூட அம்மா என்னை எங்கே என்று தேடிய போது அவன் எங்கே போயிருப்பான். கழுதை கெட்டால் குட்டிச்சுவர் என்று சொன்னீங்களாமே?"

"ஆமாம், சொன்னேன்"

"இனிமேல் அப்படியெல்லாம் சொல்லாதீங்கப்பா"

"என்னடா சொல்கிறாய்?"

"அதற்கில்லையப்பா, நான் இப்பொழுது வாலிபன். இனிமேல் என்னை கழுதை என்று சொல்வது நல்லா இருக்காது என்று நினைக்கிறேன்"

"ஏன்?"

"எதிர்வீட்டுப் பெண்ணை அவளுடைய அப்பா 'குட்டிச்சுவர்' என்று சொல்லித் திட்டிக் கொண்டிருக்கிறார்" அதனால்... சொன்னேன்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# பழைய மாணவர் சங்கக் கூட்டம்

யா/அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கக் கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை பாடசாலை மண்டபத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும்.

இக் கூட்டத்தில் இவ் வருடத்திற்கான புதிய நிர்வாகத் தெரிவும் பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பான விடய கலந்துரையாடலும் நடைபெறவுள்ளது என பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (2)

# இலவச கருத்தரங்கு

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் தமிழ் பாடத்திற்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2.30 வரை மீசாலை உயர்கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எனவே குறித்த பாடம் சார்ந்த மாணவர்களை கலந்து கொண்டு பயனடையுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (2-9-29)

# அபிவிருத்தி திட்ட தயாரிப்பு

வலிகாமம் மேற்கு பிரதேச சபையினரால் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித்திட்ட தயாரிப்பு எனும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

இதன்படி நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை வட்டு.மேற்கு ஜே/167 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்களுக்கு முற்பகல் 9 மணி முதல் 11 மணி வரையும் நடைபெறவுள்ளது.

அத்தோடு தொல்புரம் கிழக்கு ஜே/168 கிராம சேவையாளர் பிரிவினைச் சேர்ந்த மக்களுக்கு முற்பகல் 11.30 முதல் பிற்பகல் 1.30 வரை நடைபெறவுள்ளது. (2)

# பங்குனி உத்தர நாள் நிறைவு

கரவெட்டி கிழவி தோட்டம் ஆலயத்தின் கும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை பங்குனி உத்தர நாளில் நடைபெறவுள்ளது.

அன்று பகல் 12 மணியளவில் சுவாமி வீதி வலம் வருவதோடு அபிஷேகம் நிறைவடையவுள்ளதாக ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது. (2-9-10)

# இராசி பலன்

16.03.2014

(பங்குனி 02, ஞாயிற்றுக்கிழமை )

சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு

பூரணை முன்னிரவு 11.32 மணிவரை

பூரம் பிற்பகல் 1.13 மணிவரை

இராகுகாலம் 4.50-6.20 மணிவரை

சுபநேரம் 9.20-10.50 மணிவரை

பூரணை விரதம், சித்தாமிர்தம்

**மேடம்** தாழ்ந்த சுபாவமுண்டு, அஜீரண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்களில் சிறு தாமதங்கள் ஏற்படலாம், புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள்.

**இடபம்** தேவையற்ற சஞ்சலங்கள் ஏற்படலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், கல்வியில் மேன்மையுண்டு, ரோக பயமுண்டு, தேகநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மிதுனம்** மனோ தைரியமுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படலாம், அந்நியர் சந்திப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.

**கடகம்** போசன சுகக் குறைவான நாள், உங்களின் வார்த்தைகளை பலரும் கேட்டு நடக்க முன்வருவர், செலவுகள் அதிகமாகும், மாதர் நட்புண்டு, வேலைச் சுமை கூடும்.

**சிங்கம்** ஜனவசியமுண்டு, சயனசுகமுண்டு, பெரியோர் சந்திப்பால் மனம் மகிழ்வீர்கள், குலதெய்வ வழிபாட்டில் ஈடுபாடு காட்டுவீர்கள், ஆரோக்கியம் சீராக ஆகார த்தில் கட்டுப்பாடு தேவை.

**கன்னி** பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், சோம்பலை விலக்குவது நல்லது, பிதா சிந்தையுண்டு, சுப செலவுகள் செய்து மகிழ்வீர்கள், சயன சுகக்குறைவான நாள், முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**துலாம்** தனதானியச் சேர்க்கையுண்டு, குடும்பத்தில் சந்தோசங்களும் உற்சாகமும் அதிகரிக்கும், கௌரவமான நாள், சயன சுகமுண்டு, உறவினர் வருகையுண்டு, ஆரோக்கியமான நாள்.

**விருச்சிகம்** பெரியோரால் மதிக்கப்படுவீர்கள், ஆரோக்கியமான நாள், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, தூரதேசச் செய்திகளால் உற்சாகம் பெறுவீர்கள்.

**தனுசு** சரீரப் பிரயாசையால் முன்னேற்றம் பெறுவீர்கள், அஜீரணம் சம்பந்தமான கோளாறுகள் ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு, எதிர்பாராத செலவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு.

**மகரம்** இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி உற்சாகம் குறையும், வேலைச்சுமை கூடும், முயற்சிகளில் தடை, தாமதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு, சிலர் கௌரவக் குறைவாக நடந்து கொள்ளலாம்.

**கும்பம்** மனோதைரியமுண்டு, சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, உறவினர் வருகையுண்டு.

**மீனம்** ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கும் எண்ணம் உருவாகும், கௌரவமான நாள், நோய்கள குணமாகும், சத்துரு ஜெயமுண்டு,முயற்சிகள் எளிதில் கைகூடும்.

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 80 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 70 | 60 | 100 |
| தக்காளி | 40 | 40 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 35 | 40 |
| கோவா | 30 | 30 | 40 |
| கரட் | 70 | 80 | 100 |
| பூசணி | 30 | 30 | 40 |
| புடோல் | 40 | 40 | 60 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 40-90 | 40-50 | 80 |
| பெரிய வெங்காயம் | 50-70 | 60-70 | 80 |
| பாகற்காய் | 120 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 90 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 30 | 30 | 40 |
| பயற்றங்காய் | 60 | 50 | 80 |
| லீக்ஸ் | 40 | 60 | 80 |
| பீற்றூட் | 30 | 20 | 40 |
| கறிமிளகாய் | 70 | 60 | 100 |
| முருங்கைக்காய் | 350 | 350 | 400 |
| போஞ்சி | 60 | 60 | 120 |
| கத்தரிதம்புள்ள | 20 | 20 | -- |
| கீரை - 1 பிடி | 10 | 10 | 25 |
| தேசிக்காய் | 40 | 50 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 40 | 35-40 |
| இராசவள்ளி | 70 | 70 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டத்தில் கலந்து கொள்ளாது நகரசபை தவிசாளர் வெளிநடப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளாது சாவகச்சேரி நகரசபை தவிசாளர் வெளிநடப்பு செய்திருந்தார்.

இது தொடர்பில் தவிசாளர் கருத்து வெளியிடுகையில்,


கடந்த 11 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலகத்தில் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் நடைபெறவுள்ளதாக தென்மராட்சி பிரதேச செயலரினால் கடிதம் அனுப்பப்பட்டது.

அக் கடிதத்தின்படி தவிசாளர் கூட்டத்துக்கு சென்றிருந்தார்.

அங்கு தவிசாளருக்கான ஆசன ஒழுங்குகள் முறையாக பின்பற்றப்படவில்லை. கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆசன ஒழுங்குகள் தற்போதும் பின்பற்றப்படவில்லை.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளாகிய தமக்கு மேடைக்கு கீழும் தென்மராட்சி பிரதேச செயலக உத்தியோக மட்டத்தினருக்கு மேடையிலும் ஆசன ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இது மக்கள் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்ட மக்களுக்கான அகௌரவம் என கருதிய நிலையிலேயே சபையில் இருந்து வெளிநடப்பு செய்ததாக கூறினார். (9-29)




# இனத்திற்காக போராடிய வாரிசுகளின் சிந்தனையை திசைதிருப்ப முடியாது

## வ.மா.சபை உறுப்பினர் கஜதீபன் தெரிவிப்பு

**தேசிய விடுதலைக்காகப் போராடிய சுயநிர்ணய உரிமையுடைய ஒரு தேசிய இனத்தின் மக்களை அவ்வினம் சார்ந்த சிந்தனைகளி லிருந்து முற்றுமுழுதாக திசை திருப்பி அவர்களை ஒரு களியாட்ட மயக்க நிலையில் தொடர்ச்சியாக வைத்திருக்க வேண்டும் என்ற சிந்தனையின் வெளிப்பாடே இன்றைய எமது தமிழினத்தின் இளைய தலைமுறையின் மீதான போதைப் பொருள் திணிப்பு, பாலியல் வன்முறைகள் மற்றும் வன்முறை நாட்டத்துக்கான பின்னுதவி வழங்குதல் என்பனவாகும் என வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்துள்ளார்.**

வடமராட்சி பொது அமைப்புகளினால் ஒழுங்கு செய்யப்பட்டு, நெல்லியடி பேருந்து தரிப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பாலியல் வன்முறை மற்றும் போதைப் பொருட்களை தமிழ் இளைஞர்களுக்கு திணித்தலை தடுத்து நிறுத்துதல் என்பவற்றுக்கு எதிரான விழிப்புணர்வு மற்றும் கண்டன ஆர்ப்பாட்டத்தின் போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

எமது பிரதேசம் கலாசார செழுமைமிக்க பிரதேசமாகும். பல காலம் தொட்டே உயரிய கலாசாரத்தை பின்பற்றிவரும் இனமாக நமது தமிழினம் உள்ளது. போருக்கு முன்னர் எமது கலாசாரம் இறுக்கமாகப் பேணப்பட்டது. நடு இரவில் கூட ஒரு பெண் தனியாக பாதையில் செல்லக்கூடிய அளவிற்கு பாதுகாப்பு காணப்பட்டது. தவறு செய்தவர்களுக்கு கடும் தண்டனைகள் வழங்கப்பட்டு சட்டம் ஒழுங்கு திறமையாகப்பேணப்பட்டது.

ஆனால், கடந்த 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் எமது பகுதியில் சட்டம் ஒழுங்கானது திட்டமிட்ட ரீதியில் சீரழிக்கப்பட்டு வருகிறது. சண்டை முடிந்த பின்னரும் இனப்பிரச்சினைக்கான அடிப்படைக் காரணங்கள் எதுவும் தீர்க்கப்படவில்லை. இவ்வாறான நிலையில், இனத்தின் மீதான பற்றுக்கொண்டுள்ள இளையோர்கள், எமது தமிழின விடுதலை சம்பந்தமான செயற்பாடுகளில் ஈடுபடக் கூடாது என்பதற்காக குழுமோதல்கள், போதைப்பொருட்கள், மதுவிடுதிகள், பாலியல குற்றங்களை கண்டும் காணாமலும் விடுதல் எனும் போக்கினை ஆட்சியாளர்கள் திட்டமிட்டு அரங்கேற்றி வருகின்றனர்.

முன்னெப்போதும் கேட்டிராத வகையில, தென்னிலங்கை பாதாள உலக கோஷ்டிகளை ஒத்தவகையிலான ஆவா குழு, டில்லு குழு என்பன இங்கு இயங்கி வருகின்றன. போதைப்பொருட்களின் விநியோகம தாராளமாக காணப்படுகிறது.

இதே வடமராட்சியில் சென்ற வாரமளவில் துன்னாலைப்பகுதியில், ஒரு இளம் பெண், மூன்று பேர் கொண்ட கும்பலினால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். இவ்வாறாக எமது இளம் சமுதாயமானது திட்டமிட்ட வகையில் சீரழிக்கப்பட்டு வருகிறது.

ஆனால், ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன், என்னதான் திட்டமிட்ட ரீதியில் எமது இனத்தையும், இளம் சமுதாயத்தையும் அழிக்க முற்பட்டாலும், தேசிய விடுதலைக்காகப் போராடிய சுயநிர்ணய உரிமையுடைய ஒரு தேசிய இனத்தின் மக்களையும், அதன் தலைமுறையையும் அவ்வினம் சார்ந்த சிந்தனைகளிலிருந்து முற்றுமுழுதாக திசை திருப்பி விடமுடியாது என்பதை நான் அவர்களுக்கு சொல்லி வைக்க விரும்புகிறேன் என்றார். (2-23)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கைத்தொழில் வணிக மன்றத்தின் 32ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு டிறிபேக் கல்லூரியின் மண்டபத்தில் மன்றத் தலைவர் சிறிப்பிரகாஷ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில், பாடசாலை மாணவர்களின் கல்வியை ஊக்குவிப்பதற்கான உதவுத்தொகையும் கணவனை இழந்த மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு நிதி உதவியும் வழங்கப்படவுள்ளது.

அத்தோடு, மன்ற அங்கத்தவர்களில் சேமிப்புத் திட்டத்தில் முன்னணியிலுள்ள அங்கத்தவர்களும் மக்கள் வங்கியின் ஓய்வுநிலை முகாமையாளர் கே.சண்முகலிங்கனும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

தொடர்ந்து இவ்வாண்டிற்குரிய புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறவுள்ளது. (2-9-29)






தேசிய மட்ட பேடன் பவல் தினம் யாழ்ப்பாணக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற போது...

# பொதுக்கூட்டம்

வடமாகாண உள்ளூராட்சி சபையின் கீழுள்ள பொது நூலக நூலகர்கள் மற்றும் பணியாளர்களின் ஒன்றியம் தனது பொதுக் கூட்டத்தினை இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கோண்டாவில் மேற்கு கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள வேதவாராயன சனசமூக மண்டபத்தில் நடத்தவுள்ளது.

இதற்கு பொது நூலகங்களின் நூலகர்கள் மற்றும் நூலக உத்தியோகத்தர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நூலக ஒன்றியத்தின் சங்கானை பொது நூலகத்தலைவர் பா.விஜயகுமார் கேட்டுள்ளார். (2)

# வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய நபருக்கு விளக்கமறியல்

(கரவெட்டி)

வடமராட்சி இராஜ கிராமத்தில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த மாதம் கரவெட்டி இராஜ கிராமத்தில் வட்டிக்கு பணம் கொடுத்தவர் அப்பணத்தை மீளப் பெறச் சென்ற சமயம், வாள்வெட்டிற்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில், வாள்வெட்டை நடத்திய நபர் தலைமறைவாகியிருந்தார்.

குறித்த சந்தேக நபர் கொடிகாமம் கச்சாய் பகுதியில் தலைமறைவாகியிருந்த நிலையில், கடந்த 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரை கடந்த 12 ஆம் திகதி நெல்லியடி பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்திய வேளை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (2-9-60)

## மேலதிகமொழி

# ஆங்கிலம் கற்கும் ஆசிரியர்கள் சமுகம்தரவும்

யாழ்.மத்திய கல்லூரியில் மேலதிக மொழி ஆங்கிலத்தை (ALIC) கற்கின்ற ஆசிரியர்களை இன்று ஞாயிற்றுக்கிழமை 8.30 மணிக்கு இணைப்புநிலையமான யாழ்.மத்திய கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு போதானாசிரியர் வி.வர்ண குலராஜா அறிவித்துள்ளார்.

இம்மாதம் 22 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள இறுதிப் பரீட்சைக்கு தயார்ப் படுத்தும் முகமாக சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை கட்டாயம் கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சனல்-4 காணொலி போலியானது; வாக்குவாதத்தில் பீரிஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**யுத்த நிறைவின் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி முனைப்புக்கள் உதாசீனம் செய்யப்பட்டு வருவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

மூன்று தசாப்தங்களாக நீடித்து வந்த யுத்தம் நிறைவடைந்து நாட்டில் அமைதி ஏற்பட்டுள்ள நிலையில், குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இடம்பெயர் மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளதுடன் முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளித்து அவர்கள் சமூகத்துடன் மீள இணைக்கப்பட்டுள்ளனர்.

இலங்க்கைக்கு எதிரான பல குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அண்மையில் கைது செய்யப்பட்ட ஜெயகுமாரி சம்பவம் தொடர்பில் ஆதாரங்களையே நாம் கவனத்திற் கொள்ள வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றச்சாட்டுக்களை சுமத்துவதற்கு முன்னதாக சரியான தகவல்களை பெற்றுக் கொண்டு அவற்றை ஆராய வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சனல் 4 ஊடகவியலாளர்களுக்கும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிற்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

லண்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுநலவாய நாடுகள் அமைச்சர்கள் செயற்குழுக் கூட்டத்தின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது, இரு தரப்பிற்கும் இடையில் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றுள்ளன.

அண்மையில் சனல் 4 ஊடகத்தினால் வெளியிடப்பட்ட காணொலி உண்மையானது என ஊடக நிறுவனத்தின் கெலும் மக்ரே மற்றும் ஜொனாதன் மில்லர் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

மெய்யான தகவல்களின் அடிப்படையில் காணொலி வெளியிடப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளனர்.

எனினும், இந்த காணொலியானது போலியானது எனவும் ஆதாரங்கள் அற்றது எனவும் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் குற்றம் சுமத்தியுள்ளார். (2)

# தேரர் மீது கத்திக்குத்து

எல்பிட்டிய சரணங்கர விஹாரையின் விஹாராதிபதி வெத்தேவே பஞ்சகீர்த்தி தேரர் இனந்தெரியாதோரின் கத்திக்குத்துக்கு இலக்கான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கூரிய ஆயுதத்தினால் நேற்றுஅதிகாலை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். தாக்குதலுக்கு இலக்கான தேரர் கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில் எல்பிட்டிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (2)


## தேவை

கட்டட நிர்மாணத்துறையில் தேர்ச்சி பெற்றவராயின் (யாழ், கொழும்பு, தெஹிவளை, களனி, கண்டி) மேசன், பெயின்டர், தச்சு, இலக்ரீசன், வெல்டர் (1200/-1500/-) கை உதவியாளர் (900/- 1100/-) தேவை (வயது 18-48) வருகை தரும் நாளிலே வேலைவாய்ப்பு.

(C-6754) தொடர்பு-0775561883


# சங்கானை சந்தை நீர்த்தாங்கி நீர் குடிப்பதற்கு உகந்ததல்ல

## மாற்று நடவடிக்கை செய்து தருவதாக தவிசாளர் தெரிவிப்பு

(மானிப்பாய்)

யாழ். சங்கானை சந்தையின் தாங்கியிலுள்ள நீர் குடிப்பதற்கு உகந்ததல்ல என்பது தெரியவந்ததையடுத்து, குறித்த சந்தையில் வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கு தற்காலிகமாக சங்கானைப்பகுதியிலுள்ள வேறொரு கிணறு ஒன்றிலிருந்து எடுக்கப்பட்ட நீரையே குடிநீர்ப் பாவனைக்கு விடப்பட்டுள்ளதாக வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் தெரிவித்துள்ளார்.

சங்கானைச் சந்தையிலிருக்கும் நீர்த் தாங்கிக்கு நிரப்பப்படும் நீர், மலசலகூடத்திற்கு அண்மையிலுள்ள கிணறு ஒன்றின் மூலமே பெறப்படுவதனால் குடிநீருக்கு உகந்ததில்லையென சங்கானை பிரதேச சுகாதார வைத்தியதிகாரி ரி.மோகனகுமாரினால், வலி.மேற்கு பிரதேச சபையின் தலைவர் நாகரஞ்சினி ஐங்கரன் மற்றும் சபைச் செயலாளர் ஆகியோருக்கு கடந்த வாரம் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

அக்கடிதத்தில் சந்தையிலுள்ள குழாய்கள் மூலம் வரும் நீரை வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் பருக வேண்டாமென்றும், அந்நீரினை ஏனைய தேவைகளுக்கு மட்டும் பயன்படுத்தும் படியும் அறிவித்தலினை பகிரங்கமாக சந்தையின் அனைத்து இடங்களிலும் காட்சிப்படுத்தும் படியும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிலையிலே குடிநீருக்கான நீரை நிரந்தரமாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் அதன் பின்னர் எடுக்கப்படும் முடிவினை தெரியப்படுத்துவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-9-23)


## தொழில் வாய்ப்பு

கொழும்பை அண்மித்த பகுதிகளில் ஏற்றுமதி இறக்குமதி தொழிற்சாலைகள் நிரந்தர வேலைவாய்ப்பு உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில் 17-50 ஆண், பெண் உடன் தேவை. சம்பளம் 18000/- 25000/- 38000/- நண்பர்கள் குழுக்கள் ஒரே தொழிற்சாலைகளில் வருகை நாளிலே வேலைவாய்ப்பு (ஜேம்/ பிளாஸ்டிக்/ காகில்ஸ்/ கோடியல்/ சோயா/ சொக்லெட்/ பால்மா/போத்தல்/தேயிலை/ PVC/ கிளவுஸ் தொழிற்சாலைகள்)

(C-6755) தொடர்புகளுக்கு- 0778430179


# 7 மாகாண வைத்தியசாலைகளுக்கு அம்புலன்ஸ் வண்டி கையளிப்பு

(கொழும்பு)

இலங்கையின் ஏழு மாகாண வைத்தியசாலைகளுக்கு நவீன முதலுதவி வசதிகளுடன் கூடிய 86 அம்புலன்ஸ் வண்டிகளை சுகாதார அமைச்சு கையளித்துள்ளது.

வடக்கு- வடமத்திய- வடமேல்- சப்ரகமுவ- மத்திய- ஊவா மற்றும் கிழக்கு மாகாண வைத்தியசாலைகளுக்கே இந்த அம்புலன்ஸ் வண்டிகள் கையளிக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் வடக்கில் கிளிநொச்சி மாவட்டத்திற்கு 7 அம்புலன்ஸ் வண்டிகளும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 6 வண்டிகளும் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு 5 வண்டிகளும் மன்னார் மாவட்டத்திற்கு 3 வண்டிகளும் கைய ளிக்கப்பட்டுள்ளன.

வடமத்திய மாகாணத்திற்கு 9 வண்டிகளும் வடமேல் மாகாணத்திற்கு 5 வண்டிகளும் சப்ரகமுவ மாகாணத்திற்கு 11 வண்டிகளும் மத்திய மாகாணத்திற்கு 11 வண்டிகளும் கிழக்கு மாகாணத்திற்கு 13 வண்டிகளும் கையளிக்கப்பட்டுள்ளன.

அம்புலன்ஸ்களை கையளிக்கும நிகழ்வு அண்மையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

சுகாதார வாரத்தை முன்னிட்டு சுகாதார அமைச்சு வழங்கியுள்ள இவ் அம்புலன்ஸ் வண்டிகள் ஜப்பான் சர்வதேச கூட்டுத்தாபன அமைப்பின் நிதியுதவியில் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)


## நேரம் நல்ல நேரம்



இலங்கை ரூபவாஹினி நேத்ரா அலைவரிசை நேரடி ஒலிபரப்பில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் கொழும்பு இராஜகிரிய நாவல வீதி ஸ்ரீ மஹாவீர பத்திரகாளி அம்மன் தேவஸ்தான பிரதம சுவாமிகள் ஸ்ரீ வித்யா உபாசகர் சுவாமிகாளி கனகரத்தினம் அவர்களது ***நேரம் நல்ல நேரம்*** என்ற நிகழ்ச்சி நிரலை ஞாயிறு பிற்பகல் 4.00 மணி முதல் 5.00 மணிவரை பார்த்து பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஸ்ரீவித்யா உபாசகர்
சுவாமி காளி கனகரத்தினம்
ஸ்ரீ மஹா வீரபத்திரகாளி அம்மன்
தேவஸ்தானம்
132/ A-1-1 (குருந்துவத்தை)
வெலிகடவத்த றோட், நாவலறோட்
இராஜகிரிய.
தொ.பே.இ. 0112872769,
077 3412562, 0115658145.

(சி-6759)



இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 23 ¼ செவ் 4 ல்<br>உயரம்: 130 cm<br>தகைமை/தொழில்: O/L / கோட்டல் மேற்பார்வையாளர்<br>தொ.இ: B/971 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா: 33உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Dip. in M.L.T, பார்மசிஸ் / அரச தொழில்<br>தொ.இ: G/1364 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 18 ¼ செவ் 7 ல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: பட்டதாரி / UK (Student Visa)<br>தொ.இ: B/972 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 2<br>கி.பா: 19 ¾ செவ் 12 ல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L / வங்கி ஆளணி உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: ஆசிரியர், வைத்தியர் தவிர்ந்த அரச உயர் தொழில்<br>தொ.இ: G/1365 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 1<br>கி.பா: 45 செவ் 12 ல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BSc, MSC – Food & Nutrition / Project Manager (NGO)<br>தொ.இ: B/973 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>கி.பா: 10 ¾உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: HNDM / முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: G/1366 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 1<br>கி.பா: 15 செவ் 2 ல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: BSc /ஆசிரியர்<br>தொ.இ: B/974 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>கி.பா: 44 செவ் 7 ல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA / பட்டதாரி பயிலுநர்<br>தொ.இ: G/1368 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு எதிரான ஜெனீவா பிரேரணை சுற்றுலாத்துறையில் பாதிப்பை ஏற்படுத்தும்

## பொருளாதாரத் துறையினர் கருத்துக்கணிப்பு

ஜெனீவாவில் முன்வைக்கப்பட்டுள்ள இலங்கைக்குஎதிரானயோசனை இலங்கையின் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று பல்வேறு தரப்பினரும் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் இலங்கையின் பொருளாதாரத் துறையினர் முன்னணியாளர்களின் கருத்துக்கள் பெரும்பாலும் ஜெனீவாவின் யோசனை இலங்கையின் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என்றே அமைந்துள்ளன.

சம்பத் வங்கியின் தலைவர் தம்மிக்க பெரேரா- ஜெனீவா தீர்மானம் எவ்வாறு அமைந்திருந்தாலும் இலங்கையில் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள அமைதி சூழ்நிலை வர்த்தகத்துறைக்கும் வியாபிக்கப்பட்டு தொழில் வாய்ப்புக்களும் புதிய தொழில்களும் ஏற்படுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இதன்போதே இலங்கையில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த முடியும். அதேநேரம் எந்த ஒரு சவாலையும் சமாளிக்கமுடியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

லாப்ளிவாயு நிறுவனத்தின் தலைவர் கே.எச்.வேகப்பிட்டிய ஜெனீவா பிரேரணையின் வெளிப்பாட்டினால் இலங்கையின் பொருளாதாரத்துக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார தடை என்ற விடயம் இலங்கைக்கு ஏற்படுத்தப்படமாட்டாது என்ற உறுதிமொழியை இதற்கு காரணமாக கூறமுடியும் என்று வேகப்பிட்டிய கூறியுள்ளார்.

வளர்ச்சியடைந்த நாடுகள் இலங்கையின் மனிதவுரிமை மீறல்களை பற்றிப் பேசுகின்றன. எனினும் அந்த நாடுகள் காலனித்துவ ஆட்சியின் போது மேற்கொண்ட மனிதவுரிமை மீறல்களை யாரும் கவனத்தில் எடுப்பதில்லை என்று வேகப்பிட்டிய குறிப்பிட்டுள்ளார்.

சொப்லொஜிக் குழுமத்தின் தலைவர் அசோக் பத்திரகே இலங்கையில் சிறுபான்மையினருக்கு சம வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு அவர்களுக்கும் பொருளாதாரத்துறையில் வாய்ப்புக்கள் ஏற்படுத்திக்கொடுக்கப்படவேண்டும் என்று கேட்டுள்ளார்.

எனினும் இலங்கையில் உற்பத்தி மற்றும் முதலீட்டாளர்கள் தொடர்பில் அதீத செயற்பாடுகள் அவசியம் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜெனீவா பிரேரணை நிறைவேற்றம் என்ற விடயத்தை பார்த்தால் அது இலங்கையில் இன்று முன்னிலை பெற்றுள்ள சுற்றுலா துறையில் பாதிப்பு ஏற்படும். அதனை தவிர்க்க முடியாது என்று குறிப்பிட்டார். (2)

# இலங்கை பிரச்சினை தொடர்பில் பொ.ந.வா. அமைப்பு எதையும் செய்யவில்லை

## குற்றச்சாட்டை மறுக்கிறார் கமலேஷ் சர்மா

இலங்கை பிரச்சினையில் பொதுநலவாய நாடுகள் அமைப்பு எதனையும் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டை அதன் செயலாளர் கமலேஷ் சர்மா மறுத்துள்ளார்.

லண்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுநலவாய அமைப்பின் அமைச்சர்களின் நடவடிக்கை குழுக்கூட்டத்தின் செயலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் சிறந்த விடயங்களில் ஈடுபட இலங்கை ஊக்குவிக்கப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டு நான் இலங்கை சென்ற போது. பொதுநலவாயம் இலங்கையுடனான ஒரு கூட்டுத்திட்டத்திற்கு இணக்கம் ஏற்படுத்தப்பட்டது.

அது 10 வித்தியாசமான தடங்களை கொண்டது. அதனையும் அதன் முன்னேற்றங்களையும் எமது இணையத்தளத்தில் பார்வையிட முடியும்.

ஒவ்வொன்றும் வித்தியாசமான வேகத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நல்லிணக்கம். சித்திரவதைகள், மனித உரிமை போன்ற கடினமான பிரச்சினைகள் தொடர்பாகவும் உரிய முனைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொதுநலவாய அமைப்பின் முறையில் நாங்கள் பணியாற்றி வருகின்றோம்.

மனித உரிமை மற்றும் சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்தும் தேசிய முயற்சிகளுக்கு நடைமுறை சாத்தியமான உதவிகளை நாங்கள் வழங்கி வருகிறோம்.

பொதுநலவாயத்தின் மதிப்புகளை அமுல்படுத்துவது தொடர்பில் நாங்கள் உறுப்பு நாடுகளை ஊக்குவித்து வருகிறோம்.

பொதுநலவாயம் போதுமான பணிகளை மேற்கொள்ளவில்லை என்பது தவறானது.

நான் கூறியது போல் 10 தடங்கள் உள்ளன. அவற்றை நாங்கள் மேம படுத்தி வருகின்றோம். கடினமான பிரச்சினைகளை நாங்கள் தவிர்க்க முயற்சிக்கவில்லை.

இலங்கையின் மனித உரிமை பிரச்சினைகள் தொடர்பில் நாங்கள் நெருக்கமாக பணியாற்றி வருகின்றோம் என்றார். (2)

# அமெரிக்காவின் மனிதவுரிமை மீறல்கள் குறித்து மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள் கண்டனம்

அமெரிக்கா பலதரப்பட்ட மனித உரிமைத் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டுள்ளதென்றும் கௌடனாமாவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாமல் வருடக்கணக்கில் கைதிகளை தடுப்புக் காவலில் வைத்திருத்தல். ஆளில்லா விமானங்கள் மூலம் குண்டுத் தாக்குதல்கள் நடத்துதல். தேசிய பாதுகாப்பு அமைப்பின் மூலம் நாடுகளை உளவுபார்த்தல், நியாயமற்ற முறையில் மரண தண்டனை நிறைவேற்றுதல், துப்பாக்கிச்சூட்டு வன்முறை சம்பவங்கள் போன்ற மனித உரிமைகள் மீறல்களை அமெரிக்கா செய்துவந்துள்ளதாக அமெரிக்க மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இவற்றுடன் இன ரீதியில் சமத்துவம் இன்மையினால் மக்களை துன்புறுத்தல் போன்ற குற்றங்களைப் புரிந்திருக்கிறதென்றும் ஜெனீவா மனித உரிமை பேரவையின் உச்சி மாநாட்டின் போது அமெரிக்காவுக்கு எதிராக பலத்த கண்டனங்கள் எழுந்துள்ளன.

ஜெனீவாவுக்கான அமெரிக்க தூதுக்குழுவினரை இரண்டு நாட்கள் கேள்வி கேட்கும் பணியை மேற்கொண்ட 18 நிபுணர்களின் கேள்விகளுக்கு அமெரிக்க தூதுக்குழுவினர் பதிலளிக்க முடியாது தலைகுனிந்து இருந்ததாக இந்த விசாரணையை நேரில் பார்த்தவர்கள் அறிவிக்கிறார்கள்.

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு அமைப்பின் கண்காணிப்பு செயற்பாடுகள் எட்வட் ஸ்னோடம் என்ற அமெரிக்க அதிகாரி வெளியிட்ட உண்மைத் தகவல்களினால் அமெரிக்க அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்கள் பற்றிய புதிய தகவல்கள் இப்போது எழுந்துள்ளன.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் அரசாங்கத்தின் நிர்வாகத்தின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்பற்றிய 6 ஆயிரத்து 300 பக்கங்களைக் கொண்ட அறிக்கையில் இவை வெளியிடப்பட்டுள்ளன. அமெரிக்கா 5 வருடங்களுக்கு ஒரு தடவை தனது மனித உரிமை மீறல்கள் பற்றிய கொள்கைகளை மாற்றுகின்ற போதிலும் வருடத்திற்கு வருடம் மனித உரிமை மீறல்கள் அதிகரித்து வருவது பற்றி இந்த அதிகாரிகள் ஜெனீவாவில் சுட்டிக்காட்டினார்கள்.

அமெரிக்காவின் இந்த மனித உரிமை மீறல்களினால் முழு அமெரிக்காவே இன்று வெட்கி தலைகுனிய வேண்டிய் நிலை ஏற்பட்டிருக்கிறது என்று அவர்கள் தெரிவித்தார்கள். அமெரிக்காவின் ஆளில்லா விமானங்கள் அல்கொய்தா சந்தேக நபர்களை தாக்கி படுகொலை செய்வதுடன், அங்கு கைது செய்யப்படும் சந்தேக நபர்களை தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி மூன்றாவது நாடான அல்ஜீரியா போன்றவற்றுக்கு எடுத்துச் சென்று அங்கு படுமோசமான சித்திரவதைக்கு உட்படுத்தப்படுகிறார்கள் என்றும் இந்த நிபுணர்கள் ஜெனீவாவில் அமெரிக்க நிர்வாகத்தின் மீது குற்றம் சுமத்தினார்கள்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இந்த வன்முறைகளைத் தடுப்பதற்கு இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் இந்த நிபுணர்கள் அமெரிக்க அரசாங்கத்துக்கு கண்டனம் தெரிவித்தனர். (2)

# இறந்த நிலையில் திமிங்கலம் கரை ஒதுங்கியது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கடற்கரை பகுதியில் நேற்று காலை திமிங்கலம் ஒன்று இறந்த நிலையில் கரை சேர்ந்துள்ளது.

உண்பதற்கு பயன்படுத்தப்படாத பெரிய சுறா மீன் வகையைச் சேர்ந்த சிறிய திமிங்கலமே இவ்வாறு கரை ஒதுங்கியுள்ளது.

சுமார் 20 அடி நீளமும் 8 அடி விட்டமும் கொண்ட அத்திமிங்கலம் வயது முதிர்ச்சியினால் கடலில் இறந்து சில தினங்களுக்கு பின் கரை ஒதுங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இத் திமிங்கலம் நேற்று நண்பகல் வரை அப்புறப்படுத்தப்படாமையினால் கரையோரப் பகுதியில் துர்நாற்றம் வீசுவது குறிப்பிடத்தக்கது. (2)



தேசிய சேமிப்பு வங்கியின் அச்சுவேலிக்கிளையினால் தரம் 5 இல் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. கௌரவிக்கப்பட்ட மாணவர்களுடன் வங்கியாளர்கள் மற்றும் விருந்தினர்கள் நிற்பதை படத்தில் காணலாம்.

(படம்:- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)


காணி/ வீடு விற்பனைக்கு

காணி விற்பனைக்கு
**பெரியபரந்தன்**
பெரியபரந்தனில் 12 ஏக்கர் நெற் செய்கைக் காணி உடன் விற்பனைக்குண்டு (சிறு போகத்திற்கு இரணைமடு குளநீர் பாய்ச்ச முடியும்)
(A/009)

காணி விற்பனைக்கு
**கொக்குவில்**
கொக்குவில் கிழக்கு கோணாவளை ஒழுங்கையில் 1 3/4 பரப்பு காணி (பிராமணக் குடும்பங்களுக்கு ஏற்ற சூழல்) உடன் விற்பனைக்கு உண்டு.
(A/010)

காணி விற்பனைக்கு
**கொடிகாமம்**
கொடிகாமம் ஐயனார் கோவில் வீதியில் 14 பரப்பு காணி (தென்னை, மா, பனைகளுடன்) உடன் விற்பனைக்கு.
(A/005)

காணி விற்பனைக்கு
**யாழ்ப்பாணம்**
யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் 1 பரப்பு 7 குளி காணி உடன் விற்பனைக்கு.
(A/006)

காணி வீடு விற்பனைக்கு
**கோப்பாய்**
கோப்பாய் வைத்தியசாலைக்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு 2 பரப்பு 16.5 குழி காணியுடன் (தென்னை, மா, பலா, தோடை என பயன் தரு மரங்களுடன்) உடன் விற்பனைக்கு உண்டு.
(A/007)

காணி வீடு விற்பனைக்கு
**திருநெல்வேலி**
திருநெல்வேலி மருத்துவ பீடத்திற்கு அண்மையில் 7 பரப்பு காணியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு (40 தென்னை, மா பயன் தரு மரங்களுடன்) உடன் விற்பனைக்கு உண்டு
(A/008)


றியல் எஸ்ரேற் இல. 50, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
(பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்திக்கும் நீராவியடி பிள்ளையார் கோவிலுக்கும் இடையில்) எனும் முகவரியில்

TP.No: 021 567 1543



பதிவுக் கட்டணம் ரூபா 1000 /-

அலுவலக நேரம் 8.30 - 12.30,
1.30- 5.00 மணிவரை
வெள்ளிக்கிழமை விடுமுறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியின் ஆரம்ப பிரிவு இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் அதிதிகள் வரவேற்கப் படுவதையும் மாணவர்கள் சத்தியப்பிரமாணம் செய்துகொள்வதையும் மாணவர்களின் உடற்பயிற்சி நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள் :- பூந்தோட்டச் செய்தியாளர்)


கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி வித்தியாலய முதல்வர் திருமதி காஞ்சனா சிவகரன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பாண்ட் வாத்தியங்கள்சகிதம் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் மாணவர்களின் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.





யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் மாணவர்களின் அணிநடை நிகழ்வையும் இல்லத்திற்கான வெற்றிக் கேடயம் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் :- மானிப்பாய் செய்தியாளர்)

நிழல்கள்


வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் அண்மையில் இடம்பெற்றன. இந் நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் கு.சிவகுமார் தேசியக் கொடியேற்றுவதையும் மாணவர்களின் பாண்ட் வாத்திய நிகழ்வையும் உடற்பயிற்சியையும் படங்களில் காணலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் மாணவிகளின் பாண்ட் வாத்திய நிகழ்வையும் யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன் மாணவனுக்கு சம்பியன் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள் :- என்.குமார்)

# ரஜினியை புகழும் தீபிகா படுகோனே

ஜோடியாக நடித்தாலும் என்னை ஒரு மகளாகத்தான் பார்த்தார் என்று ரஜினிக்கு புகழாரம் சூட்டியுள்ளார் தீபிகா படுகோனே.

கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் ரஜினி நடிக்கவிருந்த ராணா படத்துக்காக கோலிவுட்டுக்கு அழைத்து வரப்பட்டவர் தீபிகா படுகோனே.


ஆனால்,அந்த படம் கைவிடப்பட்டதால், அதன்பிறகு அவர் கொலிவுட்டுக்கு வர வாய்ப்பே இல்லை என்றுதான் கருதப்பட்டது. ஆனால், ராணாவுக்கு ஏற்கனவே அவருக்கு கொடுக்கப்பட்ட அட்வான்ஸ் இருந்ததால் அவரையே கோச்சடையானுக்கும் பயன்படுத்திக்கொள்ள திட்டமிட்டார் சௌந்தர்யா.

கொலிவுட்டில் முதல் படத்திலேயே சுப்பர் ஸ்டார் நடிகருடன் நடித்து விட்ட பெருமையை பெற்றிருக்கிறார் தீபிகா.

இந்நிலையில், நேற்று கோச்சடையான் ஓடியோ விழாவுக்கு தீபிகா மங்களகரமாக வந்திருந்தார்.

தலை நிறைய பூ வைத்து புடைவை கெட்டப்பில் வந்து அனைவரையும் கவர்ந்த தீபிகாபடுகோனேஇ மேடையில் பேசும்போதுஇ இந்த படத்தில் நான் ரஜினிக்கு ஜோடியாக நடித்திருக்கிறேன். என்றாலும், அவர் என்னை"ஒரு மகளைப்போல்தான் பார்த்தார்.

இருப்பினும் ரஜினியின் நாயகி என்ற பெருமையுடன் தமிழக ரசிகர்களை சந்திக்க வருவது எனக்கு பெரிய மகிழ்ச்சி அளிக்கிறது. எனக்கு தமிழக ரசிகர்கள் ஆதரவு தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.



# சுதந்திரமாக வெளியாகும் சூர்யாவின் அஞ்சான்



சுதந்திர தினத்தன்று 'அஞ்சான்' திரைப்படம் வெளியாகவுள்ளது. லிங்குசாமி இயக்கத்தில் சூர்யா, சமந்தா, வித்யூத், விவேக் மற்றும் பலர் நடித்து வரும் படம் "அஞ்சான்". மும்பையில் தொடங்கப்பட்ட இப்படத்தின் படப்பிடிப்பு தொடர்ச்சியாக நடைபெற்று வந்தது.

இப்படத்தினை வெளியிட இருக்கும் யு.டிவி நிறுவனத்தின் தென்னிந்திய பொறுப்பாளர் தனஞ்செயன் தனது ட்விட்டர் தளத்தில் அஞ்சான படப்பிடிப்பு தளத்தில் இயக்குநர் லிங்குசாமியிடம் நீண்ட நேரம் உரையாடினேன். ஓகஸ்ட் 15ஆம் திகதி அஞ்சான் வெளியாகும். பெரிய பட்ஜெட் படம என்பதால பணிகளை துரிதப்படுத்தி இருக்கிறோம்.

மேலும் "அஞ்சான்" படப்பிடிப்பு இன்னும் 30 நாட்களுக்கு மும்பையில் நடைபெறும். அத்தோடு படத்தின் 80 வீத படப்பிடிப்பு முடிந்து விடும். ஏப்ரல் 14ஆம் திகதி முதல் மீதமுள்ள படப்பிடிப்பு இருக்கும்.

தமிழ் புத்தாண்டு அன்று அஞ்சான்" படத்தின் ஃபர்ஸ்ட் லுக் வெளியாகும். எங்களது அடுத்த வெளியீடான "நான் சிகப்பு மனிதன்" படத்துடன் "அஞ்சான்" டீஸரை இணைக்க முயற்சிகள் செய்து வருகிறோம் என்று கூறியுள்ளார்.


# ரோமானிய அழகியை மணக்கும் சல்மான்கான்

ரோமானிய அழகி லூலியாவை,மணக்கவிருக்கிறார் சல்மான்கான். பாலிவுட்டில் 48 வயதை தொட்டாலும் இன்னும் பெண்களின் கனவு நாயகனாகவே வலம் வருகிறார் சல்மான்கான். இந்நிலையில் ரோமானிய அழகி லூலியா வந்தூருக்கும், சல்மான் கானுக்கும் காதல் மலர்ந்துள்ளதாக செய்திகள் வெளியானது.

இருவரும் அடிக்கடி சந்தித்து காதலை வளர்ப்பதாகவும் கூறப்பட்டது. மேலும் லூலியாவை திருமணம் செய்து கொள்ள சல்மான்கான் திட்டமிட்டு உள்ளார். இதனை சமீபத்திய பேட்டியொன்றில் மறைமுகமாக குறிப்பிட்டார். இதுகுறித்து அவர் கூறியதாவது, என் வாழ்க்கை இப்போது திடீர் பிரகாசமாகியுள்ளது. 15 வயதில் இருந்து இது போன்ற கால கட்டம் எனக்கு அமைந்தது இல்லை. முதல் தடவையாக இந்த மாற்றத்தை அனுபவிக்கிறேன்.விரைவில் என் வாழ்வில் நல்ல விடயம் ஒன்று நடக்கப்போகிறது. மனித நேயத்தை நான் பின்பற்றுகிறேன். முஸ்லிம், கிறிஸ்தவ மதங்க்ளையும் பின்பற்றுகிறேன்.

மேலும் எனது தந்தை பதான் சமூகத்தை சேர்ந்தவர். தாய் இந்து. இரண்டாவது அம்மா கத்தோலிக்க மதம், மைத்துனர் பஞ்சாபி எனது மனைவியை வெளியே இருந்து கொண்டு வர நினைக்கிறேன் என்று கூறியுள்ளார்.

# காமெடி நடிகர் பாலாஜி திடீர் மரணம்




சின்னத்திரை மற்றும் வெள்ளித்திரை காமெடி நடிகர் பாலாஜி கடந்த வாரம் திடீர் மரணம் அடைந்தார்.

சின்னத்திரையில் லொள்ளு சபா நிகழ்ச்சி மூலம் பிரபலமானவர் பாலாஜி. இவரை லொள்ளு சபா பாலாஜி என்று அழைத்தனர்.

மேலும் சுப்பர் டென் நிகழ்ச்சியிலும் நடித்துள்ளார். காமெடி நடிகர் சந்தானத்தை தொலைக்காட்சியில் அறிமுகப்படுத்திய இவர். சிலம்பாட்டம், திண்டுக்கல் சாரதி உட்பட 50க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார்.

சிவா நடித்த தில்லு முல்லு படத்துக்கு காமெடி வசனம் எழுதியுள்ளார்.இந்நிலையில் அனகாபுத்தூரில் குடும்பத் துடன் வசித்து வந்த இவருக்கு மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டது.

இதற்காக சிகிச்சை பெற்று வந்தார். அன்று அதிகாலை இவரது உடல் நிலை மோசமானதால் உடனடியாக மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலன் இன்றி காலை 8 மணிக்கு மரணம் அடைந்தார். பாலாஜிக்கு மனைவியும் 3 குழந்தைகளும் உள்ளனர்.




கல்லிலே கலை வண்ணம் கண்டான்: காஞ்சித் தலைவன் படத்தில் பானுமதி அதிசயிக்கும் விதத்தில் சிற்பம் வடிக்கும் எம்.ஜி.ஆர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் நலன் காக்கும் அரசாக நரேந்திரமோடி அரசு திகழவேண்டும்



## —வைகோ முழக்கம்—

**கூட்டாட்சி கொள்கை, மதச்சார்பற்ற தன்மை, சமூக நீதி, ஈழத் தமிழர் நலன் காக்கும் அரசாக நரேந்திரமோடி அரசு திகழ வேண்டும் என வைகோ முழக்கமிட்டார்.**

புதுடில்லியில் தல்கோட்ரா உள்விளையாட்டு அரங்கத்தில், நேற்று முன்தினம் வழக்குரைஞர் ராம் ஜெத்மலானி தலைமையில், நரேந்திரமோடிக்காக வழக்குரைஞர்கள் மாநாடு நடைபெற்றது.

இந்நிகழவில் வைகோ பங்கேற்று உரையாற்றுகையில்,

புகழால் உயர்ந்த சிகரங்களை ஒருவர்அடையவேண்டுமெனில், 'சகாக்கள் தூங்கும் போதும், கண் விழித்துக் கடுமையாக உழைப்பதனால மட்டுமே உயர முடியும்' என்று கவிஞர் லாங் பெல்லோ பாடினார்.

நரேந்திர மோடி இத்தகைய கீர்த்தியை அடைந்ததற்கு அவரது கடுமையான உழைப்பும், மக்களுக்காக செய்த் அர்ப்பணிப்புச் சேவையும், அஞ்சாத துணிச்சலும், பொதுவாழ்வில்எவரும்குற்றம் சொல்ல இயலாத நேர்மையுமே காரணம் ஆகும்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் இதுவரை சுதந்திர இந்தியாவில் ஏற்படாத ம்டிவுகளாக நம் கதவைத் தட்ட காத்திருக்கின்றன.

ஊழல் மயமாகி விட்ட ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசை நடத்தும் காங்கிரஸ் கட்சி படுதோல்வி அடையப்போகிறது.

அக்கட்சிக்கு இந்தியா முழுவதும் இரட்டை இலக்க வெற்றிதான் கிடைக்கும்.

மறுமலர்ச்சி பெறுகிற இந்தியாவாக, புதிய விடியல் காணும் இந்தியாவாக, நரேந்திரமோடி அமைக்கின்ற அரசு வார்ப்பிக்கும் என நம்புகிறேன்.

அமையப் போகும் மோடி அரசு, நாட்டில் சமூக நீதியை நிலைநாட்ட வேண்டுகிறேன்.


தமிழ் நாட்டு மக்களைப் பொறுத்தமட்டில், காங்கிரஸ் கட்சியை ஒருபோதும் மன்னிக்க மாட்டோம். இலங்கை தீவில் இலட்சக்கணக்கான தமிழர்களை, அந்நாட்டு அரசு இனப்படுகொலை செய்வதற்கு ஆயுதங்களை வழங்கி அனைத்து உதவிகளையும் செய்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசை அதற்குத் தலைமையேற்ற காங்கிரஸ் கட்சியை தமிழர்கள் மன்னிக்கமாட்டார்கள்.

அடல் பிஹாரி வாஜ்பாய் தலைமை அமைச்சராக இருந்தபோது,

'இலங்கை தீவில் உள்ள ஈழத் தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசுக்கு இந்திய அரசு எந்த உதவியும் செய்யாது, ஆயுதங்களையும் விற்காது' என்று அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பிரகடனம் செய்தார்.

நாளை மலரப் போகின்ற நரேந்திர மோடி அரசு, ஈழத் தமிழர் பிரச்சினையில் வாஜ்பாயின் அணுகுமுறையை பின்பற்ற வேண்டுகிறேன்.

நரேந்திரமோடிக்கு வெற்றி! தேசிய ஜனநாயக கூட்டணிக்கு வெற்றி! அதை அடைவதே நமது இலக்கு! என வைகோ கூறினார்.(2)





வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்மன் ஆலய மஹோற்சவ திருவிழாவின் போது...

## வரலாறு காணாத அளவிற்கு நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி

### அனுரகுமார தெரிவிப்பு

வரலாறு காணாத அளவிற்கு நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது என ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மஹிந்த ஐயாவின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்துள்ளதாம். அதிசயமான வளர்ச்சி இது.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் இல்லை. ஆனால் பொருளாதாரம் வளர்ச்சியடைந்துள்ளது.

நாட்டின் கல்வி வீழ்ச்சியடைந்துள்ளது, சுகாதார சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்திடம் இப்போது பணமில்லை. எல்லா விடயங்களுகதும்வரியை அறவீடு செய்து அதன் மூலம் ஆட்சி நடத்த அரசாங்கம் முயற்சிககின்றது.

மத்திய கிழக்கு நாடுகளில் பத்து ஆண்டுகளுக்கு முன்னதாக ரொட்டியின் விலை எவ்வாறு இருந்ததோ அதே நிலைமை காணப்படுகின்றது.

எனினும், இலங்கையில் எல்லா பொருட்களின் விலைகளும் உயர்த்தப்பட்டுள்ளன.

ஒரு கிலோ பால இறக்குமதி செய்யும் போது விலை 350 ரூபா, அதற்கான வரி 400 ரூபாவாகும்.

வரி அறவீடுகளுக்கு மேலதிகமாக அபராதங்களும் விதிக்கப்படுகின்றன.

இன்று இவ்வளவு ரூபா அபராதம் விதிக்க வேண்டுமென உத்தரவிட்டே பொலிஸார் வீதிகளில் இறக்கப்படுகின்றனர் என அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (2)

## கொலைக்குற்றம் நிரூபிக்கப்பட்டு நீதிமன்றம் மரண தண்டனை விதிப்பு

(கொழும்பு)

அநுராதபுரம் மேல் நீதிமன்றம் குற்றவாளி ஒருவருக்கு மரண தண்டனை விதித்துள்ளது.

கொலைக்குற்றம் நிரூபிக்கப்பட்ட ஒருவருக்கு அநுராதபுரம் மேல் நீதிமன்றம் மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

அநுராதபுரம் அலுத்வெவ பிரதேசத்தைச் சேர்ந்த 61 வயதான நபருக்கு இந்த மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2003 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 14ஆம் திகதி அல்லது அதற்கு அண்மைய தினம் ஒன்றில் அநுராதபுரம் ஸ்ராவஸ்திபுர பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரை கூரிய ஆயுதம் ஒன்றினால் குத்திக் கொலை செய்த குற்றவாளிக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

கொலைச்சம்பவம் தொடர்பான ஆரம்ப விசாரணைகள் அநுராதபுரம் நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்றதுடன் மேலதிக விசாரணைகள் மேல் நீதிமன்றத்தில் நடத்தப்பட்டன.

குற்றவாளிக்கு எதிராக சட்டமா அதிபர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார்.

நீண்டகால விசாரணைகளுக்கு பின்னர் வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டவர் கொலை செய்திருப்பது உறுதியானதை அடுத்து அவருக்கு நீதிபதி சுனந்த குமாரரத்நாயக்க மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார். (2)

## மலேசிய வானூர்தியை கண்டுபிடிக்க உதவிகள் வழங்கத்தயார்-இலங்கை

மலேசிய விமானத்தை கண்டுபிடிக்க உதவிகளை வழங்கத் தயார் என இலங்கையின் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

கோரிக்கை விடுக்கப்பட்டால் எந்த வகையிலான உதவிகளையும் வழங்கத் தயார் என வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மலேசிய விமான சேவை நிறுவனத்திற்கு சொந்தமான இந்த விமானத்தில் 239 பயணிகள்பயணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்து சமூத்திரத்தின் ஆழ கடலில் இந்த விமானம் வீழ்ந்திருக்கக் கூடுமென அச்சம வெளியிடப்பட்டுள்ளது.

எனினும் இந்த விமானம் பற்றிய சரியான விபரங்கள் எதுவும் இதுவரையிலும் வெளியிடப்படவில்லை. (2)

## ஜெனீவாவில் பேசிக்கொள்ளாத பீரிசும் மஹிந்த சமரசிங்கவும்

ஜெனீவாவிற்கு விஜயம் செய்துள்ள வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் மஹிந்த சமரசிங்க ஆகியோர் பேசிக்கொள்வதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

இவ்வாறான ஓர் நிலை [illegible] முடியும்.

அமைச்சர் பீரிஸ் ஜெனீவா சென்று பொய்யுரைத்துள்ளார்.

வெலிவேரிய சம்பவம் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

வெலிவேரிய பிரதேசத்தில் குடிநீர் தொடர்பான போராட்டம் ஒன்று நடைபெற்றது. அதன் போது கலகம் ஏற்படுவதனைத் தடுக்க இராணுவத்தை அனுப்பி வைத்தோம். இராணுவத்தின் தன்னியக்க துப்பாக்கிகளை சிலர் கைப்பற்ற முயற்சித்த போது ஏற்பட்ட மோதலில் சில பொது மக்கள் உயிரிழந்தனர் என அமைச்சர் பீரிஸ் பதிலளித்துள்ளார்.

இந்த பதில் முற்று முழுதான ஓர் பொய்யாகும். இவவாறான பாரிய பொய்களையே ஜீ.எல். தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகத்துடன் மோதிக்கொள்ளும் ஓர் அரசாங்கத்தை நாம் விரும்பவில்லை.

அரசாங்கம் எல்லா விடயங்களிலும் தன்னிச்சையான போக்கைப் பின்பற்றி வருகின்றது. இதனை ஓர் ஆரோக்கியமான நிலைமையாக கருத முடியாது.

அரசாங்கத்தின் ஜனநாயக விரோத செயற்பாடுகளினால் இந்த நாடு பாதகங்களை எதிர்நோக்க நேரிடும் என லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

749

## வெயிலும் நிழலும்


...வாழ்க்கையில் பொற்காசுகளையே பார்த்திராத அவன் ஒரே சமயத்தில் நூறு பொற்காசுகள் கிடைக்கும் என்ற அறிக்கை அவன் ஆசையைத் தூண்டியது. அந்தத் தொகை மட்டும் கிடைத்தால், அவனுடைய ஏழ்மை பரிபூரணமாக விலகிவிடும்.

அதைப்பற்றி அவன் தன் மனைவியிடம் விவாதித்தபோது, அவள், "நமக்குப் பக்கத்து வீட்டில் சில நாட்களுக்கு முன் குடிவந்து இருக்கும் வீரேந்திரனைக் கேட்டுப் பாருங்களேன்!

அவன் அதிபுத்திசாலியாகக் காணப்படுகிறான். அவன் நிச்சயம் இதற்கு ஏதாவது ஒருவழி கூறுவான்" என்றாள்.

அவ்வாறே அவன் தன்னுடைய பக்கத்து வீட்டுக்காரனான வீரேந்திரனை யோசனை கேட்டவுடன் அவன் உடனே, "அது ஒன்றும் கஷ்டம் இல்லையே! நீ ஒரு நாற்காலியை அல்லது சோபாவைத் தலைக்கு மேல் சுமந்து போ! உன் மேல் வெயில்படாது!" என்று வீரேந்திரன் கூறினான்.

"ஆகா! என்ன அருமையான யோசனை? இது ஏன் யாருக்குமே தோன்றவில்லை!" என்று மகிழ்ச்சியுடன் கூவிய அந்த ஏழை, "நான் நீ கூறியவாறு நாளைக்கே தலைநகர் ஆக்ராவிற்குச் செல்லப் போகிறேன்" என்றான்.



அவ்வாறே மறுநாள் கிளம்பிய அவன் தலைக்குமேல் ஒரு சிறிய சோபாவைத் தூக்கிக்கொண்டு கால்நடையாகவே அக்பரின் தர்பாரை அடைந்தான்.

"பிரபு! குடை இல்லாமலே கொளுத்தும் வெயிலில் என் கிராமத்தில் இருந்து இங்கு கால்நடையாக வந்துதிருக்கிறேன்!" என்று பரபரப்புடன் அறிவித்தான்.

"சபாஷ்! யாருக்குமே தோன்றாத இந்த யோசனை உனக்கு மட்டும் எப்படித் தோன்றியது?" என்று அக்பர் ஆவலுடன் கேட்டார்.

"பிரபு! உண்மையில் எனக்கு இந்த யோசனையை சொல்லிக் கொடுத்தது என் பக்கத்து வீட்டுக்கார வீரேந்திரன்!" என்றான் ஏழை!

அது பீர்பால் தான் என்று யூகித்துக் கொண்ட அக்பர் தன் திட்டம் பலித்ததையெண்ணி மிக மகிழ்ச்சியுற்றார்.

நான் அறிவித்தபடியே உனக்கு நூறு பொற்காசுகள் தருகிறேன். அந்தப் பணத்தை உன் கிராமத்திற்கு பத்திரமாக எடுத்துச் செல்ல உன்னுடன் இரு காவலர்களையும் அனுப்புகிறேன்.

நீ உன் வீட்டை அடைந்ததும், அந்த புத்திசாலி வீரேந்திரனை காவலர்களிடம் ஒப்படைத்து விடு!" என்றார்.

அவ்வாறே மிக்க மகிழ்ச்சியுடன் அந்த ஏழை இருவீரர்களின் துணையுடன் தன் வீட்டை அடைந்தான்.

அவன் அடையாளம் காட்டிய வீரேந்திரனைக் காவலர்கள் தங்களுடன் அழைத்துக்கொண்டு ஆக்ரா திரும்பினர்.

தர்பாரில் நுழைந்த வீரேந்திரன் தன் முகத்தை ஒரு பையினால் மூடிக் கொண்டு வந்தான்.

"வீரேந்திரா! உன் முகத்தை ஏன் மூடிக் கொண்டிருக்கிறாய்? பையை அகற்று!" என்றார் அக்பர்.

"பிரபு! நான் வீரேந்திரன் இல்லை! நான்தான் பீர்பால்! உங்கள் முகத்தில் இனி நான் விழிக்கக் கூடாது என்ற உங்கள் கட்டளைப்படியே நான் எனது முகத்தை மூடிக்கொண்டு வந்து உள்ளேன்!" என்றான்.

"பீர்பால்! உன் முகத்தை நான் இப்போதே பார்க்க விரும்புகிறேன்! இதுவும் என் கட்டளையே!" என்று கூறிய அக்பர் தானே முன்சென்று பையை அகற்றி விட்டு, பீர்பாலை மிகுந்த பிரியத்துடன் கட்டித் தழுவிக் கொண்டார்.

(முற்றும்)

03.2014
16

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- கிமு 597 - பாபிலோனியர்கள் ஜெருசலேமைக் கைப்பற்றினர்.
- 1190 - சிலுவைப் படையினர் (Crusaders) யோர்க் நகரின் யூதர்களைப் படுகொலை செய்ய ஆரம்பித்தனர். பல யூதர்கள் தற்கொலை செய்து கொண்டனர்.
- 1521 - மகலன் பிலிப்பைன்சை அடைந்தான்.
- 1792 - சுவீடன் மன்னன் மூன்றாம் குஸ்டாவ் சுடப்பட்டான்.
- 1926 - மசாசுசெட்சில் ராபர்ட் கொடார்ட் என்பவர் முதலாவது திரவ-எரிபொருளினால் உந்தும் ஏவுகணையை செலுத்தினார்.
- 1939 - பிராக் அரண்மனையில் இருந்து ஹிட்லர் பொஹேமியா, மொராவியாவை ஜேர்மனியின் ஒரு பகுதியாக அறிவித்தார்.
- 1942 - முதலாவது வி-2 ஏவுகணை ஏவப்பட்டது (ஏவப்பட்ட உடனேயே வெடித்துச் சிதறியது).
- 1945 - இரண்டாம் உலகப் போர்: இவோ ஜீமா சண்டை முடிவுக்கு வந்தது.
- 1962 - மேற்கு பசுபிக் பெருங்கடலில் அமெரிக்க விமானம் 107 பயணிகளுடன் காணாமற்போனது.
- 1966 - ஜெமினி 8, நாசாவின் 12 ஆவது மனிதரைக் கொண்டுசென்ற விண்கலம், ஏவப்பட்டது.
- 1968 - வியட்நாம் போர்: மை லாய் என்ற இடத்தில் பெண்கள், குழந்தைகள் உட்பட 350 முதல் 500 வரையிலான வியட்நாமியர்கள் அமெரிக்கப் படையினரால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1985 - அசோசியேட்டட் பிரஸ் ஊடகவியலாளர் டெரி ஆண்டர்சன் பெய்ரூட் நகரில் கடத்தப்பட்டார். இவர் பின்னர் டிசம்பர் 4, 1991 இல் விடுதலை ஆனார்.
- 1988 - ஈராக்கில் குருதிய நகரான ஹலப்ஜாவில் நச்சு வாயுத் தாக்குதலில் பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.
- 2006 - மனித உரிமைகளுக்கான ஐ.நா அமைப்பை உருவாக்குவதற்கு ஐ.நாவின் பொதுச்சபை ஆதரவாக வாக்களித்தது.


### பிறப்புக்கள்

- 1751 - ஜார்ஜ் மாடிசன், ஐக்கிய அமெரிக்காவின் 4ஆவது குடியரசுத் தலைவர் (இ. 1836)
- 1789 - கியோர்க் ஓம், ஜேர்மனிய இயற்பியலாளர் (இ. 1854)
- 1839 - ரெனே சளி-புரூடோம், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் (இ. 1907)
- 1918 - பிரெடெரிக் ரெயின்ஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ. 1998)
- 1929 - இரா. திருமுருகன், தமிழறிஞர்
- 1953 - ரிச்சர்ட் ஸ்டால்மன், கட்டற்ற மென்பொருள் இயக்கம், க்னூ திட்டம் போன்றவற்றின் தோற்றுவிப்பாளர்.

### இறப்புக்கள்

- 1914 - சார்ல்ஸ் கோபட், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1843)
- 1935 - ஜோன் மாக்லியட், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1876)
- 1940 - செல்மா லாகர்லோஃப், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் (பி. 1858)
- 1945 - எம். ஜே. லெகொக் அடிகளார், அருட்தந்தை (பி. 1880)
- **1989 - அழ.வள்ளியப்பா குழந்தை இலக்கிய கவிஞர் (பி. 1922)**
- 1998 - டெரெக் பார்ட்டன், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1918)

### அழ. வள்ளியப்பா



அழ. வள்ளியப்பா புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள இராயவரத்தில் 1922 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்த அழகப்ப செட்டியார், உமையாள் ஆச்சி தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார்.

இவர் குழந்தை இலக்கியங்கள் படைத்த மிக முக்கியமான கவிஞர். 2,000 க்கும் மேலான குழந்தைகளுக்கான பாடல்கள் எழுதியுள்ளார்.

இவர் இராயவரம் காந்தி ஆரம்பப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு வரை படித்தார். பின்னர் இராமச்சந்திரபுரத்தில் உள்ள பூமீசுவர சுவாமி இலவச உயர்நிலைப் பள்ளியில் படித்தார்.

தொடர்ந்து படிக்க முடியாததால் 1940 ஆம் ஆண்டில் வாழ்வாதாரம் தேடி, வை. கோவிந்தனின் சென்னை சக்தி பத்திரிகை அலுவலகத்தில் காசாளராகச் சேர்ந்தார்.

அப்போது சக்தி ஆசிரியராக இருந்த தி.ஜ.ர.வின் ஊக்குவிப்பின் காரணமாக சக்தி இதழிலேயே எழுத ஆரம்பித்தார். "ஆளுக்குப் பாதி" என்னும் தம் முதல் கதையை எழுதினார்.

1941 இல் சக்தியில் இருந்து விலகி இந்தியன் வங்கியில் சேர்ந்தார். வங்கிப் பணியில் இருக்கும்போதே பாலர் மலர், டமாரம், சங்கு ஆகிய செயதித் தாள்களுக்கு கௌரவ ஆசிரியராகப் பணியாற்றினார்.

1951 முதல் 1954 வரை பூஞ்சோலை என்ற இதழுக்கும், கல்கி வெளியீடான கோகுலம் என்ற இதழிலும் ஆசிரியராக இருந்தார்.

குழந்தை எழுத்தாளர்கள் பலரைத் திரட்டி 1950 இல் குழந்தை எழுத்தாளர்கள் சங்கம் என்ற அமைப்பை உருவாக்கினார். சக்தி வை.கோவிந்தன் இச்சங்கத்தின் முதல் தலைவராக இருந்தார். அவரைத் தொடர்ந்து வள்ளியப்பா இந்த அமைப்பின் காரியதரிசியாகவும், தலைவராகவும், வழிகாட்டியாகவும் பல பொறுப்புகளை ஏற்றுச் செயற்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

....விபூதிப் பிரசாதம் வழங்கப்படு கிறது. நம்ம ஊர் போல் நகத்தால் கிள்ளித் தரவில்லை. கை நிறைய அள்ளித் தருகின்றனர். அடுத்த முறை வரும் வரை அணிந்து கொள்ள வேண்டுமல்லவா.

சுந்தர மகாலிங்கம் ஆலயத்தில் தின சரி நான்குகால பூஜை நடந்து வருகி றது. காலை சந்தி 6.00 மணி. உச்சிகாலம் நண்பகல் 12.00 மணி. சாயரட்டை மாலை 4.00 மணி. அர்த்தசாமம் மாலை 6.00 மணி அளவில் தவறாமல் நடத்துகின் றனராம்.

நித்திய பூஜைகள் இவ்விதமிருந்தா லும் அமாவாசை தோறும் பிற்பகல் ஒரு மணியளவில் சுந்தர மகாலிங்கத் திற்கு அபிஷேகம் துவங்கும். சுமார் மூன்று மணி நேரம் நிகழும் இந்த அபிஷேகத்திற்குப் பிறகே சந்தன மகா லிங்கருக்கு அபிஷேக ஆராதனைகள் எல்லாம்.

அடுத்து சந்தன மகாலிங்கரைத் தரி சிக்க ஆயத்தமாகிறோம்,


, அதற்குமுன் எங்களிடமிருந்து தியாகராசன் விடை பெற்றுக்கொள் கிறார். என்ன இவரை நம்பி இத்தனை தூரம் வந்துவிட்டோம். இப்போ கீழே திரும்பப் போகிறேன் என்கிறாரே! சற்று மனக்கலக்கமாகத்தான் இருந்தது. முன்பின் தெரியாத ஊருக்கு வழிகாட் டியாக அனுபவப்பட்டவர் ஒருவர் கூட இருப்பது எவ்வளவு பெரிய தெம்பா யிருந்தது.

தான் மதுரையில் முட்டை வியா பாரம் செய்வதாகவும், காலையில் கடை திறக்க வேண்டுமென்பதற்காக இப் பொழுதே திரும்ப வேண்டும் என்றார்.

நாங்களும் அவருக்கு விடை கொடுத் தோம்.

### சதுரகிரி

மகாலிங்க மலையைப் பொறுத்த மட்டில் எந்த ஒரு சூழ்நிலையிலும் மகா லிங்கர் யாரையும் தனியாக விடமாட் டார் என்றும் வழித்துணைக்கு யாரை யாவது ஒருவரை உடன் அனுப்புவார் என்றும் கூறியிருந்ததால், எப்படியாவது யாரையாவது மகாலிங்கர் வழித்துணை க்கு அனுப்புவார் என்ற நம்பிக்கையு டன் கீழே படியிறங்க ஆரம்பித்தோம்.



ஸ்ரீ சந்தனமகாலிங்கர் சன்னதி

அப்பொழுதுதான் அந்த ஆச்சரியம் நிகழ்ந்தது. ஆம் கோரக்கர் குகையில் சந்தித்த அந்தப் பெண்மணி, உமா வழி யில் எதிர்ப்பட்டார். எங்களுக்குத் தெம்பு வந்தது.

நாளைய பயணத்துக்கு ஒரு வழிகாட்டி கிடைத்துவிட்ட மகிழ்ச்சி.

போய் சந்தன மகாலிங்கரைத் தரிசித்து வாருங்கள். நான் இங்கேயே இருக்கிறேன் என்று தான் காத்திருக்கும் இடத்தைத் தெரிவித்து வழியனுப்பினார் உமா.

நாங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம்.

### ஸ்ரீ சந்தன மகாலிங்கர் தரிசனம்

சந்தன மகாலிங்கர் கோயி லுக்குப் போவதற்கு கோரக்கர் வழிகாட்டுகிறார்.

".....சுந்தர மகாலிங்க சுவாமி கோயிலுக்கு வடபக்கம் போகிற பாதை வழியே கூப் பிடுதூரம் போனால் அங்கொரு ஆறு வருகிறது. அந்த ஆற்றைக் கடந்து வடப்பக்கம் போகிற பாதை வழியே போனால் அம்பு விடு தூரத்திற்கப்பால் அந்தப் பாதையானது மேற்கு முகமாகச் செடிகளடர்ந்த காட் டுக்குள் போகும்.

அதைக் கடந்து அரை நாழிகை வழி தூரம் போனால் பெரிய காவு இருக் கிறது. அந்தக் காவுக்குள் நுழைந்து அரை நாழிகை வழி தூரத்தில் சந்தன மகாலிங்க சுவாமி கோயில் இருக்கி றது.

அந்தக் கோயிலுக்கு வடபக்கம் காளி

**ஆன்மீகம் 63**

கானலிலிருந்து ஓடை போல தீர்த்தம் விழுந்து கொண்டிருக்கிறது. அதில் தீர்த்தமாடி சுவாமியைத் தரிசித்துக் கொள்ளவும். இந்தச் சந்தன மகா லிங்கத்திற்கு மானிடர் பூஜை கிடை யாது.

தேவரிஷி முனிவர்கள் பூஜைதான் எக்காலமும் நடந்து கொண்டே வரு கிறது. அந்தச் சந்தன மகாலிங்கத்திற் குத் தென்மேற்கு மூலையாகக் கூப் பிடு தூரத்தில் சட்டை முனிவர் குகை இருக்கிறது.

சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே மலைவாகடத்தில் விவரித்த அமைப்பு இன்னும் மாறாமல் ஏறத் தாழ அப்படியே இருப்பது ஆச்சரிய மாகத்தான் இருக்கிறது.

அவர் சொல்லும் அடர்ந்த வனம், காளிஓடை, சந்தன மகாலிங்கர் கோயில், சட்டை நாதர் குகை எல்லாம் அப்படி யேதான் இருக்கிறது. சூழல் மட்டும் காலத்துக்குத் தகுந்தவாறு மாறியிருந் தது.

மீண்டும் ஒரு மலையேற்றம். பொழுது இருட்டிக் கொண்டு வந் தது.

(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்



**75**

...நாடே வியந்தது. கார ணம்- ஒரு மதத்தினர் இன்னொரு மதக் கோயி லிலும் பிரார்த்தனை செய்தனர்.

பிரார்த்தனைகளில் மிகப் பெரிது அங்கப்பிரதட்சணம். புழலில் ஒருதாய் வயது ஐம்பதுக்கு மேலிருக்கும். செம் மலின் பக்தை. 1008 பாற்குடங்களைத் தேங்காய்சீனிவாசன் தலைமையில் எடுத்துச் சென்றார் பெரம்பூர் வழியில் உள்ள ஒரு அம்மனுக்கு அபிஷேகம் செய்ய வைத்தார். அதில் வினோத மில்லை. அந்தத் தாய் ஊர்வலம் புறப் பட்ட இடத்திலிருந்து அந்த கோயில் வரை தெருவில் அங்கப்பிரதட்சணம் செய்து கொண்டு போனதுதான் விஷேசம்.

பலர் இதன் மூலம் விளம்பரம் தேடிக் கொள்ள, போஸ்டர் அடித்து பிரார்த் தனை நடத்தினர்!

பக்தி என்பது மௌனம். ஆனால் கண்ணீரால் எழுதப்பட வேண்டியவை யும் உண்டு. என்னுயிரை எடுத்துக் கொண்டு என் மகன் உயிரைக் காப் பாற்று என்று வேண்டிய மொகலாய மன்னர் பாபரின் பிரார்த்தனை சரித் திர பிரசித்தி பெற்றது. அப்படி பன் னிரண்டு பாமரர்கள் தீக்குளித்து செம்மலின் உயிர்காக்க வேண்டி உயிர் விட்டனர். அவர்களுக்கு சரித்திரத்தில் இடமில்லையானாலும் திரும்பி வந்த செம்மல் மனதில் இடமிருந்தது. அந்த



உண்மை தியாகத்தைக் கேட்டு செம்மல் கலங் கினார்.

### கலிங்கத்துப் பரணி

கலிங்கத்துப் பரணி யைத் தெரியும். ஆனால் இது லிங்கன் ஆண்ட நாட்டின் பரணி. பரணி என்றால்... 1972 இல் டாக்டர் எம்.எஸ்.உதய மூர்த்தி ஏற்பாட்டில் செம்மல் அமெரிக்கா சென்றார். அங்கு பல்கலைக் கழகத்தில் செம்மல் பேசு வதாக இருந்தது. அங்கு பேசுவதற்காக சில குறிப்புகளை அமெரிக்கன் ஹிஸ்ட்ரி புத்தகத்திலிருந்து எடுத்துக் கேட்டார்.



அமெரிக்க வைத்திய சாலையில் எம்.ஜி.ஆர்

அதில் மிளகுக்க நன்றி என்ற ஒரு அத்தியாயம் இருந்தது. அக்காலத்தில் இந்தியாவிலிருந்து தான் ஐரோப்பிய நாடுகளுக்கு மிளகு கொண்டு வந்து விற்றனர். கைபர் கணவாய் வழியாக ஆப்கானிஸ்தான், ஈரான், ஈராக், துருக்கி கடந்து வந்து ஸ்பெயின் இத்தாலி, கிரேக்க நாடுகளுக்குக் கொடுத்தார்கள்.

மிளகு ஐரோப்பியர்களுக்கு மிக வும் பிடித்த உணவுப் பொருள். துருக் கியர்கள் ஐரோப்பிய எல்லையில் காவல் போட்டு பாதையை அடைத்து விட்டதால் இந்தியாவிற்கு கடல் மார் க்கத்தை கண்டுபிடிக்கவே கொலம் பஸ் இந்தியா புறப்பட்டார். திசைமாறி அமெரிக்காவுக்குப் போனார். அதனால் மிளகுக்கு நன்றி என்று எழுதியி ருந்தது.


அதில் அமெரிக்கா இன்றைய உலக உச்சியில் இருப்பதற்கு காரணம் கொலம்பஸின் கண்டுபிடிப்பு. அதற் காக இந்தியாவுக்கும் கடமைப்பட்ட வர் அமெரிக்கர் என்றும் இருந்தது. அந்த அமெரிக்காதான் செம்மலின் உயிரை மீட்டுக் கொடுத்தது.

புரூக்லின்- வாயில் நுழையாத இந்த பெயர் எல்லோராலும் உச்சரிக்கப்பட் டது. மக்கள் நச்சரித்தனர்: அங்கிரு ந்து செய்தி வந்ததா என்று. முதன் முதலில் நல்ல செய்தி கொண்டு வந் தவர் டாக்டர் ஹண்டே அவர்கள்தான். செம்மல் கண் விழித்தார். பார்க்கிற வரை அடையாளம் தெரிந்து கொள் கிறார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் காங்கிரசினால் அரசாங்கத்தில் எந்த மாற்றங்களையும் செய்யமுடியாது



## அத்தே ஞானசார தேரர் தெரிவிப்பு

**(கொழும்பு) ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஓர் அரசியல் விபச்சாரி. எந்த அரசாங்கம் ஆட்சியமைத்தாலும் ஒட்டிக்கொள் ளும் கொள்கையே ஹக்கீமிற்குள்ளது என பொதுபலசேனா பௌத்த அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.**

நாட்டில் முஸ்லிம் தீவிரவாதத்தினை பரப்பி கிழக்கினை பிரிக்கும் செயற்பாட்டினை முஸ்லிம் காங்கிரசே செய்து வருகின்றது. சிங்கள இனம் அழிக்கப்படுமாயின் நாட்டில் முஸ்லிம்கள் வாழ முடியாது போய் விடும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

பொதுபலசேனா பௌத்த அமைப்பினால் நேற்று முன்தினம் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு கருத்து தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாட்டின் தீர்மானிக்கும் சக்தி என மார்தட்டிக் கொள்கின்றது. ஆயினும முஸ்லிம் காங்கிரசினால் நாட்டில் அல்லது அரசாங்கத்தில் எந்த மாற்றங்களையும் செய்ய முடியாது. அரசாங்கத்தின் பணத்தில் சுகம் அனுபவித்துக் கொண்டு மக்களையும் நாட்டையும் சீரழிக்கும் செயலையே முஸ்லிம் காங்கிரஸ் செய்து வருகின்றது.

எந்த அரசாங்கம் ஆட்சி அமைததாலும் அவர்களுடன் ஒட்டிக் கொண்டு தம்மை பெரியவர்களாகக் காட்டிக் கொள்கின்றனர். எந்தவொரு கொள்கையும் இல்லாது விபச்சாரம் செய்யும் பெண்களைப் போல் அழைத்த இடமெல்லாம் சென்று அரசியல் செய்வதே அவர்களின் கொள்கையாகவுள்ளது.

இவைதாம் நாட்டில் அரசியலை தீர்மானிப்பதாகவும் அரசாங்கத்தை விட்டு வெளியேறினால் ஆட்சி மாற்றம் ஏற்படுமெனவும் கூறிக் கொண்டு மக்களை ஏமாற்றி அரசியல நடத்துவதை விடவும் அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொள்வது நல்லது.

ஆயினும் அதனை ஒருபோதும் முஸ்லிம் காங்கிரஸ் செய்யப்போவதில்லை.

மேலும் நாட்டில் தீவிரவாதத்தினை பரப்பி கிழக்கில் தனி முஸ்லிம் ஆட்சியினை அமைக்கும் முக்கிய செயலை ஹக்கீமே செய்து வருகின்றார். நாட்டில் அநாவசியமான முறையில் பள்ளிவாசல்களையும் மத ஸ்தலங்களையும் அமைத்து முஸ்லிம் சமூகத்தினை தீவிரவாத கொள்கைக்குள் மாற்றி நாட்டில் பிரிவினையை தூண்டும் கொள்கையிலேயே இவர்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

முஸ்லிம் தீவிரவாதத்தையும் பெண்களையும் கர்ப்பிணிகளையும் மதக் கொள்கை என்ற பெயரில் கொலை செய்யும் ஓர் முஸ்லிம் தீவிரவாதியிடம் பேச்சுவார்த்தை நடத்தும் தேவை ஹக்கீமிற்கு ஏன் வந்துள்ளது.

இலங்கையிலும் மத்திய கிழக்கு நாட்டு முஸ்லிம் கொள்கைகளைப் பரப்பி இலங்கையில் கொடூரமான செயல்களை முஸ்லிம் மக்களிடையே பரப்பி இலங்கையில் அமைதியின்மையையும் தீவிரவாதத்தையும் பரப்பவே இவர்கள் சந்திப்புக்களை மேற்கொள்கின்றனர்.

இன்று இலங்கையில் இருந்து மத்திய கிழக்கிற்கு சென்றுள்ள சிங்கள, தமிழ் பெண்கள் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களை முஸ்லிம் மதத்திற்கு மாற்றியுள்ளனர். அதேபோல் கிழக்கிலும் தமிழ் பெண்களை மத மாற்றம் செய்து சமூக அழிப்பை செய்து கொண்டுள்ளனர்.

இவை அனைத்திற்கும தலைமை தாங்கும் சக்தியாகவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயற்படுகின்றது.

இலங்கையில் தொடர்ந்தும் சிங்கள சமூகத்தை அழிக்கும் செயற்பாட்டினை முஸ்லிம் தீவிரவாதிகள் செய்து வருவார்களாயின் இலங்கையில் முஸ்லிம் இனத்தினருக்கும் வாழ்வது குறித்து கேள்வி ஏற்படும்.

இலங்கையில் மூவின சமூகங்கள் அமைதியாக வாழ வேண்டுமாயின் முஸ்லிம் தீவிரவாதக் கொள்கையை கட்டுப்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (2)




சென்ஜோன் அம்புலன்சில் 10 வருடங்களுக்கு மேல் சேவை புரிந்தோருக்கு விருது வழங்கும் வைபவம் அண்மையில் சென்ஜோன் அம்புலன்ஸ் இலங்கைக்கான பிரதம தளபதி டாக்டர் பாலித அபயகோன் தலைமையில் இலங்கை தேசிய தலைமையகத்தில் இடம் பெற்றபோது...

## கொங்கிறீட் பாலம் முறிந்து மூவர் பலி!

கடுவலை, ஜயந்திபுரத்தில் அதிவேக நெடுஞ்சாலையில் நிர் மாணிக்கப்பட்ட கொங்கிறீட் பாலத்தில் திருத்த வேலைகளை மேற் கொண்டிருந்தவர்கள் மீது அந்த கொங்கிறீட் பாலம் உடைந்து விழுந்ததில் மூவர் பலியாகியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (2)

# ஜெனீவா பிரேரணைக்கு எதிராக இலங்கையர்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் பேரவையில் அமெரிக்காவால் கொண்டு வரப்பட்டிருக்கும் பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமெரிக்கா மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

இத்தாலி மற்றும் அமெரிக்காவில வாழும் நூற்றுக்கணக்கான இலங்கையர்கள் இந்த ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டிருந்தனர்.

ஒற்றுமை மற்றும் அபிவிருத்திக்கான அமெரிக்க இலங்கையர்கள் அமைப்பு அமெரிக்காவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

அதேபோல. இத்தாலியில் வாழும நாட்டை நேசிக்கும் இலங்கையர்கள் அமைப்பு இத்தாலியில் ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

100இற்கும் அதிகமான அமெரிக்க இலங்கையர்கள் டெக்சாசிலுள்ள இராஜாங்கச் செயலக கட்டடத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இத்தாலியில் ரோம் பாராளுமன்றத்துக்கு முன்னால் மற்றுமொரு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இலங்கைக்கு எதிராக அமெரிக்காவால் முன்வைக்கப்படும் மோசமான குற்றச்சாட்டுக்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கோஷங்களை எழுப்பியவாறும், பதாகைகளைத் தாங்கியவாறும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

30 வருடங்களாக நிலவிய பயங்கரவாதம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கும் நிலையில் அதனைக் குழப்பும் வகையில் சர்வதேச நாடுகள் இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்களைக் கொண்டு வருவதாகவும் ஒற்றுமை மற்றும் அபிவிருத்திக்கான அமெரிக்க இலங்கையர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரொன்றையும் கையளித்தனர். அமெரிக்க இராஜாங்கச் செயலாளருக்குக் கையளிக்குமாறு இந்த மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையால் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க செயற்பாடுகளுக்கு மதிப்பளித்து அதனைக் குழப்பவேண்டாமென்றும் அந்த மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (2)

# அமைதி பேணிவந்த மேர்வின் மீண்டும் பேசத் தொடங்கியுள்ளார்

## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சர் மேர்வின் சில்வா நாட்டுக்கு அவப்பெயர் ஏற்படுத்தி வருவதாக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு திருமணயோசனை முன்வைத்து நாட்டையே மேர்வின் அவமானப்படுத்தினார்.

சில காரணங்களுக்காக அமைதி பேணி வந்த மேர்வின் மீண்டும் பேசத் தொடங்கியுள்ளார்.

ஸ்ரீங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாட்டுக்கு எதிராக எப்போதும் செயற்பட்டதில்லை, செயற்பட போவதுமில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆதரவளித்திருந்தால் நாடு பிளவடைந்திருக்கும்.

களனி தேர்தல் தொகுதியைச் சேர்ந்தவர்களைப் போன்று இலவச உணவு வழங்கி மக்களை கூட்டங்களுக்கு முஸ்லிம் காங்கிரஸ் அழைக்காது.

அமைச்சர் மேர்வின் சில்வா தொடர்ந்தும் களனியின் தொகுதி அமைப்பாளராக பதவி வகிப்பாரா என்பது தெரியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

## க.பொ.த.(சா/த) பரீட்சை

# கேட்டல் மற்றும் பேச்சுக்கு 20 புள்ளிகள் வழங்க யோசனை

(கொழும்பு)

அடுத்த வருடம் அமுலாகும் வகையில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் ஆங்கில மொழிப் பரீட்சையில் கேட்டல் மற்றும் பேசும் ஆற்றல்களுக்கு 20 புள்ளிகளை வழங்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன இதற்கான அனுமதியை அமைச்சரவையிடம் கோரியுள்ளார்.


அமைச்சரின் யோசனைப்படி அந்த பரீட்சை புறம்பான ஒன்றாக நடத்தப்படும்.

இதேவேளை, அடுத்த வருடம் முதல் உள்ளூரில் இயங்கும் சர்வதேச பாடசாலைகளில் சமயம், வரலாறு மற்றும் தாய்மொழி போன்ற பாடங்களை கட்டாயப்படுத்தும் யோசனையும் அமைச்சரினால் முன்வைக்கப்பட்டுள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் பாதுகாப்பின்மை நீடிப்பதாலேயே எமது இளைஞர்கள் புலம்பெயர்கின்றனர்

## அவுஸ்திரேலிய பிரதிநிதிகளிடம் வடக்கு அமைச்சர்கள் சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

எமது மக்கள் இந்த மண்ணை விட்டுப் புலம் பெயர்வதை நாங்கள் ஆதரிக்கவில்லை. ஆனால் எமது இளைஞர்களால் வேலைவாய்ப்பைப் பெறமுடியவில்லை. எமது இளைஞர்கள். குறிப்பாகத் தடுப்புமுகாம்களில் இருந்து விடுதலையான போராளிகளா இங்கு தங்களுக்குப் பாதுகாப்பில்லை என்றே உணருகிறார்கள்.

இதனால்தான் கடலில் தங்கள் உயிரைப் பணயம் வைத்து அவுஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று வடமாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசனும் வடமாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவும் அவுஸ்திரேலிய அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

அவுஸ்திரேலியா அரசாங்கத்தின் வெளிவிவகாரத் திணைக்கள நிறைவேற்று அதிகாரி ஜோன் பொனர். அவுஸ்திரேலியா உயர்ஸ்தானிகராலயத்தின் அரசியல்பிரிவுத் துணைச்செயலர் எட்வினா சின்கிலெயர் மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர் நஸ்ரீன் மரிக்கார் ஆகியோர் முதலமைச்சர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் சந்தித்துக் கலந்துரையாடினார்கள்.

இச்சந்திப்பின் முடிவில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் பொ.ஐங்கரநேசன்,

போர் முடிந்து ஐந்து ஆண்டுகளைத் தொடவுள்ள நிலையிலும் இன்று வடக்கில் இராணுவ மேலாதிககமே நிலவுகிறது. அரசாங்கம் காவலரண்களையும் சிறு முகாம்களையும் மூடிவிட்டுப் படைக் குறைப்புச் செய்ததாகச் சொல்கிறது. அங்குள்ள இராணுவத்தினர் வடக்கில் உள்ள ஏனைய பெரிய முகாம்களுக்குள் நகர்த்தப்பட்டுள்ளனர் என்பதுதான் உண்மை.

இன்று சிவில் நடவடிக்கைகள் எல்லாவற்றிலும் இராணுவம் தலையிடுகின்றது. தொழில் முயற்சியில் இராணுவம் ஈடுபடுகின்றது. இதனால் எமது இளைஞர்களின் வேலைவாய்ப்புப் பறிக்கப்படுகின்றது. வடக்கில் 60 சதவீதத்துக்கும் அதிகமான மக்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஒரு காலத்தில் விவசாயத்தில்தான் ஈடுபட்டிருந்தார்கள்.

இன்று போர் எல்லாவற்றையும் சீர்குலைத்துவிட்டது. வடக்கின் மிகவளமான வலி.வடக்கின் 6 ஆயிரத்து400 ஏக்கர் காணியை பொதுமக்களிடம் இருந்து இராணுவம் அபகரித்து வைத்திருக்கிறது. எமது விவசாயப் பண்ணைகளிலும் பலவற்றை இராணுவமே ஆக்கிரமித்து வைத்திருக்கிறது. இவற்றை எங்களிடம் தந்தாலே விவசாயத்தில்எமது மக்கள்ஈடுபட்டு வேலைவாய்ப்பைத் தேடிக் கொள்வார்கள்.

இராணுவம் காவலில் வைத்திருந்த எமது இளைஞர்களையும் யுவதிகளையும் கணிசமான அளவில் விடுதலை செய்திருப்பது என்னவோ உண்மைதான். அவர்களுக்குப்புனர் வாழ்வில் தொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டதாக அரசாங்கம் கூறி வந்தாலும அந்தப் பயிற்சிகளைக் கொண்டு அவர்களால் வருவாய் தரும் எந்தத் தொழிலையும் தேடிக் கொள்ள முடியாது என்பதுதான் யதார்த்தம்.

சமூகமும் விடுதலையான போராளிகளைப் பயத்தின் காரணமாக அரவணைக்கத் தயங்குகின்றது. அத்தோடு. விடுதலையான போராளிகளை மீளவும் கைது செய்யும் நடவடிக்கைகளும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

இவை போன்ற காரணங்களால் தான் இந்த மண்ணில் எதிர்காலம் குறித்த நம்பிக்கையில்லாமல் எமது மக்கள் கடலில் தங்கள் உயிரைப் பணயம் வைத்து அவுஸ்திரேலியாவுக்குப் படகேறிக் கொண்டிருக்கிறார்கள்.

இதை அவுஸ்திரேலிய அரசாங்கம்புரிந்து கொள்ளவேண்டும். இயலுமாயின், அவுஸ்திரேலியா அரசாங்கத்தின் மூலம் வடக்கில் இருக்கும் இராணுவத்தை மீளப்பெறுமாறு இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்தச் சொல்லுங்கள் என்று அவுஸ்திரேலிய பிரதிநிதிகளிடம் எடுத்துத் கூறியிருந்தோம் என அவர் மேலும் தெரிவித்தார். (2-6)

# நலன்புரி நிலையக் காணிகளை சுவீகரித்து மக்களை நிரந்தரமாக குடியேற்றத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையக் காணிகளை சுவீகரித்து அதில் மக்களை நிரந்தரமாக குடியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இருப்பினும் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்கள் அந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளதோடு தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை நேற்று முன்தினம் மாலை வடக்கு ஆளுநர் இல்லத்தில் நடைபெற்ற உயர் மட்ட கூட்டத்தில் நலன்புரி நிலையங்களில் வாழும் ஆயிரத்து 223 குடும்பங்களை விரைவில் மீளக் குடியேற்றுவது தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

இக்குடும்பங்களில் 900 குடும்பங்கள் வரை காணி அற்றவர்கள் என்பதை கருத்தில் கொண்டு அவர்களுக்கு அரச செலவில் காணிகளை வாங்கி குடியேற்றுவது தொடர்பாகவும் ஏனையோர்களை அவர்களினது வதிவிடங்களில் குடியமர்த்துவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

ஏற்கனவே இந் நலன்புரி முகாம்கள் அமைந்திருக்கும் காணிகளை கொள்வனவு செய்து அக் காணிகளில் காணி அற்றோரை குடியமர்த்துவதற்கு ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்நலன்புரி நிலையங்களில் வாழ்வோரை துரித கதியில் மீள் குடியேற்றுவது எனவும் இது தொடர்பாக எதிர்வரும் வாரங்களில் அவர்களுடனான சந்திப்பின் பின் அடுத்த நடவடிக்கை தொடர்பாக ஆராய்வதாகவும் முடிவெடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் அமைச்சர் கேஎன். டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி, வடமாகாண கட்டளைத் தளபதி உதயபெரேரா, யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (2-6)

# ஐக்கிய தேசிய கட்சியே நாட்டை ஆட்சி செய்யும்

## ரணில் சூளுரை

2001ஆம் ஆண்டைப்போன்றே இந்த தடவையும் அரசாங்கத்தை கவிழ்க்கப் போவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க சூளுரைத்துள்ளார்.

அவிசாவளையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியே இந்த நாட்டை ஆட்சி செய்யும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் அரசாங்கத்தை கவிழ்ப்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்தவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறெனினும், அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

அனைவருக்கும் தொழில் வாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

மாற்று அரசியல் சக்தியாக ஐக்கிய தேசியக் கட்சியினால் மட்டுமே செயற்பட முடியும் எனவும சிறிய கட்சிகளுக்கு வாக்களிப்பதில் பயனில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# மஹோற்சவம்

கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள பாணன் குளம் நாச்சி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 5 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து தினங்கள் திருவிழா நடைபெற்று வருகின்றது.

இதில் நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு சப்பறத் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு தேர்த் திருவிழாவும் இடம்பெறும்.

எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என ஆலயபரிபாலன சபை அறிவித்துள்ளது. (2)

# சந்திரிகா-ரணில் சந்திப்பு; அச்சத்தில் அரசாங்கம்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தின் கீழ் தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் அச்சமடைய வேண்டியதில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவிசாவளைப் பிரதேசத்தில் கடந்த 13 ஆம் திகதி இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த கருத்தை வெளியிட்டார்.

ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கமானது தொழில்வாய்ப்புகளை உருவாக்கும் நிர்வாகமாகவே இருக்கும்.

அமெரிக்காவிலிருந்தும் ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் முதலீடுகள் கொண்டுவரப்படும்.


பொருளாதார சந்தைகள் உருவாக்கப்படும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

தற்போதைய அரசாங்கத்தை நீண்டகாலத்திற்கு முன்னெடுத்துச் செல்ல முடியாது. ஆளும் கட்சி நிர்வாகத்திற்குள் பிரச்சினை ஏற்ப ட்டுள்ளது. எனவே, ஆளும் கட்சி க்கு வாக்களிப்பதில் பயனில்லை.

இதேவேளை. அண்மையில் தாம் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்து கலந்துரையாடியமையை அடுத்து அரசாங்கம் அச்சம் கொண்டிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதனால் தம்மை அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் குற்றம் சுமத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காக சூழ்ச்சிகளை மேற்கொள்கிறீர்களா என்றும் சிலர் தம்மிடம் வினவுவதாகவும், ஆனால், தமக்கு அதற்கான நேரம் இல்லை என்று தாம் பதிலளித்ததாகவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (எ-11)



கரவெட்டி பிரதேச சபையின் சுகாதாரப் பிரிவினரால் புகைத்தல் தினத்தை முன்னிட்டு கடை உரிமையாளர்களுக்கான நற்சான்றிதழ் வழங்கும் நிகழ்வின் போது... (படம்:- கரணவாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவிற்கு சவால்விடும் ரஷ்யா!



...ரஷ்யாவிலிருந்து பெறப்பட்ட இராணுவ ஹெலிகாப்டர்களுக்கான எஞ்சின்களை உக்ரைன்தான் வழங்குகிறது. இங்கே தயாராகும் கப்பல்களுக்கான எஞ்சின்கள் வாங்குவதற்கும் ஒப்பந்தமும் இந்தியாவால் போடப்பட்டிருக் கிறது.

சோவியத் யூனியன் தகர்வுக்கு பிறகு உக்ரைன் தனிநாடான அடுத்த பத்தாண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 60% வீழ்ச்சியடைந்தது. 2000 ஆண்டுக்குப் பிறகு ஏற்றுமதி சார்ந்த பொருளாதார வளர்ச்சி சிறிதளவு ஏற்பட்டாலும், உலகளாவிய நிதி நெருக்கடியின் தாக்கத்தால் 2009 ஆம் ஆண்டு உக்ரைனின் பொருளாதாரம் 15% சுருங்கியது. வரலாற்று ரீதியாக சோவியத் சோசலிச குடியரசாக சாதித்த உச்சகட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி அளவை உக்ரைன் மீண்டும் அடையவேயில்லை.

அரசியலில் நிலையின்மை, பொருளாதார நெருக்கடிகள், அடுத்தடுத்து அதிகாரத்துக்கு வரும் ஆட்சியாளர்களின் ஊழல இவற்றுக்கெல்லாம் தீர்வு ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவது தான் என்ற பிரசாரம் நடுத்தர வர்க்க மக்களிடையே ஓரளவு எடுபட்டது. ஆனால், ஏற்கனவே ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்து 'சொர்க்கத்தில்' திளைத்துக் கொண்டிருக்கும் ஸ்பெயின், கிரீஸ் மக்களை கேட்டால் அது எத்தகைய தீர்வு என்பதை உக்ரைன் மக்கள் புரிந்து கொள்ளலாம்.

1917 ஒக்டோபர் புரட்சிக்குப் பிறகு உலகின் மூன்றில் ஒரு பகுதி நிலப்பரப்பில் உள்ள இயற்கை மற்றும் மனித வளங்களின் மீது அமெரிக்கா முதலான மேற்கத்திய நாடுகளின் இலாப வேட்டை மறுக்கப்பட்டது. கம்யூனிச எதிர்ப்பு அரசியலாக உருவெடுத்து சோவியத் யூனியனுக்கு எதிராக பனிப்போர் நடத்தப்பட்டு வந்தது. உலகின் பிரச்சினைகளுக்கெல்லாம் கம்யூனிசம்தான் காரணம் என்று பிரசாரம் செய்து கொரியா முதல் தாய்வான், மேற்கு ஆசிய நாடுகள், ஆப்பிரிக்க, தென் அமெரிக்க நாடுகள் வரை ஜனநாயகத்தை நசுக்கி சர்வாதிகார கொடுங்கோல் ஆட்சியாளர்களை அமர்த்தி ஆதரித்துக் கொண்டிருந்தது அமெரிக்கா.

1990 இல் சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பிறகு "இதுதான் வரலாற்றின் முடிவு" என்று முதலாளித்துவ அறிஞர்கள் கொக்கரித்தனர். அமைதி ஈவுத் தொகை (peace dividend) என்று மிச்சமாகப் போகும் பணத்தை என்ன செய்வது என்று கணக்கு போட்டனர்.

ஆனால், அமெரிக்கா முதலான மேற்கத்திய ஏகாதிபத்திய பொருளாதாரங்களுக்கு முழு உலகையும், முழு மக்களது உழைப்பையும் அபகரிப்பது, உயிர் வாழும் தேவையாக இருக்கிறது. ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார கூட்டமைப்பான ஐரோப்பிய ஒன்றியமும், அமெரிக்க தலைமையிலிருக்கும் இராணுவக் கூட்டமைப்பான நேட்டோவும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளையும், முன்னாள் சோவியத் குடியரசுகளையும் ஒவ்வொன்றாக தம்முள் இழுக்க ஆரம்பித்தன. போலந்து, லித்துவேனியா, லட்வியா, எஸ்டோனியா, செக் குடியரசு, ஸ்லோவேகியா, ஸ்லோவேனியா, ஹங்கேரி, ரொமேனியா, பல்கேரியா ஆகிய நாடுகளை மேற்கத்திய பொருளாதார, இராணுவ மண்டலங்களுக்குள் கொண்டு வருவதற்கான முயற்சிகள் தொடர்கின்றன.


இராணுவ ரீதியாக கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் நேரடி ஆக்கிரமிப்புகளையும் எகிப்து, துனீஷியா, லிபியா, பஹ்ரைன், சிரியா போன்ற நாடுகளில் உள்நாட்டு கலகங்களையும் நடத்தி வருகிறது அமெரிக்க ஏகாதிபத்தியம்.

எனவே, ஐரோப்பாவின் இரண்டாவது பெரிய நாடான உக்ரைனுக்கு ஐரோப்பிய ஒன்றியம் தேவைப்படுவதைவிட நிதிமூலதன முதலாளிகளின் இலாப வேடடைக்கும், மக்களின் வாழ்க்கைப் போராட்டத்துக்கும் இடையிலான கடும் முரண்பாட்டில் சிக்கியிருக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு உக்ரைன் தேவைப்படுகிறது என்பதுதான் நிதர்சனம்.


உக்ரைன் விவசாய நிலங்களை வாங்குவதற்கு இலாபகரமான 10 நாடுகளில் ஒன்று என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. உக்ரைனில் விளைநிலங்களை அன்னிய நிறுவனங்கள் வாங்குவது தடை செய்யப்பட்டிருந்தாலும், சட்ட விரோதமான நிலகைப்பற்றல்கள் நடந்து வருகின்றன. உக்ரைனின் விவசாயத் துறையில் 1,600-க்கும் மேற்பட்ட மேற்கத்திய கார்ப்பரேட்டுகள் கால் பதித்திருக்கினறன.

மறுபக்கத்தில் 2000 ஆம் ஆண்டு ரஷ்யாவின் ஜனாதிபதி பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட விளாடிமிர் புடின், ரஷ்யாவின் வல்லரசு தகுதியை மீண்டும் அடைய முயற்சிக்கிறார். மேலும் ரஷ்ய ஆளும் வர்க்கமும் இந்த முயற்சியை தொடர்ந்து செய்து வருகிறது. அதனால்தான் புடின் தொடர்ந்து ஆட்சியில் இருந்து வருகிறார்.

ரஷ்ய தேசிய பெருமிதத்தை முன்வைத்து ரஷ்யாவின் இயறகை வளங்களை குறிப்பாக எண்ணெய் வளங்களை பயன்படுத்தி, ரஷ்ய பொருளாதாரத்தை ஓரளவு வலுப்படுத்தியிருக்கிறார் புடின். ரஷ்ய முதலாளிகளின் சார்பில், ரஷ்யாவின் அரசியல் செல்வாக்கை உலக அரங்கில் உயர்த்துவதற்காக அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நிற்கிறது ரஷ்ய அரசு. சிரியாவில் அமெரிக்க நலன்களுக்கு எதிராக ஆசாத் அரசுக்கு ஆதரவு அளித்தது, அமெரிக்காவின் எட்வர்ட் ஸ்னோவ்டனுக்கு புகலிடம் அளித்தது போன்ற ரஷ்யாவின் நடவடிக்கைகள் அமெரிக்க அரசுக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியிருந்தன.



ரஷ்யாவின் ஆளும் முதலாளிகள் தமது பிராந்தியத்தில் உள்ள நாடுகளில் செல்வாக்கு செலுத்த அமெரிக்காவுடன் போட்டி போட வேண்டியிருக்கிறது.



இவ்வாறு மேற்கத்திய ஏகாதிபத்தியங்களுக்கும், ரஷ்ய முதலாளிகளுக்கும் இடையில் சிக்கி சீரழிந்து கொண்டிருக்கிறது உக்ரைன். இருப்பினும் இதன் முதன்மைக் குற்றவாளிகள் அமெரிக்க தலைமையிலான மேற்குலகம் தான்.

'கம்யூனிசம்தான் சைத்தான், சோவியத் யூனியனை வீழ்த்தி முதலாளித்துவ ஜனநாயகத்தை உலகெங்கிலும் நிலைநாட்டி விட்டோம், இனிமேல் ஒரே அமைதி அமைதி' என்று பாட்டு பாடிய முதலாளித்துவ அறிஞர்கள், இப்போது அமெரிக்கா உலகெங்கிலும் நடத்தி வரும் பொருளாதார, இராணுவ, அரசியல் ரீதியான ஜனநாயகப் படுகொலைகளுக்கு புதுப்புது விளக்கங்கள் கொடுத்து வருகின்றனர்.

போரையும், பசியையும், படுகொலைகளையும் நடத்தி வருவது முதலாளித்துவம்தான் என்பது மீண்டும் மீண்டும் நிறுவப்பட்டு வருகிறது.

கம்யூனிச நாடுகளின் வீழ்ச்சிக்கு பிறகு, உலகில் இனி போரே இல்லை என்று சிலர் மனப்பால் குடித்திருந்தாலும் அதற்கான வாய்ப்புகளை முதலாளித்துவம் எப்போதும் வழங்கவில்லை.

போர்கள் இல்லாமல் வல்லரசுகள் இல்லை, அவற்றின் பொருளாதார மேலாதிக்கம் இல்லை என்பதை சோவியத் யூனியன் தகர்வுக்கு பிறகும் பார்த்து வருகிறோம். இதில் ஒற்றை ரவுடியாக ஆதிக்கம் செலுத்திய அமெரிக்க வல்லரசு நலனை எதிர்த்து இப்போது ரஷ்ய வல்லரசு களத்திற்கு வருகிறது.

அந்த வகையில் ஏகாதிபத்தியங்களுக்கிடையே உள்ள முரண்பாடு போர்களை நிச்சயம் எழுப்பும். இனி உலகில் பனிப் போர் இல்லை, வல்லரசுகளின் பகிரங்கப் போர்தான் நடக்கும். போரைக் கொண்டுவரும் முதலாளித்துவத்தை நாம் அ ழிக்கும் வரை இந்த உலகை காக்க முடியாது.


(முற்றும்)

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 15.03.2014-13.04.2014



## துலாம்

**சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2 ஆம் பாதங்கள்**

**நியாயத்திற்காகப் போராடும் துலாம் இராசி நேயர்களே! அக்கறை செலுத்த வேண்டிய வக்ர சனி காலம்!**

இந்த பங்குனி மாத கிரக நிலைகள் நிச்சயிக்கப்பட்ட சில காரியங்களை மாற்றம் செய்யும் விதத்தில் அமைந்திருக்கின்றன. குறிப்பாக சுகாதிபதியாகவும், பஞ்சமாதிபதியாகவும் விளங்கும் சனி வக்ரம் பெற்றுவிட்டார். தனாதிபதியாக விளங்கும் செவ்வாயும் வக்ர இயக்கத்தில் இருக்கிறார். எனவே, பணப பற்றாக்குறை அதிகரிக்கும். குடும்பச் சுமை கூடும். வங்கிச் சேமிப்புகள் கரைந்து கொண்டே போகிறதே என்று கவலைப் படுவீர்கள்.

மாதத் தொடக்கத்தில் விரயாதிபதி புதன் 5இல் சஞ்சரிக்கின்றார். எனவே, பிள்ளைகளால் விரயங்கள் ஏற்படலாம். அவற்றின் கல்வி நலன் கருதியும், கடல் தாண்டும் முயற்சி கருதியும் ஒரு தொகை செலவழிய நேரிடும். ஏழரைச் சனியில் ஜென்மச் சனியின் ஆதிக்கம் நடைபெறுகிறது. எனவே, ஆரோக்கியத்தில் அடிக்கடி தொல்லைகள் ஏற்படுவது சகஜம தான். அதை மாற்று மருத் துவத்தால் குணமாக்கிக் கொள்ளலாம்.

வீடு, இடம் சம்பந்தப்பட்ட வகையில் பத்திரப்பதிவுகள் சம்பந்தமாக எடுத்த முடிவு களில் மாற்றம் செய்வீர்கள். உடன்பிறப்புகள் உங்கள் பணிக்கு குறுக்கீடாக இருக்கலாம். புதிய ஒப்பந்தங்களில் யோசித்துக் கையெழுத்திடுவது நல்லது. சனியோடு ராகு இணைந்திருப்பதால் வாழ்க்கைத் துணை மற்றும் குடும்ப உறுப்பினர்களிடம் விட்டுக் கொடுத்து செல்வதே அமைதிக்கு வித்திடும்.

கோபமும், கொந்தளிப்பும், இனம்புரியாத கவலையும், மனதில் அலைமோதும். தன்னைச் சார்ந்தவர்கள் தங்களுக்குரிய மரியாதையை கொடுக்கவில்லையோ என்ற எண்ணம் தலை தூக்கும். வாங்கிய சொத்துக்களை விற்க வேண்டிய சூழ்நிலை உருவாகிறதே என்று கவலைப்படுவீர்கள். உங்கள் ராசிநாதனுடன குரு பகைவனாக இருந்தாலும் கூட அதன் பார்வை பலம் நன்மைக்கே வித்திடும். எனவே மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும் வாய்ப்பு உருவாகும்.

அதற்கு அடித்தளமாக சனிக்கிழமை தோறும் விரதமிருந்து சனி பகவானையும் வழிபட்டு வாருங்கள். வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து குருபகவானையும் வழிபட்டு வாருங்கள். வக்ர இயக்க காலங்களில் வளர்ச்சி அதிகரிக்க வேண்டுமானால் வழிபாடுகள்தான் தேவை. லாபாதிபதியான சூரியன் 6இல சஞ்சரிப்பதால் வியாபார நலன் கருதி வாங்கிய கடனை கொஞ்சம், கொஞ்சமாக கொடுக்க முன்வருவீர்கள். ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்க வேண்டிய சூழ்நிலை உருவாகலாம். மாமன், மைத்துனர் வழியில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும்.

**நீச்ச புதனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிக்கு 9, 12-க்கு அதிபதியானவர் புதன். அவர் மார்ச் 28ஆம் திகதி மீன ராசியில் நீச்சம் பெறுகிறார். 12-க்கு அதிபதி நீச்சம் பெறுவது நன்மை தான். விரயத்திற்கேற்ற வருமானம் வந்து சேரும். வியாபாரப் போட்டிகள் அகலும். பயணங்களால் பலன் அதிகரிக்கும். அன்னிய தேச வாய்ப்புகள் கூட ஒரு சிலருக்கு எண்ணியபடி கைகூடும். அதே நேரத்தில் 9-க்கு அதிபதியாகவும் புதன் விளங்குவதால் தந்தையின் உடல் நலத்தில் கவனம் தேவை. மருத்துவச் செலவு உண்டு.

**கும்ப சுக்ரனின் சஞ்சாரம்!**

கும்ப ராசியில் மார்ச் 31ஆம் திகதி முதல் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக பிள்ளைகள் வழியில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம். இடமாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். பொன், பொருள் சேர்க்கை அதிகரிக்கும். பூமி பிரச்சினை அகலும். சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். நீண்ட நாட்களாக நிறைவேறவில்லையே என்று நினைத்த காரியங்கள் இப்பொழுது நிறைவேறி மகிழ்ச்சியை வழங்கும். இம்மாதம் வெள்ளிக்கிழமை தோறும் விரதமிருந்து அம்பிகை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். இன்பங்கள் எல்லாம் வந்து சேரும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் வெள்ளிக்கிழமை சுப விரயங்கள் அதிகரிக்கும் மாதமாக கருதலாம். சொல்லைச் செயலாக்கிக் காட்டுவதில் சில தடுமாற்றங்கள் நேரிடும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட விட்டுக்கொடுத்துச் செல்வதே நல்லது. பெண்களின் சுபச் சடங்குகள், பெற்றோர்களின் மணி விழா நிகழ்ச்சிகள் போன்றவற்றால் மகிழ்ச்சி ஏற்படும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நீண்ட தூர மாறுதல்கள் கிடைக்கும். அதனால் நிம்மதி குறையலாம். ஆஞ்சநேயர் வழிபாடு அல்லலைத் தீர்க்கும்.

### இம்மாதம் அந்நிய தேச வாய்ப்புக்கள்கூட ஒருசிலருக்கு எண்ணியபடி வந்துசேரும்

## சிவல்புரி சிங்காரம்



## விருச்சிகம்

**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

**ஆலோசனை சொல்வதில் அனைவரையும் வியக்க வைக்கும் விருச்சிக இராசி நேயர்களே!**

**வெற்றி வாய்ப்புக்கள் வீடு வந்து சேரும் நேரம்!**

பங்குனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, தன ஸ்தானத்தைக் குரு பார்க்கிறார். லாப ஸ்தானத்தில் ராசிநாதன் செவ்வாய் வீற்றிருக்கிறார். ஏழரைச் சனி வக்ர இயக்கத்தில் சஞ்சரிக்கின்றார். சந்திர பலத்தோடு பிறக்கும் இம்மாதம் உங்கள் சிந்தனைகளை வெற்றிபெற வைக்கும். செல்வநிலை உயரும். வி.ஐ.பி.க்கள் வீடு தேடி வந்து ஒத்துழைப்புச் செய்வர்.

நாட்டுப்பற்று மிக்கவர்கள் உங்கள் இல்லத்தில் நடைபெறும் நல்ல காரியங்களுக்கு உறுதுணையாக இருப்பர். சுகங்களும், சந்தோஷங்களும் அதிகரிக்கும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். தொழில், வியாபாரத்தில் இதுவரை இருந்ததைவிட இம்மாதம் வளர்ச்சி கூடும். அரசு வழி அனுகூலங்கள் மற்றும் அரசியல்வாதிகளாலும் அனுகூலம் கிடைக்கும். தன பஞ்சமாதிபதியான குரு இதுவரை வக்ர இய்க்கத்தில் இருந்தார். இப்பொழுது வக்ர நிவர்த்தியாகிவிட்டார்.

எனவே, மிதமிஞ்சிய பொருளாதாரம் ஏற்படும். அதை வாங்குவோமா; இதை வாங்குவோமா என்று சிந்திப்பீர்கள். குடும்பத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பரப் பொருட்கள் வரை வாங்கி மகிழ்வீர்கள். குடும்பத்திலிருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும். அதற்கு புதிய கூட்டாளிகள் வந்திணைவர். சுய ஜாதகத்தில் தெசாபுத்தி பலம் பெற்றிருப்பவர்கள் மேலும் வளர்ச்சியைக் காண்பர்.

சனி, செவ்வாய் இரண்டும் வக்ர இயக்கத்தில் இருப்பதால் யோகபலம் பெற்ற நாளில் அதற்குரிய ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வருவது நல்லது. ஏழரைச் சனியின் வக்ரம் ஒரு வழிக்கு நன்மைதான். விரயாதிபதி வக்ரம் பெற்றால் விரயத்திற்கேற்ற வரவு வந்து கொண்டேயிருக்கும். அலைச்சல் கூடினாலும் ஆதாயம் கிடைக்கும். அந்நிய தேசத்திலிருந்து அனுகூலத் தகவல் வந்து சேரும். கண்ணியமிக்க மனிதர் ஒருவர் உங்கள் கவலைகள் தீர வழிவகுப்பார்.

குருவின் பார்வை சுக ஸ்தானத்திலும், பதிவதால் உடல் ஆரோக்கியம் சீராகும். உள்ளத்தில் உற்சாகம் குடிகொள்ளும். நகைகளை வாங்கி குழந்தைகளையும், குடும்ப உறுப்பினர்களையும் திருப்திப்படுத்துவீர்கள். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். இம்மாதத்தில் சூரிய பலம் நன்றாக இருப்பதால் பொதுநலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரலாம். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். கொடுக்கல்-வாங்கல்கள் திருப்திகரமாக இருக்கும்.

**மீன புதனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிக்கு 8, 11-க்கு அதிபதியாக புதன் விளங்குகிறார். அஷ்டமாதிபதி நீச்சம் பெறும் மார்ச் 28ஆம் திகதி முதல் அற்புதமான பலன்கள் நடைபெறப் போகின்றன. 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்' என்பதற்கேற்ப திட்டமிடாது செய்கின்ற காரியங்களில் வெற்றி கிடைக்கும். தெய்வபலம் மேலோங்கியிருக்கும். உடனிருப்பவர்களின் ஒத்துழைப்பு கிடைத்து மகிழ்ச்சி காண்பீர்கள். உல்லாசப் பயணங்களை மேற்கொள்வீர்கள். 11-க்கு அதிபதியாகவும் புதன் விளங்குவதால் காரிய வெற்றிக்கு விஷ்ணுவை வழிபட்டு வருவது நல்லது. வழிபாடுகளால் வளர்ச்சியைக் கூட்டிக்கொள்ள இயலும்.

**கும்ப சுக்ரனின் சஞ்சாரம்!**

மார்ச் 31 ஆம் திகதி கும்ப ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். 7, 12-க்கு அதிபதி 4இல் சஞ்சரிக்கும் பொழுது சுகபோகச் செலவுகள் அதிகரிக்கும். ஆடம்பரச் செலவுகளால் விரயங்களை சந்திக்க நேரிடலாம். விருந்தினர் தொல்லை அதிகரிக்கும். விழிப்புணர்ச்சியுடன் செயற்படுவதன் மூலம் விரயங்களிலிருந்து விடுபட இயலும். ஆடை, ஆபரணச் சேர்க்கை அதிகரிக்கும். பெண்வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். இம்மாதம் வடக்கு நோக்கிய அம்பிகையை வழிபட்டு வளர்ச்சியை கூட்டிக் கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் இனிய மாதமாக உங்களுக்கு அமையும். இல்லத்தில் உள்ளவர்கள் உள்ளம் மகிழும் விதத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறும். தொழில், உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் அனுகூலம் கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் பாசம் பொங்கும். தாய் வழி ஆதரவு பெருகும். தன வரவு தக்க. விதத்தில் அமையும். உச்ச சனியின் ஆதிக்கத்தால் அச்சமில்லாத வாழ்க்கை அமைய சனி பகவான் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். இணைந்திருக்கும் ராகுவிற்கும், 6 இல் சஞ்சரிக்கும் கேதுவிற்கும் உரிய வழிபாடாக சர்ப்ப சாந்திகளைச் செய்வது நல்லது.

### இம்மாதம் இல்லத்தில் உள்ளவர்களின் உள்ளம் மகிழும் விதத்தில் அமைகிறது

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் இந்து கோவில்கள் இடிக்கப்பட்டபோது வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த வாஜ்பாய்

"இலங்கைப் பிரச்சினையைப் பொறுத்தவரை காங்கிரசும் பி.ஜே.பியும் ஒன்றுதான் என்பது கடந்த கால வரலாற்றைப் புரட்டினால் புரியும்." வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது இலங்கையில் தமிழர்கள் வணங்கும் இந்து கோயில்கள் இடித்து நொறுக்கப்பட்டன. அப்போது பி.ஜே.பி. அரசு கைகட்டி வேடிக்கைப் பார்க்கத்தான் செய்தது.

கவலையை மறந்து இப்போதுதான் சிரிக்க ஆரம்பித்துள்ளார் சிறுத்தைகள் தலைவர். தொகுதிப் பங்கீடு முடிந்து வேட்பாளர்களை அறிவித்துவிட்டு, பிரசாரத்துக்கும் கிளம்பிவிட்டார் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன்.

அவரிடம் சில கேள்விகளை முன்வைத்தோம்.

**கேள்வி:-**"உங்கள் கூட்டணிக்கு வெற்றி வாய்ப்புகள் எப்படி இருக்கிறது?"

**பதில்:-**"தமிழகத்தில் பலமுனைப் போட்டி நிலவினாலும் தி.மு.க-வுக்கும் அ.தி.மு.க-வுக்கும் இடையில்தான் உண்மையான போட்டி நிலவுகிறது. சமூகநீதி, மதச்சார்பின்மை, தமிழர் நலன்களைக் காப்பதில் எப்போதும் முதல் இடத்தில் இருக்கும் தி.மு.க. கூட்டணி 40 தொகுதிகளிலும் நிச்சயம் ஜெயிக்கும். அதற்கு விடுதலைச் சிறுத்தைகளும் பக்கபலமாக இருக்கும். எங்களுக்கு ஒதுக்கப்பட்ட இரண்டு தொகுதிகளிலும் நாங்கள் வெற்றிபெற்றால், தேர்தல் ஆணையத்தின் அங்கீகாரத்தைப் பெற முடியும். அடுத்த தேர்தலில் எங்களுக்கென சொந்தச் சின்னத்தில் போட்டியிட முடியும். அந்த எண்ணத்துடன்தான் இந்தத் தேர்தலை நாங்கள் எதிர்கொள்கிறோம்.

மதவாத சக்திகளுக்கும் மதச்சார்பற்ற சக்திகளுக்கும் இடையே நடக்கும் அறப்போராட்டம்தான் இந்தத் தேர்தல். என்ன... மதச்சார்பற்ற கட்சிகள் எல்லாம் தங்களுக்குள் ஒற்றுமையில்லாமல் ஆளுக்கொரு முகாமில் தேர்தலைச் சந்திக்க வேண்டிய நிலை. இந்த ஆபத்தான சூழலில் இருந்து சமூகநீதியைப் பாதுகாக்கும் கடமை எங்களுக்கு உண்டு. அதை உணர்ந்துதான் நாங்கள் சமூகநீதிக் கூட்டணியில் இணைந்துள்ளோம். மதவாத சக்திகள் ஜெயித்தால் சமூகநீதி சவக்குழிக்குப் போய்விடும். சமூகநீதி மீது நம்பிக்கை கொண்ட அத்தனை பேரும் எங்களோடு கைகோர்த்துப் போராட வர வேண்டும்."

**கேள்வி:-**"அப்படிப் பார்த்தால் இதற்கு முன்பே பி.ஜே.பி. ஆட்சியில் இருந்திருக்கிறதே?"

**பதில்:-**"மதவாதக் கருத்தியலை முன்வைக்கும் கட்சிகள், தேர்தல் அரசியலில் தொடர்ந்து பங்கெடுத்து வருகின்றன. அவர்கள் ஏற்கனவே மத்தியில் ஆட்சி அதிகாரத்தில் இருந்ததற்கும், இப்போது போட்டியிடுவதற்கும் நிறைய. வேறுபாடுகள் உள்ளன. 1999ஆம் ஆண்டு பிரதமர் வேட்பாளர் வாஜ்பாய். பல்வேறு மாநிலக் கட்சிகள் அவர்களுடன் கூட்டணி அமைத்தன.

இப்போது நரேந்திர மோடி பிரதமர் வேட்பாளர். குஜராத்தின் முதலமைச்சராக இருந்து அவர் செய்துள்ள சாதனைகளைவிட, அவரது கோட்பாடுகளை முக்கியமாக கவனிக்க வேண்டும். அவர், பாரதிய ஜனதா கட்சியிலேயே மிகவும் தீவிரவாதப் போக்கு கொண்டவர். குஜராத்தில் 2002ஆம் ஆண்டு வகுப்பு கலவரத்தில் ஆயிரக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டனர். கலவரத்தைக் கட்டுப்படுத்தத் தவறியது மட்டுமல்லாமல், அதை ஊக்கப்படுத்தினார் என்பதும் அவர் மீதான முக்கியக் குற்றச்சாட்டு.

அவரது அமைச்சரவையில் இடம்பெற்றிருந்தவர்கள் மதக்கலவரத்தில் ஈடுபட்டதாக நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டுள்ளனர். இத்தகைய கடும்போக்கு கொண்ட ஒருவரை இப்போது தனது பிரதமர் வேட்பாளராக அறிவித்துள்ளது. அந்தக் கட்சியின் தாய் அமைப்பான ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கு, பிரதமர் வேட்பாளரை நியமித்ததில் முக்கிய பங்கு உண்டு.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பு நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இல்லாதது. சில முறை மத்திய அரசே அந்த அமைப்பை தடைசெய்தும் இருக்கிறது.

அப்படிப்பட்டவர்கள் எப்படித் தேர்தல் அரசியலை நிர்ணயிக்க முடியும்? இந்தத் தேர்தலை உண்மையில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் வகுப்புவாத கொள்கைக்கும் இந்திய ஜனநாயகத்துக்கும் இடையிலான போட்டியாகவே நாங்கள் பார்க்கிறோம்."



திருமாவளவன்

**கேள்வி:-**"நரேந்திர மோடியால் சமூகநீதிக்கு ஆபத்து என்கிறீர்களா?"

**பதில்:-**"இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்தும்போது புரட்சியாளர் அம்பேத்கர், "அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு வாக்கு. எல்லா வாக்குகளுக்கும் ஒரே மதிப்பு என்ற அரசியல் சமத்துவத்தை நாம் ஏற்படுத்தி இருக்கிறோம்' என்று குறிப்பிட்டார்.

அந்த அரசியல் சமத்துவத்தை சமூக, பொருளாதாரத் தளங்களுக்கு விரிவுபடுத்தவில்லை என்றால், நாட்டின் ஜனநாயகத்தைக் காப்பாற்ற முடியாது. சமூகத்தின் கீழ் நிலையில் வைக்கப்பட்டுள்ளவர்களை மறவர்களோடு சமமாக வைப்பதற்கு செய்யப்படும் முயற்சிகளே சமூகநீதி நடவடிக்கைகள்.

இட ஒதுக்கீடு என்பது அதில் ஓர் அம்சம். ஏற்கனவே பி.ஜே.பி. ஆட்சியில் இருந்த காலத்தில் சமூகநீதி கொள்கையை அழித்தொழிக்கும் முயற்சியில் ஈடுபட்டது.

அரசியலமைப்பு சட்டத்தையே மாற்றி எழுதுவதற்காக நீதிபதி வெங்கடாச்சலய்யா தலைமையில் குழு ஒன்றை அமைத்தது.

நாடு முழுவதும் அதற்கு எதிர்ப்பு கிளம்பியதால், அந்தக் குழுவின் பரிந்துரைகளைக் கிடப்பில் போட்டுவைக்க நேர்ந்தது.

மீண்டும் அவர்கள் ஆட்சிக்கு வந்தால், அந்த முயற்சியில் திரும்பவும் ஈடுபடுவார்கள். ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் சிறுபான்மை மக்களுக்கும் காவல் அரணாகத் திகழும் நமது அரசியலமைப்புச் சட்டத்தின் காப்புக் கூறுகளை அழித்தொழிப்பதே அவர்களது நோக்கம்.

இட ஒதுக்கீடு உள்ளிட்ட

## சீறும் சிறுத்தை திருமாவளவன்

சமூக பாதுகாப்புகள் நமது அரசியலமைப்புச் சட்டத்தின் வழிகாட்டுதலின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டுள்ளது.

அந்த அரசியலமைப்பு சட்டத்தை ஒழித்துவிட்டால், சமூகநீதி இல்லாமல் போய்விடும். அப்படிப்பட்டவர்கள் ஆட்சிக்கு வந்தால், ஆபத்து இல்லாமலா போய்விடும்?"

**கேள்வி:-**"விஜயகாந்த், வைகோ, கம்யூனிஸ்ட்கள் என்று எல்லோரிடமும் நீங்கள் பேசினீர்களே... என்னாச்சு?"

**பதில்:-**"வகுப்புவாதத்தை எதிர்ப்பதில் கம்யூனிஸ்ட்கள் முனைப்புடன் உள்ளனர் என்பதை மறுக்க முடியாது. எனவே, மதச்சார்பற்ற வாக்குகள் சிதறிவிடக் கூடாது. மதவாதம் ஆட்சியில் அமர்ந்துவிடக் கூடாது. அதற்கு ஏற்ப முடிவெடுங்கள் என்றுதான் அவர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்தேன்.

ஆனால், இப்போது விஜயகாந்த், வைகோ ஆகியோர் ஒரு முடிவு எடுத்துவிட்டனர்.

அது முடிந்து போன விடயம். அதுபற்றி இனி பேசி பயன் இல்லை. இடதுசாரிகள் தனித்துப் போட்டியிட்டால், அவர்கள் நிற்கும் தொகுதிகளைத் தவிர்த்து மற்ற தொகுதிகளில் தி.மு.க. கூட்டணியை ஆதரிக்க வேண்டும் என்பதுதான் கம்யூனிஸ்ட்களுக்கு நான் வைக்கும் கோரிக்கை.

பி.ஜே.பி. ஆட்சிக்கு வந்தால், ஈழத் தமிழர்களுக்கு நன்மை கிடைக்கும் என்று வைகோ நினைக்கிறார். இலங்கைப் பிரச்சினையைப் பொறுத்தவரை காங்கிரசும் பி.ஜே.பி-யும் ஒன்றுதான் என்பது கடந்த கால வரலாற்றைப் புரட்டினால் புரியும்.


வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது இலங்கையில் தமிழர்கள் வணங்கும் இந்து கோயில்கள் இடித்து நொறுக்கப்பட்டன. அப்போது பி.ஜே.பி. அரசு கைகட்டி வேடிக்கைப் பார்க்கத்தான் செய்தது என்பதை வைகோ நினைவில் நிறுத்த வேண்டும்..."

**கேள்வி:-**"பாரதிய ஜனதா கூட்டணியில் ராம் விலாஸ் பஸ்வான் சேர்ந்துவிட்டாரே?"

**பதில்:-**"தம்மை. ஒரு மதச்சார்பற்ற கட்சியாகச் சொல்லிக்கொள்ளும் காங்கிரஸ் கட்சியின் முகம் வெளுத்துவிட்டது. கடந்த காலங்களில் மதவாதத்தை எதிர்த்து களம் கண்ட மாநிலக் கட்சிகள் பலவும் இப்போது பி.ஜே.பியுடன் கூட்டணி வைத்துள்ளது. இன்னும் சில கட்சிகள் தேர்தலுக்குப் பிறகு கூட்டு சேரும். 2002ஆம் ஆண்டு குஜராத் கலவரத்தைக் காரணம் காட்டித்தான் ராம்விலாஸ் பஸ்வான் பி.ஜே.பி. கூட்டணியில் இருந்து வெளியேறினார். இன்று அவர் அதே கூட்டணிக்குச் சென்றுவிட்டார். இது மதச்சார்பற்ற சக்திகளுக்கு இடையில் ஏற்பட்டிருக்கும் தொய்வு நிலையின் அடையாளம். நிச்சயம் இது ஒருநாள் மாறும். அந்த நாள் வெகு தொலைவில் இல்லை!"

ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கவிதைக் கலசம்

## நீ மட்டும் தான்...

உன்னை நேசித்த என்
இதயத்தின் சுவர்களில்
உன் பெயரை மட்டும்
பொறித்து விட்டதால்...
உயிரை விட மேலான
நம் காதலுக்கு பிரிவில்லை
என்று சொல்லித்தந்த- நீ இன்று
தனிமை எனும் வலியை
மட்டும் தந்து விட்டுச்
சென்றது- ஏன்...?
இன்னொரு ஜென்மம்
ஒன்றிலாவது இருவரும்
ஒருவராய் இணைவோமா...?
அன்பே- உன் நினைவுகள்
என் உயிர் பிரியும் தருணம்
வரை என்னைத் தொட்டுவிட்டே
செல்லும் என்னுள் இருப்பது
நீ மட்டும் தான்

**எஸ்.பாஸ்கரன்**
**சண்டிலிப்பாய் வடக்கு**

## விலைவாசி

துயர் விழுந்து கிடக்குமெம்
வாழ்வின் விடியல்கள்
அஸ்தமனத்திற்குள்தான்
அடங்கிக் கிடக்கிறதோ
அகப்பை பிடித்து உணவு
சமைத்த எம் கைகளால்- இப்போ
கொதிக்கும் வெயிலில்
சவள் பிடித்து
வீதி சமைக்கின்றோம்
கணவனை இழந்து
போரின் வலிகளையும்
சுமந்தது போதாதென்று
எஞ்சியிருக்கும் எம்
வாழ்வின் வலிகளை
எதுவரை சுமப்போம்
நிறைவாய்ப் புசித்திருந்த
காலம் மாறி -இப்போ
பசியிலும் விலைவாசியிலும்
தள்ளாடி வாழும் எம்மை
வீதிவரை விரட்டி விட்டு
வேடிக்கை பார்க்கிறது விதி

**அ.பூவானந்தன்**
**வயாவிளான்**

## ஆகாரம்! ஆதாரம்!

கலாசாரம் மறைந்து போனால்
கனக்க இங்கு மறைந்து போகும்
ஆகாரப் பழக்கம் கூட
அதுபோல மறந்து போகும்
ஆடையணிதல் மாத்திரமா?
ஆகாரமும் மாறிப்போகுதே!
வீட்டு நாயை துரத்திச் சென்று
கூசாமல் அதனைக் கொன்று
குட்ரேஸ்ற் அயிட்டம் ஆக்கி
பிய்த்து வாயில் போட்டிடுவான்
பிலிப்பைந்து நாட்டுக்காரன்
மலைப்பாம்பை கொண்டு வந்து
சமையல் கலையாலே சுவையாக்கி
விலையாக்கி விற்றிடுவான் சீனாக்காரன்
எச்சரிக்கை! ஜாக்கிரதை!
இந்தவகை இழவுகள்
என்றும் எமக்கு வேண்டாமடா!
இன்ன இன்ன உணவு என்று- எமக்கு
எண்ணில்லாத இன்சுவைகள்
எத்தனையோ உள்ளதடா- அதை விடுத்து
போகாத இடந்தனிலே போகவேண்டாம் தம்பி
ஆகாத உணவுகளும் எமக்கு வேண்டாம்

**வாணியழகன்**
**முரசுமோட்டை**

## இமயம் தொட...


உண்ண உணவின்றி
பசியால் வாழும் பாமரற்கு
பசியாற்று
அவர் முகம் மலர
உன் குலம் செழிக்கும்
நீ விதை விதைக்க தேவையில்லை
உன் வயல் விளையும்
வானம் பொழியும்
நீ ஆசீர்வதிக்கப்படுவாய்

மாவை.நா. கஜேந்திரன்

## வினை அறுப்பான்

படைத்தவன் காலடியில்
உடைத்தெறியப்பட்ட- பல
என்புக் கூடுகள்...!
விதைத்தவன் யாரெனத்
தெரியவில்லை- அந்த
ஈஸ்வரனுக்குமா!
இது புரியவில்லை...!
புதைத்தவன் விரைவில்
வெளிப்படுவான் இல்லையெனில்
அந்தப் படைத்தவன் விரைவினில்
படியளப்பான் என ஆறுதல் கொள்வோம்

**கிரு.செந்தூரன்**
**பருத்தித்துறை**



## வாழ்க்கைப் பாதை

பிஞ்சு வயதினிலே
நஞ்சகரால் வினையறுத்து
கொஞ்சு மொழி பேசிட
வஞ்சகரால் வாயடைத்து
பஞ்சுபாதம் பதித்து நடைபயில
நெஞ்சிலார் தடை விதித்து
கொஞ்சிய உறவுகளை
மாற்றான் பலியெடுத்து
மிஞ்சிய உயிர்களை
தனயன் கையில் பிடித்து
சிறகொடிந்த குஞ்சுகளாய்
நடுவீதியில்
வாழ்வின் பாதையைத் தேடி!

யூ.டினோஜன்
சக்கோட்டை

## சுமை

புத்தகப்பை
சுமக்கும் வயதில்
எனது தம்பி
தங்கையின்
வாழ்க்கையை சுமக்க
இன்றே
புறப்படுகிறேன்

ஜெ.அகல்யா
கொக்குவில்

# மௌனத்தின் தேடல் – 195

## தேடல்

பட்டுடை தரித்து
சிட்டாய் சிறகடித்து
சிங்காரமாய் பள்ளிக்கு
சஞ்சரிக்கும் வயதினிலே
அழுக்கு டயரில் அமர்ந்து
இழுக்கும் துன்பத்திலும்
கொழுத்தும் வெயிலிலும்
எதைத்தான் தேடுகிறீர்

பி.தனு
மல்லாவி

## தொடரும் பூசல்

உருண்டு செல்லும் டயர்கள்
அடுக்கி வைக்கப்பட்டாலும்
உருட்டிஓடி விளையாட
விரும்பினாலுமவர்களுக்கு
இது; இலகுவாய்க் கிடைக்காது
போரும் தொடர் பூசலாலும்
ஒடுக்கப்பட்டு நீண்ட காலம்
ஒதுக்கப்பட்டதாலின்றும்
தலைநிமிர முடியாத்தன்மை
நீடித்துச் செல்வதையே
இது நிரூபிக்கின்றது

அரு.கனகராசா
சாவகச்சேரி

## கனவு

இல்லம் இழந்த குழந்தைகள்
பொல்லாத பூமியில் வாழ்வதற்கு
கல்வி கற்று நற்பண்புடண் திகழ்ந்து
நீதி நிலைத்திட வாதிட வேண்டும்
நேற்று இன்று இல்லாத சுதந்திரக்காற்று
நாளை நம் தேசம் வரவேண்டும்
வல்லமை தமிழினம் பெறவேண்டும்
என்பதே எம் இனத்தின்
கல்லறைக் கனவு

க.[illegible]
வட்டுக்கோட்டை

## இல்லம்

சுற்றுமுற்றும் பார்க்கிறேன்
சுற்றத்தார் யாருமில்லை
தொட்டணைத்த அன்னையவள்
விட்டுவிட்டுப் போய்விடவே
அநாதை என்ற பெயரில்
அலைகிறோம் பாரிலே
எங்கும் எதிலும் எவர்க்கும்
இரக்கம் என்பது
மருந்தளவேனும் இல்லையே
எம்மை அணைத்தது
இந்த டயர் இல்லம்

தூரி,கலட்டி

## எதுவுமே இல்லை

பெற்றோரையும் இழந்தோம்
சுற்றத்தாரையும் இழந்தோம்
உரிமை கேட்ட எம் உறவுகளையும் இழந்தோம்
இனி இழப்பதற்கு என்னிடம்
எதுவுமே இல்லை- என் உடன்பிறப்புக்களை விட

த.மோகனரூபன், சுழிபுரம் கிழக்கு

## சமதரும தோழர்களே

பால் பழம் புசித்து
பஞ்சணையில் உறங்கும்
சமதரும தோழர்களே
நாங்கள் உண்ண உணவின்றி
உறங்க இடமின்றி எம் பெற்றோரை
தேடி அலைகின்றோம்
கருணை மனம் கொண்டு
எம் பெற்றோரை விடுவீர்களா?
அதுவரையும் இவ்விடமே
எங்கள் வாழ்விடம்

நா.தளையசிங்கம்
கொக்குவில்

## கயிறறுந்த பட்டங்கள்

நாலு பக்கம் டயர்கள்;
நடுவில் பிஞ்சு உயிர்கள்
வயிற்றினிலே நெருப்பு;
வாழ்வினிலே வெறுப்பு;
அன்னை தந்தையில்லை
அணைப்பதற்கு எவருமில்லை

அ.வாணி, முரசுமோட்டை

## ஆபிரிக்க வானம்

ஊனில்லை- உற்ற
உறக்கமில்லை -மானம்
காத்துவிட உடையும் ஒழுங்கில்லை
அழுக்கு டயருள் அந்தரிக்கும்
அநாதைகளின் சின்ன விளையாட்டு
சோமாலியாவும் உகண்டாவுமாய்
சோபிக்கப் போகின்றதோ
நம் தாய்த்தேசம்


கொக்காவிலூர் கஜந், துணுக்காய்

## ஜாக்கிரதை

பச்சிளம் பாலகர்களே
பாவிகள் சதியினாலோ?
பாதையிலே நிற்கிறீர்கள்...
பாலகனுக்கு கால் வலிக்குமென்றா
பாரமாய் சுமக்கின்றீர்
பாவம், பாதையிலே பாவிகள்
உம் உயிரை பலியெடுக்கக்கூடும்
பாதுகாப்பு கோருங்கள்...

ச.வராகி, குளவிசுட்டான்

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் –196



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 20.03.2014 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜெயக்குமாரி அவரது மகள் விபுசிகா விடுதலைகோரி கவனயீர்ப்புப் போராட்டம்

## வவுனியா பேருந்து நிலையம் முன்பாக முன்னெடுப்பு






(குருமன்காடு)

பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ள ஜெயக்குமாரி அவரது மகள் விபுசிகாவையும் விடுதலை செய்யக் கோரி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் இணைந்து ஏற்பாடு செய்த கவனயீர்ப்பு போராட்டம் வவுனியா பேருந்து நிலையம் முன்பாக நேற்று மதியம் 12 மணியளவில் இடம்பெற்றது.

கிளிநொச்சி தர்மபுரம் இந்திய வீட்டுத் திட்டத்தில் வசிக்கும் பாலேந்திரன் ஜெயக்குமாரி மற்றும் அவரது மகள் விபுசிகா பாலேந்திரன் (13வயது) ஆகிய இருவரும் கடந்த வியாழக்கிழமை பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களது நீதிக்குப் புறம்பான கைதுகளைக் கண்டித்தும் அவர்கள் இருவரதும் உடனடியான விடுதலைக்கு சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரியும் இக் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சட்டவிரோத கைதுகளை நிறுத்து, இராணுவமே வெளியேறு, அரசியல் கைதிகளை விடு தலைசெய், நீதி வேண்டும் காணாமற் போனவர்களுக்கு நீதி வேண்டும், பழிவாங்கலை நிறுத்து, காணாமற் போன எங்கள் பிள்ளைகள் எங்கே? என பல சுலோகங்களை தாங்கியிருந்தனர்.




தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினதும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸினதும் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில், அக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் மணிவண்ணன், ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகச் செயலர் பாஸ்கரா, மனித வுரிமை செயற்பாட்டாளர் பிரிட்டோ, Right to Life பெண்கள் மனித உரிமை அமைப்பினர், கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் களான சிவசக்தி ஆனந்தன், வினோநோக ராதலிங்கம், வடமாகாண சுகாதாரத்துறை அமைச்சர் சத்தியலிங்கம், வடமாகாணசபை உறுப்பினர்களான வைத்தியகலாநிதி சி.சிவமோகன், ரவிகரன், தியாகராசா, மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுத்தலைவர் செபமாலை அடிகளார், சமூக ஆர்வலர் சண்மாஸ்டர்,

வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவர் கி.தேவராசா, வவுனியா மாவட்ட காணாமற்போன உறவுகளை தேடும் சங்கத் தலைவி பாலேஸ்வரி, மீளக்குடியமர்ந்தோர் நலன் பேணும் அமைப்பின் தலைவர் மகேந்திரம், காணாமற்போன தம் உறவுகளை தேடும் குடும்பங்கள், தம் பிள்ளைகளின் விடுதலைக்காக ஏங்கும் குடும்பங்கள், அரசின் ஜனநாயக மறுப்பு சம்பவங்களால், ஏதேச்சதிகாரங்களால் பாதிக்கப்பட்டவர்கள், சமூக ஆர்வலர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்து கொண்டு அரசுக்கு எதிரான தமது எதிர்ப்பை பலமாக வெளிப்படுத்தினர். (2-9-250)

# வவுனியா நகரசபையில் டெங்கு பரவும் சூழ்நிலை


## துரிதகதியில் துப்புரவு செய்ய கோரிக்கை

(குருமன்காடு)

வவுனியா நகர சபையில் டெங்கு பரவக் கூடிய சூழல் காணப்படுவதனால், அவற்றை அகற்று மாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


நகர சபையின் பூப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் அமைந்துள்ள விளையாட்டு மைதானங்களின் பின்பகுதியில் ரயர், செருப்பு, பழைய பெட்டிகள் என்பன வீசப்பட்டுள்ளன.

இதனால் டெங்கு பரவக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அத்தோடு, விளையாட்டு அரங்கிலுள்ள மலசலகூடம் பாவிக்க முடியாத நிலை யில் காணப்படுகின்றது.



இதனால் விளையாட்டுகளில் ஈடுபடும் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அத்தோடு துர்நாற்றமும் வீசுவதாக உடற் பயிற்சியில் ஈடுபடுபவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, நகர சபை நிர்வாகம் உடனடியாக தலையீடு செய்து இவற்றை துப்புரவு செய்ய வேண்டுமென விளையாட்டுக்களிலும் உடற் பயிற்சிகளிலும் ஈடுபடுபவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-9-250)




# கொக்கிளாய் கரைவலைப்பாடுகளில் சட்டதிட்டங்கள் மீறி கரைவலை இழுப்பு

## ரவிகரன் நேரில் சென்று ஆதாரத்துடன் சுட்டிக்காட்டு

(குருமன்காடு)

முல்லைத்தீவு கொக்கிளாய் பகுதியில் சட்டதிட்டங்களை மீறி உழவு இயந்திரம் மூலமாக கரைவலை இழுப்பதாக ரவிகரன் தெரிவித்துள்ளார்.

சட்டங்களை மீறியதாக மீன்பிடிகள் மேற் கொள்ளப்படும் சந்தர்ப்பங்களில் அவை நிர்வாக அலகுகளின் அழுத்தங்களின் மூலம் மட்டுப்படுத்தப்படும் நிலையில் இன்று அரசியல் ஆதிக்கங்களினூடாக அனுமதிகளை பெற்ற சிங்களவர் தமிழர்களுக்கு உரித்தான இடத்தில் சட்டத்திற்கு முரணான வகையில் தொழில் செய்வதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்

தமிழ் மக்கள் இயற்கையையும் தொழிலையும் இறையாய் மதித்து தொழில் செய்து வந்தார்கள் ஆனால் இன்று எங்கள் தேசத்தில் தொழில் விழுமியங்கள் மீறப்பட்டு, சட்டதிட்டங்கள் களையப்பட்டு வலை வளைக்கப்படுகிறது.

முல்லைத்தீவு கொக்கிளாய் கரைவலைப் பாடுகள் தமிழர்களினுடையதாகவே ஆதாரங்கள் அனைத்தும் கூறுகின்றன.

தமிழ் மீனவர்களால் தொழில் விழுமியங்களுடன் தொழில் செய்யப்பட்ட பூர்வீக இடங்களாகவே இவை கருதப்படுகின்றன. 1983 இற்கு முன்னதாக, கரைவலை வளைப்பதற்கான அனுமதி பெற்று 12 பாடுகளில் 11 தமிழர்களே தொழில் செய்து வந்தனர்.

ஒவ்வொருவரும் சுமார் 30 தொடக்கம் 35 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி தொழில் செய்து வந்த நிலையில் தற்போது சிங்களவர்களுக்கு மேற்படி இடத்தில் தொழில் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது.

இந்நிலையில் உழவு இயந்திரத்தில் வலை இழுக்க முடியாது என்பது அரசாங்க சட்டமாக இருக்கின்ற போது , இவ்வாறான, சட்டத்திற்கு முரணான வகையில் தொழில் செய்கிறார்கள் என்ற தகவலை மக்கள் தெரிவித்தனர்.

இதை அடுத்து ஆதாரத்துடன் அவர்களை பிடிக்கவேண்டும் என்று கொக்கிளாய் சென்றிருந்தேன். இதன போது அங்கு வலை வளைத்து தொழில் செய்வதையும் அதுவும் உழவு இயந்திரத்தில் கயிற்றை இணைத்து இழுப்பதையும் நேரடியாக பார்வையிட முடிந்தது.

சட்டத்திற்கு புறம்பான வகையில் கரைவலை வளைக்கும் ஆதாரங்களை எடுத்துக் கொண்டு இது தொடர்பில் சட்டதிட்டங்களை மீறி யதாக தொழில் செய்யும் நிலையை அனுமதிக்க முடியாது என்று அவர்களையும் எச்சரித்து விட்டு திரும்பினேன்.

அரசியல் ஆதிக்கங்களுடன் அனுமதி பெற்று தொழில் செய்வது மட்டும் அல்லாது உழவு இயந்திரம் மூலம் தொழில் செய்யும் போது அங்கே பலரது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. பலரின் உழைப்பில் செய்யப்பட்ட கரைவலை தொழில் இன்று வெறும் உழவு இயந்திரத்தினால் செய்யப்படுகிறது. தடை களை இட்டு இவற்றை முடக்க முடக்க அரசியல் சலுகையினூடாக மீண்டும் இவை முளைத்துக் கொண்டே இருக்கின்றன. ஐ.நாவின் பார்வையில் இவையும் உள்ளடங்கட்டும் என்றார். (2-9-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாணா வெட்டி மத்திய மருந்தகத்திற்கு அம்புலன்ஸ் வண்டி தருமாறு

## வடமாகாண சுகாதார அமைச்சருக்கு கடிதம்

வலிகாமம் பிரதேசத்திலுள்ள தொல்புரம்-பாணாவெட்டி மத்திய மருந்தகத்திற்கு அம்புலன்ஸ் வண்டி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று வலி.மேற்கு கல்வி சுகாதார மேம்பாட்டுக் கழகம் கேட்டுள்ளது.

இது தொடர்பாக கடிதம் ஒன்றை வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் எஸ்.சத்தியலிங்கத்திற்கு அனுப்பியுள்ளார்.

அக் கடிதத்தில் குறிப்பிட்ட விடயங்கள் வருமாறு, தொல்புரம் பாணாவெட்டி மத்திய மருந்தகம் சுழிபுரம், தொல்புரம், கல்விளான், பாண்டவெட்டை, வறுத்தோலை, பொன்னாலை, மூளாய், பண்ணாகம் போன்ற பல பிரதேசங்களைச் சேர்ந்த ஏறக்குறைய 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்களுக்கான வைத்தியசாலையாக இருக்கின்றது.

இதில்பொன்னாலை, பாண்டவெட்டை போன்றன மீள்குடியேற்றக் கிராமங்களாகும். இராணுவ முகாம்கள் இருந்த இந்தப் பிரதேசங்களில் வெடிபொருட்கள் இருக்கமாட்டாது என்று கூறமுடியாது.மேலும் இங்கு இதுவரை பற்றைகள் உரியவாறு துப்புர வாக்கப்படவில்லை. இதனால் பாம்புகளின் தொல்லைகளும் அதிகமாக உள்ளன.

இதனால் பொது மக்களுக்கு அவசர நிலை ஏற்படும் போது அவர்களை யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கான அம்புலன்ஸ் வசதி இங்கு இல்லை. இது மக்களையும் நோயாளர்களையும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாக்குகின்றது.

பாணாவெட்டி மத்திய மருந்தகத்தில் சிகிச்சை பெறவருபவர்களில் ஏராளமானவர்கள் மேற்படி கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்களாவர். பொருளாதார வசதியற்ற நிலையிலுள்ள இந்தப் பிரதேசத்திலுள்ள மக்கள் மேற்படி அவசர நிலைகளுடன் திடீர் விபத்துக்களில் சிக்குவோர், பிரசவத்திற்காக துடித்துக் கொண்டிருக்கின்ற தாய்மார் போன்றோரை தூரத்திலுள்ள சங்கானை பிரதேச வைத்தியசாலை அல்லது யாழ்.போதனா வைத்திய சாலைகளுக்கு கொண்டுசெல்வதற்கு இவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். தற்போது போக்குவரத்துச் செலவுகள் அதிகமாக உள்ளமை இந்த மக்களை பாதித்துள்ளது.

இதனால் இந்த வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ்வண்டியொன்று வழங்கப்படும் பட்சத்தில் நோயாளரை உடனடியாகவே வேறு வைத்திய சாலைகளுக்கு கொண்டு சென்று மருத்துவ சேவைகளைப் பெற்றுக் கொடுப்பது இலகுவானதாக அமையும்.

எனவே தற்போது மத்திய அரசாங்கத்தினூடாக வடக்கு மாகாணத்திற்கு வழங்கப்படவுள்ள அம்புலன்ஸ் வண்டிகளில் ஒன்றை முன்னுரிமை அடிப்படையில் தொல்புரம் பாணாவெட்டி மத்திய மருந்தகத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் கேட்டுள்ளனர். (2)

# துடுப்பாட்டபோட்டி பார்வையாளர்களின் துவிச்சக்கரவண்டிகள் திருட்டு

யாழ்ப்பாணம் பூங்காப் பகுதியில் நான்கு துவிச்சக்கரவண்டிகள் நேற்றையதினம் களவாடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையிலான துடுப்பாட்ட போட்டியின் 3 ஆம் நாள் ஆட்டம் இடம்பெற்ற போது, இதனைப் பார்வையிட வந்தவர்களின் நான்கு துவிச்சக்கரவண்டிகளே திருட்டுப் போயுள்ளன.

பூங்காவிற்கு முன்பாக துவிச்சக்கரவண்டிகளை நிறுத்தி விட்டு போட்டியைப் பார்த்துவிட்டு சில மணித்தியாலங்களின் பின்னர் பார்த்த போது துவிச்சக்கரவண்டிகள் திருட்டுப்போயுள்ளமை தெரியவந்துள்ளது.

இது குறித்து அருகிலிருந்த பொலிஸாரிடம் துவிச்சக்கர வண்டியை தொலைத்தவர்கள் முறையிட்ட போது, முன்னரும் துவிச்சக் கரவண்டிகள் காணாமற் போனதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அவ்விடத்தில் பொலிஸார் மற்றும் தனியார் பாதுகாப்பு கம்பனிகளின் உத்தியோகத்தர்கள் பாதுகாப்பு கடமைக்காக நிறுத்தப்பட்டிருந்தும் சைக்கிள்கள் திருட்டுப் போயுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-9-23)

# பிரிவுத்துயர் பகிர்வு



### கனகரத்தினம் சிவனேஸ்வரன்

மானிப்பாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Kirchheim Teck ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் சிவனேஸ்வரன் கடந்த 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 19 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு Waldfriedhof Notzinger Steige 100, 73230 Kirchheim unter Teck , Germany என்னும் முகவரியில் நடைபெறும்.



### திருமதி தர்மகுலசிங்கம் குலதேவி

கொக்குவில் தாவடியைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் Lausanne ஐ வசிப்பிடமாகவும் கொண்ட தர்மகுலசிங்கம் குலதேவி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 19 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு Cimetiere de Montoie Maladiere, 1007 Lausanne, Switzerland என்னும் முகவரியில் நடைபெறும்.



### நல்லதம்பி குமாரசாமி

சுதுமலை வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி குமாரசாமி 13 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கட்டையடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### சுப்பிரமணியம் சபாரத்தினம்

சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் மல்லாகம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சபாரத்தினம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமா னார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.



### இராசையா லோகநாதன்

சுதுமலை வடக்கைச் சேர்ந்த இராசையா லோகநாதன் (ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர் ) 13 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### பரிமளம் கார்த்திகேசு

26/3 , சோமசுந்தரம் வீதியைப் பிறப்பிடமாகவும் 2, மருதடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பரிமளம் கார்த்திகேசு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமா னார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற்றது.



### சுப்பிரமணியம் சர்வானந்தன்

புங்குடுதீவு முதலாம் வட்டாரத் தைப் பிறப்பிடமாகவும் புங்குடு தீவு 8 ஆம் வட்டாரம், கொழும்பு கதிரேசன் வீதி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சர்வானந்தன் (ஓய்வு பெற்ற நிதி உதவியாளர் கல்வித்திணைக்களம்)கடந்த 12 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு பொரளை ஜெயரத்ன மலர்சாலையில் நடைபெற்று பூதவுடல் பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

# உலக உணவுத் திட்டத்திற்கு இலங்கை அரிசி அன்பளிப்பு

(கொழும்பு)

இலங்கை மக்கள் உலக உணவுத் திட்டத்துக்கு 50ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை அன்பளிப்பு செய்துள்ளனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து உலக உணவுத் திட்ட வதிவிடப் பிரதிநிதியான இலங்கை பணிப்பாளர் இஸ்மாயில் ஒமரிடம் இதனை நேற்று முன்தினம் கையளித்தார்.

2005 முதல் தொடர்ச்சியாக ஒன்பது வருடங்கள் மக்களுக்கு உரமானியம் வழங்கியமை,

நெல்லுக்கு உத்தரவாத விலை வழங்கியமை, தரிசு காணிகளில் அறுவடை, சலுகை கடன் விகிதத்தில் கடன் வழங்குதல் போன்ற அரசின் கொள்கையை அமுலாக்கும் நேரடி பெறுபேறாக 2013 முதல் இதுவரை 4.6 மில்லியன் மெற்றிக் தொன் நெல் உற்பத்தியானது.

அரிசியில் தன்னிறைவு நிலையையும் அடைந்துள்ளோம். பயங்கரவாதம், சுனாமி அனர்த்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்களால் இடம்பெயர்ந்தவர்களுக்கு உணவு வழங்குவதில் உலக உணவுத் திட்டம் பெரும் சேவையாற்றி உள்ளது.

இந்த ஒத்துழைப்பைப் பாராட்டி உலக உணவுத் திட்டத்துடனான உறவுகளை பலப்படுத்தும் நோக்குடன் இந்த அரிசி அன்பளிப்பு செய்யப்பட்டது.

50ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியில் உள்ளூரில் 10ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி விநியோகிக்கப்படும்.

மீதியான 40ஆயிரம் மெற்றிக் தொன் உலக உணவுத் திட்டத்துக்குரிய அங்கத்துவ நாடுகளுக்கு வழங்கப்படும்.

இந் நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, நிதி அமைச்சின் செயலர் கலாநிதி பீ. பீ. ஜயசுந்தர உட்பட உலக உணவுத் திட்டப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (2)

# சந்திப்பிற்கு நேரம் ஒதுக்குமாறு சந்திரிகா கடிதம் அனுப்பவில்லை

## ஜனாதிபதி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, தமக்கு எந்தவிதமான கடிதங்களையும் அனுப்பி வைக்கவில்லை என தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தம்மை சந்திப்பதற்காக நேரத்தை ஒதுக்குமாறு கோரியதாக சந்திரிகா ஊடகங்களில் தெரிவித்த போதிலும், அவ்வாறான கடிதம் எதுவும் கிடைக்கவில்லை என அவர் சுட்டிககாட்டியுள்ளார்.

அலரி மாளிகையில் அமைச்சர்கள் சிலருடன் நடத்திய சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதியை சந்திக்க ஆர்வமாக இருக்கின்றேன் என தெரிவித்து சந்திரிகா கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார். (2)

# கடை உடைக்கப்பட்டு பெறுமதியான பொருட்கள் திருட்டு

(கரணவாய்)

கரணவாய் மேற்கு புறா பொறுக்கி ஆலடிப் பகுதியிலுள்ள பல சரக்குக் கடை உடைக்கப்பட்டு சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

சம்பவதினம் கடையின் வியாபார நடவடிக்கைகளை முடித்து விட்டு உரிமையாளர் சென்ற தருணம் பார்த்து திருடர்கள் கடையின் முன்பக்க கதவை உடைத்து உள் நுழைந்துள்ளனர்.

அங்கிருந்த பால்மா வகைகள் உட்பட வேறு வகையான பொருட்களையும் அபகரித்துள்ளனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் வியாபார நடவடிக்கையை மேற்கொள்ள கடை உரிமையாளர் சென்ற போது திருட்டு இடம்பெற்றுள்ளதை அவதானித்துள்ளார்.

இதனையடுத்து, கடை உரிமையாளரினால் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (2-9-60)

# அர.சார்பற்ற நிறுவனங்களை சேர்ந்தவர்கள் இலங்கைக்கு எதிராக பிரசாரம்

(கொழும்பு)

அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த பதினைந்து பேர் இலங்கைக்கு எதிராக பிரசாரத்தில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜெனீவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை மாநாட்டில் அமெரிக்கா கொண்டுவரவுள்ள தீர்மானத்திற்கு இந்த நபர்கள் ஆதரவு திரட்டி வருகின்றனர்.

இந்த பதினைந்து பேரும் இலங்கையின் முக்கிய அரச சார்பற்ற நிறுவனங்களில் கடமையாற்றியவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டு இராஜதந்திரிகளை சந்தித்து நாட்டின் நிலைமைகள் குறித்து குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்பு வாசகர்களே!

அரசியல், ஆன்மீகம், சினிமா, பொழுது போக்கு தொடர்பான உங்கள் கேள்விகளை

ஆசிரியர், வியாசர் பதில்கள்
இல. 3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

கவிதா, இரணைமடு

✉ வியாசர் அவர்களுக்கு!

ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்கிறார்களே? பிளீஸ் உதாரணம் தர முடியுமா?

✎ காட்டில் ஒருவனை சிங்கம் துரத்தியது. அவன் பயத்தில் ஓடியபடி என்னை காப்பாற்று என கட வுளை வேண்டினான். உடனே கடவுள் வந்து உனக்கு ஒரே ஒரு வரம் தருகிறேன் கேள் என்றார். அவன் சிங்கத்தால் துரத்தப்படும் தமிழனைக் காப்பாற்று என்றான். கடவுளும் அருளினார். சிங்கத்திடமிருந்து அவனும் காப்பாற்றப்பட்டான். தமிழ் இனமும் காப்பாற்றப்பட்டது. புரியாவிட்டால் இரண்டு அல்லது மூன்று தடவை வாசிக்கவும்.

K. வாணி, புன்னாலைக்கட்டுவன்

✉ அன்பின் வியா அண்ணா!

திருமணம் முடித்து விட்டு இன்னொரு பெண்ணைக் காதலிக்கும் ஆண்களை என்ன செய்யலாம்?

✎ ஊசி இடம் கொடாமல் நூல் நுழைந்து விடாது.

வே.அகிலேஸ்வரன், மருதங்கேணி

✉ அன்பின் வியாசரே!

ஒழுக்கசீர்கேடுகள் அதிகம் நடக்கும் இடமாக எதைக் கருதுவீர்?

✎ மனிதனுடைய மனம் என்பதைவிட இதற்கான பதில் வேறு எதுவுமாக இருக்க முடியாது. இதை படிக்கும் ஒவ்வொருவரும் தங்களை எடைபோட்டுக் கொள்ளலாம். (என்னையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்)

## ஒழுக்கசீர்கேடுகள் அதிகம் நடக்கும் இடமாக எதைக் கருதுவீர்?

### கொஞ்சம் சிரிங்கப்பா...

என்ன சொல்ல விரும்பு கிறாய்?

பேஸ்புக்கில் உங்களுக்கு ஃபிரெண்ட் ரிக்வஸ்ட் கொடுத் திருந்தேன், நீங்கள் அதை இன்னும் அக்செப்ட் பண் ணவே இல்லை எஜமான்...



வெ.பிரகஸ்பதி, பருத்தித்துறை

✉ Hi வியாசர் அண்ணா!

உங்களுடைய முதல் காதல் பற்றி கொஞ்சம் கூறுங்களேன்?

✎ ஏற்கனவே இப்படியொரு கேள்விக்கு பதில் எழுதி நாலு ஐந்து நாளா சாப்பாடில்லாம கஷ்டப்பட்டுட்டன் பிளீஸ் (என் மனைவி ரொம்ப கோவக்காரியப்பா)

சி.சிவறீபன், புன்னாலைக்கட்டுவன்

✉ Hi வியாசர் அண்ணா!

என் மெகா தளபதி சூர்யாவின் அஞ்சான் எப்போது வரும் அடுத்து என்ன படம் நடிக்கப் போகிறார்? பதில் சொல்லுங்கள் தலைவா?

✎ அதிரடி இயக்குநர் லிங்குசாமியின் இயக்கத்தில் ஒகஸ்ட் 15 வெளியாகிறது.

## நிச்சயிக்கப்பட்ட திருமணத் தம்பதியினரின் வாழ்க்கை இனிது வாழுமா காதலித்து கைபிடித்தவரின் வாழ்க்கை இனிது நிறைவேறுமா?

த.மோகனரூபன், சுழிபுரம்.

✉ அன்பின் வியாசரே!

உங்களின் அறிவுத்திறனை கண்டு எனக்கு மெய் சிலிர்க்கின்றது. உங்களுக்கு எப்படி?

✎ மோகனரூபா உன் ஐஸ் வைப்பை நினைக்க எனக்கு எல்லாம் ஜில்லென்று ஆகிறதடா.

க.சி.சதாசிவம்,
மட்டுவில்

✉ அன்பின் வியாசரே!

உலகம் இப்போ எப்படிப் போகிறது?

✎ அண்மையில் எனக்குத் தெரிந்த ஒருவர் தன் பெயரை பேராசிரியர் என்று மாற்றியதாக கேள்விப்பட்டேன். அவரை சந்தித்து எண் ஜோதிடம் ஏதும் பார்த்து பெயரை மாற்றினீர்களோ என்று கேட்டேன். அவர் சிரித்து விட்டு இல்லை இல்லல... ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடித்து விட்டேன் என்றார். எனக்கு புரியவில்லை.

இன்றுமுதல் நானும் பேராசிரியராய் வாழ்வேன். என் மகனும் பேராசிரியராய் வாழ்வான் என்று சொல்லி சிரித்தபடி சென்று விட்டார். நான் இந்த உலகம் இப்படி போகிறதே என கடவுளை நொந்து கொண்டேன்.

எஸ்.விஜிதபாமா,
கோண்டாவில்

✉ அன்பின் அண்ணா!

நிச்சயிக்கப்பட்ட திருமணத் தம்பதி யினரின் வாழ்க்கை இனிது வாழுமா காதலித்து கைபிடித்தவரின் வாழ்க்கை இனிது நிறைவேறுமா?

✎ ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு யார் வாழ்கின்றார்களோ அவர்களின் வாழ்வே இனிதாய் அமையும்.

# ஆளுமையை விருத்தி செய்யும் நோக்கம் எமக்கு இருக்க வேண்டும்

## யாழ். மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சமூகத்திலுள்ள அநேகமானவர்களிடம் நேரிய சிந்தனைகள் அரிதாகவே காணப்படுவதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

யாழ். இராணுவம் மற்றும் பொதுமக்கள் தொடர்பு காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பாடசாலை மாணவர்களுக்கான ஆளுமை விருத்திச் செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தனிநபர் ஆளுமையானது தனிப்பட்ட விடயங்களில் மட்டுமல்லாது, பல்வேறு விடயங்களிலும் தங்கியுளளது. தற்போது நேர்மறையான சிந்தனைகளே சமூகத்தில் அதிகமாக காணபபடுகின்றன. நாங்கள் எதையும் செய்யக்கூடியவர்களென நினைத்து அவற்றைச் செய்ய மறந்து விடுகின்றனர்.

மேலும், ஏதாவது எதிர் மறையாகச் சொல்ல வேண்டுமென்பதிலேயே சிலர் ஆர்வமாக இருக்கின்றனர். எதற்கு எடுத்தாலும் நேர் மறையாக தங்களது நடத்தைகளை மாற்றிக்கொள்ளும் அங்கத்தவர்களும் இச்சமூகத்தில் இருக்கின்றனர்.

தவறு விடும்போது தவறை தெரிந்து கொள்வதுடன், தவறை உணர்ந்து அதற்கான காரணங்களை அறிந்து பின் சரியான முறையில் எம்மை திருத்திக் கொள்ள வேண்டும்.

எமது தவறை அடையாளங்கண்டு அது தொடர்பாக கவனம் செலுத்தும் தருணத்தில் எமது ஆளுமையை வளர்க்க முடியும். தனி நபர் ஆளுமையை வளர்ப்பதற்கு தனி நபர் என்ற அந்தஸ்துடன் செயற்பட வேண்டும்.

மேலும், குழு வேலைத்திட்டங்களில் பங்குகொள்பவர்களாக எம்மை மாற்ற வேண்டும். குழு வேலைகளில் எம்மை ஈடுபடுத்துவோமானால் மற்றவர்களின் அறிவு, அனுபவங்கள், செயற்பாடுகள் ஆகியவற்றை அறிந்து எம்மை வளர்க்கக் கூடியதாக இருக்கும்.

இவ்வாறான செயற்பாடுகளினால் ஏனையவர்களின் பல்வேறு திறமைகளையும் அனுபவங்களையும் பெறுவதன் மூலம் எமது ஆளுமையை வளர்க்கக் கூடியதாக இருக்கும். தனிப்பட்ட ஆளுமையை வளர்ப்பதன் மூலம் சரியான சமூகத்திற் கான தலைமைத்துவ பண்பைப் கொண்டவர்களாக மாறுவோம்.

பாடசாலை பருவத்தில் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகளும் சிந்தனைகளும் நிச்சயமாக [illegible] பண்புகளை [illegible] கொண்டு அவை அமைய இருக்கின்றன.

சமூகத்திற்கு ஆளுமை விருத்தியை பகிர்வதால் சமூகத்தில் உயர்வும் வளர்ச்சியும் காணப்படும்.

அபிவிருத்தி திட்டங்கள், இளைஞர் கழகங்கள், விளையாட்டு கழகங்கள் ஆகியவற்றில் எமது திறமைகளை வளர்த்துக்கொள்ளக் கூடியவர்களாகஇருக்க வேண்டும். இவையே எமது வாழ்நாள் படிநிலைகளில் முன்னேறக் கூடியதாக இருக்கும்.

இன்று பொறுப்புக்களை ஏற்க மறுக்கும் தன்மை அதிகமாக இருக்கின்றன. பொறுப்புக்களை ஏற்கும் தன்மை ஆளுமையை விருத்தி செய்யும் நோக்கத்துடன் இருக்கின்றது.

நேரிய சிந்தனையில் முடியும் என்ற முயற்சி எமக்கு இருக்க வேண்டும். எம்மால் முடியாவிட்டாலும்கூட குறிக்கப்பட்ட விடயங்களை எடுத்துச் செய்வதனால், எமது ஆளுமையை விருத்தியடையச் செய்யலாம். எடுத்த எடுப்பில் முடியாது எனச் சிந்திப்பது எமது ஆளுமை விருத்தியை குறைக்கும் தன்மையை அதிகரிப்பதாக இருக்கும்.

சிந்தனைகள் மற்றும் பழக்கவழக்கங்கள் ஆளுமைச் சக்தியாக அமையும் என்பதை கருத்திற் கொண்டு சிறந்த ஆளு[illegible] வளர்க்க வேண்டும் என அவர் [illegible] தெரிவித்தார். (2-6)

## பேருந்து கட்டணம் குறைப்பு

அதிவேக பாதையில் பேருந்து கட்டணம் குறைக்கப்பட்டுள்ளதாக அதிவேக வீதிப் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அதிவேக பாதையில் ஆராய்ந்து அறிந்த ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய நேற்று குறைக்கப்பட்டுள்ளது என அதிவேகவீதிப் பிரிவின் பணிப்பாளர் டி.ஏ.ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மாத்தறை கொடகம சந்தியிலிருந்து காலியிலிருந்து மாத்தறை வரையான பிரிவை ஜனாதிபதி திறந்து வைத்தார்.அதன்பின்னர் நேற்றைய தினம் புதிய பேருந்து கட்டணம் நடைமுறைப்படுத்தப்படும் என அவர் தெரிவித்தார். (2)

## இலங்கை மீனவர்கள் 25 பேர் விடுதலை

சென்னை புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த இலங்கை மீனவர்கள் 25 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை சிறையில் இருந்து தமிழக மீனவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். தற்போது, தமிழக சிறையில் உள்ள இலங்கை மீனவர்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதற்கமைய சென்னை புழல்சிறையில் அடைக்கப்பட்டிருந்த இலங்கை மீனவர்கள் 24 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், சைதாப்பேட்டை சிறுவர் சீர்திருத்த பள்ளியில் இருந்த இலங்கை சிறுவனும் விடுவிக்கப்பட்டுள்ளார்.

விடுதலையான இலங்கை மீனவர்கள் நேற்று காரைக்கால் கொண்டு செல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து, கடலோர காவற்படையினர் மூலம் மீனவர்கள் இலங்கை கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பேச்சுவார்த்தைக்கு ஏதுவாக தற்போது இலங்கை மீனவர்களையும் தமிழக அரசு விடுதலை செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்தை படுகின்ற பாட்டில
குத்தியன் பாலுக்கு அழுதானாம்

– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அவர்கள் எங்களுக்காய் பசியிருக்க நாங்கள் பியர் குடித்து ஆடலாமோ?

*அன்பு வாசகர்களே! 15.03.2013 அன்று எழுதிய ஆசிரியர் தலையங்கம் உங்கள் ஞாபக மூட்டலுக்காக மீளவும் இங்கு தரப்படுகின்றது.*

*குறித்த ஆசிரியர் தலையங்கம் எழுதப்பட்டு சரியாக ஒருவருட நிறைவு நாளான நேற்று (15.03.2014) கிரிக்கெட் போட்டியின் பெயரால் நம் யாழ்ப்பாண மண்ணில் ஒரு கொலை நடந்து போயுள்ளது என்ற சோகமான செய்தியோடு இதனை வாசித்துக் கொள்ளுங்கள்.*

தா.. தா.. தா.. தா.. தா.. தா.. தா.. குறைக்கு என் செய்வேன் என்று ஏழு தடவை கள் ‘தா’ சொல்லி வி.கல்யாணசுந்தரனார் கவி பாடினார்.

**எழுதாக் குறைக்கு என் செய்வேன்...** என் பதையே அவர் மேற்கண்டவாறு இயம்பினார்.

எழுதாக் குறைக்கு என் செய்வேன் என்று வி.கல்யாணசுந்தரனார் பாடியதை ஈழத்தமிழர்களாகிய நாங்கள் நினைந்து நினைந்து வெம்புகின்றோம்.

அந்தளவுக்கு எங்கள் மண்ணில் வேதனை வாட்டுகிறது. முப்பது ஆண்டு கால போராட்டத்தின் பின் விடிவும் இல்லை விடுதலையும் இல்லை என்றாகிய துன்பத்திற்கு அப்பால், எங்கள் பிள்ளைகள் – எங்கள் மாணவர்கள், நடந்து கொள்ளும் முறைகண்டு மனம் வெம்புகின்றது.

உலகம் முழுவதும் ஈழத் தமிழர்கள் தொடர்பில் ஜெனிவாவில் நடக்கின்ற வாதப் பிரதிவாதங்களில் கண்ணும் கருத்துமாக இருக்க,

இலங்கைத் தமிழர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். அங்கு நடந்த போர்க்குற்றங்கள் விசாரிக்கப்பட வேண்டும்எனக்கோரிக்கை வைத்து தமிழகத்தின் லொயலா கல்லூரி மாணவர்கள் கடந்த ஒரு சில நாட்களுக்கு முன்னதாக நான்கு நாட்கள் தொடர்ச்சியாக உண்ணாவிரதம் இருந்தனர்.

எங்களுக்கு ஆதரவாக அந்த மாணவர்கள் பசி நோன்பு இருக்கையில் எங்கள் மண்ணில் எங்கள் பிள்ளைகள் பியர் போத்தலுடன் வீதிகளில் நின்று கும்மாளம் போடுகின்றனர். இதனைப் பார்க்கின்ற போது இதயம் எரிந்து போகிறது.

ஜெனிவாவில் எடுக்கப்படுகின்ற தீர்மானம் ஒன்று தான் எங்கள் வாழ்வைத் தீர்மானிக்கும் என்று இருக்கும் வேளையில், கிரிக்கெட் போட்டியின் பெயரால் பிரபல்யமான பாடசாலைகளில் உயர்தரத்தில் கல்வி கற்கின்ற ஒரு குறிப்பிட்ட மாணவர்கள் பியர் அருந்தி வீதிகளில் நின்று ஆடுகின்றனர்; பாடுகின்றனர்.

அந்தோ! இதைவிட அநியாயம் வேறு எதுவும் இருக்க முடியாது.

அன்புக்குரிய மாணவர்களே! வன்னிப் பெருநிலப்பரப்பில் உயிரிழந்து போனவர்கள் பற்றி உங்கள் இதயம் இம்மியும் நினைக்கவில்லையா?

காணாமல் போன பிள்ளைகளுக்காய் தாய்மார்கள் கண்ணீர் விடுகின்ற துன்பியலை நீங்கள் கண்டதே இல்லையா? ஏன் தான் இப்படி நடந்து கொள்கிறீர்கள்?

லொயலா கல்லூரி மாணவர்கள் எங்களுக்காக உண்ணா நோன்பிருக்க நாங்கள் கிரிக்கெட் விளையாடுவதா? என்று எழுந்து நின்று கேட்க வேண்டிய நீவிர், பியர் குடித்து வீதியில் அட்டகாசம் செய்வது முறையோ!

உங்களிடம் இரக்கம் என்பதும் ஒப்புரவு ஒழுகல் என்பதும் அடியோடு அறுபட்டு போனதோ? அல்லது ஈழத்தமிழன் பாழாய்ப் போகட்டும் என்று நினைத்த பிரம்மன் அதை உங்களிடம் படைக்காது விட்டானோ?

எம் உறவின் உயிர்ப்புகளே! மாணவர் சக்தி மாபெரும் சக்தி என்ற கோசத்தின் அதிர்வுகள் இப்போதும் எங்கள் காதுகளில் ஒலிக்கின்றன.

அந்த அதிர்வுக்கு களங்கம் கற்பித்து விடாதீர்கள்.

# இலங்கையில் முதல் முறையாக சிறைக்கைதிகளுக்கென பாடசாலை

இலங்கையில் சிறைக்கைதிகளுக்கு என தனியான பாடசாலையொன்று எதிர்வரும் வெள்ளிக்கிழமை திறக்கப்படவிருப்பதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

கொழும்புக்கு வெளியே ஹோமாகம பிரதேசத்திலுள்ள வட்டரஹெல சிறைச்சாலையை ஒட்டி அமைந்துள்ள இந்த பாடசாலை இலங்கையில் சிறைக் கைதிகளுக்கான முதலாவது பாடசாலை என அமைச்சு கூறுகின்றது

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு இணைந்தாக அமையவுள்ள சிங்கள மொழி மூலமான இந்த பாடசாலை எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குற்றச் செயலொன்றின் காரணமாக கைதியொருவரின் கல்வி இடைநடுவில் தடைப்பட்டிருந்தால், அதனை அவர் தொடர்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி கொடுப்பதே இதன் நோக்கம் என்கின்றார் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் ஜி. எஸ் விதானகே .

8ஆம் தரத்திலிருந்து கற்பித்தல் ஆரம்பிக்கப்படும் இந்த பாடசாலையில், ஜி. சி. ஈ சாதாரண தரம மற்றும் உயர்தரம்வரை பாடம் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறுகின்றார்.


“அரசாங்க பாடசாலை போன்று தான் சிறைச்சாலை பாடசாலையும் செயல்படும். பாடவிதானம், ஆசிரியர் வளம், இலவச பாடநூல் , சீருடை அனைத்தும் கல்வி அமைச்சினால் வழங்கப்படும். பாடசாலை நிர்வாகம் முழுமையாக கல்வி அமைச்சுடன் தொடர்புடையதாக இருக்கும். கைதிகளை பாடசாலை ஒழுங்கு விதிகளுக்கமைய அங்கு அனுப்புவதுதான் சிறைச்சாலை திணைக்களத்தின் பொறுப்பு” என விதானகே தெரிவித்தா.

சிறைச்சாலைகளிலுள்ள 16 வயது தொடக்கம் 30 வயது வரையிலான கைதிகளில் கல்வியை தொடர விரும்புவர்களிடம் விருப்பம் பெறப்பட்டு போட்டிப்பரீசை மூலம் தெரிவான 120 பேர் முதற்தொகுதியாக் இந்த பாடசாலையில் அனுமதி பெறவிருப்பதாகவும் தெரிவிக்கின்றார்.

பாடசாலை கல்விக்கு மேலதிகமாக கணினி மற்றும் ஆங்கிலம், தமிழ், கொரியன் மொழி ஆகியன கற்பதற்கான வசதிகளும் இவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் அதற்கான நிலையங்களும் பாடசாலை வளாகத்தில் அமைகின்றது.

தமிழ் மூல பாடசாலையொன்றை ஆரம்பிப்பதற்கும் நோக்கம் இருந்தாலும் தகுதியான தமிழ் கைதிகள் போதுமானதாக இல்லை, எதிர்காலத்தில் அவ்வாறாக பாடசாலை அமையும் போது அது வட-கிழக்கு மாகாணங்களிலே அமையும் என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் கூறினார். (செ-11)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை



### வந்தனை செய்திடடா தம்பி

மன்றுபறித் துண்ணாதே மாயத்திற் சிக்காதே
குன்றுபோல் நின்றிடடா– தம்பி!
குறைவொன்று மில்லையடா

இந்தப்பத்துப் பாடலையும் இரவும்பக லுஞ்சொல்லி
வந்தனை செய்திடடா– தம்பி!
வறுமைபிணி தீருமடா

# மனக்கலக்கம் மற்றும் புதிய நம்பிக்கையுடன் மாற்றம் பெறுவோம்

தவக்காலத்தின் 2ஆவது ஞாயிறு ஆகிய இன்று எமக்குத்தரப்படும் பைபிள பகுதியில் “இயேசு தோற்றம் மாறுதல்” நிகழ்வு விளக்கப்படுகின்றது. தவக்காலத்தின் முதல் ஞாயிறன்று இயேசு சந்தித்த சோதனைகளைப் போராட்டங்களைப்பற்றி சிந்தித்தது நினைவிருக்கும். இன்று எம்மில்பலர் தவக் காலத்தில் சோதனைகளைப்பற்றி சிந்திப்பது சரியாக இருக்கின்றது. ஆனால், ஏன் தவக்காலத்தில் இயேசு தோற்றம் மாறும் நிகழ்வை சிந்திக்க வேண்டும் என்ற கேள்வியை கேட்கின்றோம். சோதனைகள், போராட்டங்கள் எம்மனித வாழ்வின் இணைபிரியாத ஓர் அனுபவம் என்பது உண்மை. சோதனைகளை, போரட்டங்களை சந்திக்கும் போதே நாம் மாற்றம் காண்கின்றோம். எனவே உருமாற்றமும் மனித வாழ்வின் மையமான ஓர் அனுபவம் தானே. பிறந்த எவ்வுயிரும் மாற்றமின்றி இருக்க முடியாது என்பதும் உண்மை. இன்னும் சொல்லப் போனால், உயிருள்ள, உயிரற்ற அனைத்துமே மாற்றம் பெறுகின்றன என்பதும் உண்மையே. எனவே உலக நியதியான மாற்றத் தைப் பற்றி சிந்திக்க இன்று முற்படுவோம.

## பரமபிதா காட்டிய பாதை

“இயேசு தோற்றம் மாறுதல்” என்ற இந்நிகழ்வு, ஒரு மலைமீது குறுகிய நேரமே நடந்தது. அங்கு சீடர்களின் அச்சத்தைப் போக்கிய இயேசு அவர்களைத் தொட்டு பேசுகிறார். அவர்கள் தரையில் விழுந்த நிலையில் அப்படியே கிடப்பது சரியல்ல, மாறாக, அவர்கள் எழவேண்டும் என்று திடப்படுத்துகினறாா். அவர்கள் பெற்ற இறை அனுபவம் அவர்கள் இயேசுவின் மீது நம்பிக்கை கொள்ள வழியாகியது. அதைத் தொடர்ந்து, சீடர்களும் இயேசுவும் மீணடும் தங்கள் வழக்கமான உலகத்திற்கு இறங்கி வந்து, தங்கள் பணிகளைத் தொடர்ந்தனர். அந்த மலையில் ஏற்பட அனுபவம், சீடர்களின் மனதில் ஆழமாய்ப் பதிந்து, அவர்கள் வாழ்வில் நல்ல பல மாற்றங்களை உருவாக்கியது. இயேசுவின் சீடராகிய நாமும் இந்த இறை அனுபவம் பெறவேண்டும். இந்த இறை அனுபவத்தை நாமும் உள்ளார உணரவேண்டும். அதற்கு இயேசுவில் நாம் கொண்டுள்ள நம் பிக்கையை உறுதியாக்க வேண்டும். அப்போது நம் அச்சம் நீங்கும். நாமும் எழுந்து சென்று, ஊக்கத்தோடு இயேசு வுக்குச் சான்று பகர்வோம்.

உருமாற்றம் என்றால் என்ன? ஏன், எப்படி, அது உண்டாகிறது? மாற்றம் தேவைதானா? மாற்றம் நல்லதா, கெட்டதா? இப்படி வினாக்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இந்தவிடத்தில் படித்ததில் பிடித்த கூட்டுப் புழுவும், வண்ணத்துப்பூச்சியும் என்ற தலைப்பில் ஆன ஒரு சம்பவத்தை பகிர்வது சாலப்பொருத்தம்: ஒருவர் ஏதேச்சியாக கண்ட ஒரு கூட்டுப்புழுவில் ஓர் ஓட்டை வந்தது. அதைப்பார்த்த அவனுக்கு ஆவல். உள்ளிருந்த ஓர் உயிர் அசைந்தாடி ஓட்டையைப் பெரிதாக்க முயன்றதைப் பார்த்தான். சீக்கிரம் கூட்டை உடைத்து, வண்ணத்துப்பூச்சி வெளியே வந்து பறந்து போகும் என்று காத்திருந்த அவனுக்கு பெரும் ஏமாற்றம் காத்திருந்தது. ஒன்றும் நடக்கவில்லை. ஒருவேளை உள்ளிருந்த உயிரால் ஒன்றும் செய்ய முடியவில்லையோ என்று எண்ணினான். அதற்கு உதவி செய்யும் எண்ணத்தோடு அந்த ஓட்டையை இன்னும் பெரிதாக்கினான். உள்ளிருந்து ஒரு பூச்சி வெளியே வந்தது. பார்ப்பதற்கு விகாரமாய் இருந்தது. ஊதிப் பெருத்த உடல், ஆனால் சுருங்கிப் போன இறக்கைகள். அந்தப் பூச்சி எவ்வகையிலும் அவன் எதிர்பார்த்துக் காத்திருந்த வண்ணத்துப் பூச்சியைப் போல் இல்லை. எந்த நேரத்திலும் அந்த அசிங்கமான பூச்சி மாற்றம் பெற்று வண்ணத்துப்பூச்சியாகும் என்று எதிபார்த்திருந்த அவனுக்கு ஏமாற்றம் கூடியது, அந்தப் பூச்சி, பூச்சியாகவே ஊர்ந்து வந்ததே தவிர வண்ணத்துப் பூச்சியாக மாற்றம் பெறவில்லை.

உதவி செய்வதாக நினைத்து அவன செய்த ஓட்டையை பெருப்பித்த செயல் விபரீதமாக முடிந்தது. இயற்கையின் போக்கு அவனுக்கு தெரிந்திருந்தால இப்படி அவன செய்திருக்க மாட்டான்.



கூட்டுப் புழு அந்தக் கூட்டிலிருந்து வெளி யேற மேற்கொள்ளும் போராட் டம் நீண்டதொரு போராட்டம்.

ஆனால், அந்த போராட்டத்தின் போது அதன்உடலிலிருந்து வெளியேறும் திரவம், அந்தப் புழுவின் உடலைச் சுருக்கும், இறக்கைகளைப் பெரிதாக்கும். போராட்டத்தின் இறுதியில் அழகான வண்ணத்துப்பூச்சி வெளியேறி பறக்கும்.


கூட்டுப் புழு பார்க்க அழகில்லாதது. வண்ணத்துப்பூச்சி அழகுக்கு இலக்கணமாய் அமைவது. இந்த மாற்றம் உருவாக, அதற்கு போராட்டம் தேவை.

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

இவ்வாறு எம்வாழ்க்கையிலும் மாற்றம் எற்பட போராட்டம் தேவை. போராட்டம், சோதனை, துன்பம் இவை ஈன்றெடுக்கும் குழந்தைதான் மாற்றம். வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்கள், அந்த மாற்றங்களை எதிர்கொள்ள நாம் மேற்கொள்ளும் போராட்டங்கள் இவை நம்மையும், நமது சூழ்நிலைகளையும் மாற்றும். இதைப் நாம் புரிந்து கொள்ளாமல், போராடும் மற்றொருவருக்கு உதவுவதாக நினைத்து, குறுக்கு வழிகளை அவருக்குச் சொல்லித் தரும் போது, விபரீதங்கள், விவகாரங்கள், விகாரங்கள் நேரவும் வாய்பபு உண்டு.இயேசுவின் தோற்றம் மாறுதல் காட்சியிலேயே சுகம்கண்டு தங்கிவிடாமல், உள்ளுர உருவான மாற்றங்களுடன் போராட்டமான தங்கள் வாழ்வை இயேசுவின் வழியில் சீடர்கள் தொடர்ந்தனா். நாமும் எம்வாழ்வை உண்மையான, உள்ளார்ந்த மாற்றங்களுடன் தொடர தொடங்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சண்டிலிப்பாய் கோட்ட கிரிக்கெட்; மானிப்பாய் இந்து சம்பியன்



சண்டிலிப்பாய் கோட்ட பாடசாலைகளுக் கிடையிலான விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இதன் ஒரு அங்கமாக கிரிக்கெட் போட்டி கள் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதா னத்தில் இடம்பெற்றன.

இடம்பெற்ற ஆண்களுக்கான போட்டி களின் அடிப்படையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி சம்பியனாகியது.

2 ஆவது இடத்தை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் 3 ஆம் இடத்தை இளவாலை ஹென்றியரசர் கல்லூரியும் வென்றன.

பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர் தரப் பாட சாலை அணி சம்பியனாகியது.

2 ஆம் இடத்தை மாதகல் சென் ஜோசப் மகா வித்தியாலய அணி வென்றது.

இடம்பெற்ற இப் போட்டிகளின் அடிப் படையில் வெற்றி பெற்ற அணிகள் அடுத்த வலய மட்டப் போட்டிக்கு தகுதி பெற்றுள் ளது. (க-23)

SPORTS விளையாட்டுச் செய்திகள்

## வேலணைப் பிரதேச இளைஞர் கழக

# கிரிக்கெட் சுற்றுப் போட்டி; நண்பர்கள் இ.கழகம் சம்பியன்



நண்பர்கள் இளைஞர் கழகம்



துறையூர் இளைஞர் கழகம்

வேலணைப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளை ஞர் கழகங்களுக்கிடையிலான பெரு விளை யாட்டுப் போட்டிகளில் இடம்பெற்ற ஆண்க ளுக்கான கிரிக்கெட் போட்டிகளில் நண்பர் கள் இளைஞர் கழக அணி சம்பியனாகியது.

இடம்பெற்ற போட்டிகளின் படி இறுதிப் போட்டிக்கு நண்பர்கள் இளைஞர் கழக அணியும் வேலணை துறையூர் இளைஞர் கழக அணியும் தெரிவானது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாடிய நண்பர்கள் இளைஞர் கழக அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 36 ஓட் டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பாடிய வேலணை துறை யூர் இளைஞர் கழக அணி சகல விக்கெட்டுக் களையும் இழந்து 33 ஓட்டங்களை மட் டுமே பெற்றது.

இதன்படி இப் போட்டியில் நண்பர்கள் இளைஞர் கழக அணி வெற்றி பெற்று சம்பிய னாகியது. (க-23)

# வடமராட்சியின் சமர்; உதயதாரகை சம்பியன்



சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வந்த வடமராட்சியின் சமர் என்று அழைக்கப்படும் அணிக்கு 5 பேர் கொண்ட காற்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றது.

இந்த சுற்றுப்போட்டியில் இறுதிப்போட்டி அண்மையில் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் உதயதாரகை விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணியினை வென்று சம்பியனாகியது.

மேற்படி சுற்றுப்போட்டியில் 24 அணிகள் பங்குபற்றியிருந்ததுடன். போட்டிகள் அனைத்தும் விலகல் முறையில் நடைபெற்றுவந்தன.

அதனடிப்படையில் அரையிறுதிப் போட்டிகளில் உதயதாரகை அணி 2:0 என்ற கோல் கணக்கில் மனோகரா விளையாட்டுக்கழக அணியினையும். கொலின்ஸ் அணி 3:1 என்ற கோல் கணக்கில் திக்கம் இளைஞர் விளை யாட்டுக்கழக அணியினையும் வென்று இறுதிப்போட்டிக்குள் நுழைந்தன.

இச்சுற்றுப்போட்டியின் தொடர் நாயகனாக உதயதாரகை அணியின் சுரேந்திரன் வாகீசன். இறுதிப்போட்டியின் நாயகனாக அதே அணியின் குயின்தீன் ஜன்சன். சிறந்த கோல் காப்பாளராக கொலின்ஸ் அணியின் எஸ்.நிரோஜ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (க-23)







வேலணை சைவப் பிரகாச வித்தியாலயத்தில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் பாடசாலை அதிபர் திருமதி. சோமாவதி கிருபானந்தன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன். கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே.என்.விந்தன் கனகரத்தினம். சிறப்பு விருந்தினர்களாக வேலணை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ம.கிருபானந்தராசா. வேலணை மத்திய கல்லூரி அதிபர். சி. கிருபாகரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். பா.உ சி.சிறிதரன் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்குவதையும். இடைவேளை நிகழ்வையும். விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (23)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உலக கிண்ண இருபது-20 போட்டி பங்களாதேஷில் இன்று ஆரம்பம்

கிரிக்கெட் ரசிகர்களை வெகுவாக கவர்ந்த போட்டி இருபது-20 போட்டியாகும். ஐ.சி.சி. (சர்வதேச கிரிக்கெட் கவுன்சில்) 2007-ம் ஆண்டு 20 ஓவர் உலக கோப்பையை அறிமுகப்படுத்தியது.

தென்னாபிரிக்காவில் நடந்த முதலாவது ஐ.சி.சி. 20 ஓவர் உலக கோப்பையை தோனி தலைமையிலான இந்திய அணி கைப்பற்றியது. 2009-ம் ஆண்டு பாகிஸ்தானும், 2010-ம் ஆண்டு இங்கிலாந்தும், 2012-ம் ஆண்டு வெஸ்ட் இண்டீசும் உலக கோப்பையை வென்றன.

5-வது 20 ஓவர் உலக கோப்பையை வங்காளதேஷ் நடத்துகிறது. இந்த போட்டி நாளை (16-ந்தேதி) தொடங்குகிறது. ஏப்ரல் 6-ந் தேதி வரை இந்த போட்டி நடைபெறுகிறது.

இதில் 16 நாடுகள் பங்கேற்கின்றன. ஐ.சி.சி. தரவரிசையில் முதல 8 இடங்களில் உள்ள அணிகள் நேரடியாக முதன்மை சுற்றில் விளையாடும்.

மற்ற 8 அணிகள் தகுதி சுற்றில் விளையாடும். இவை 2 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளது. 'ஏ' பிரிவில் போட்டியை நடத்தும் பங்காளதேஷ், ஆப்கானிஸ்தான், ஆங்காங், நேபாளம் ஆகிய அணிகளும் 'பி' பிரிவில் ஜிம்பாப்வே, அயர்லாந்து, நெதர்லாந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிகளும் இடம் பெற்று உள்ளன.

ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். இரண்டு பிரிவிலும் முதல் இடத்தை பிடிக்கும் அணி முதன்மை சுற்றுக்கு தகுதி பெறும்.

முதன்மை சுற்றில் விளையாடும் 10 அணிகள் 2 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலும் 5 அணிகள் இடம் பெற்றுள்ளன. இதில் இடம் பெற்றுள்ள அணிகள் விவரம்:-

குரூப் 1: தென்னாபிரிக்கா, இலங்கை, இங்கிலாந்து, நியூசிலாந்து. தகுதி சுற்றில் வெல்லும் அணி ('பி' பிரிவில் முதல் இடத்தை பிடிக்கும் அணி).

குரூப் 2: இந்தியா, அவுஸ்திரேலியா, வெஸ்ட் இண்டீஸ், பாகிஸ்தான். தகுதி சுற்றில் வெற்றி பெறும் அணி ('ஏ' பிரிவில் முதல் இடத்தை பிடிக்கும் அணி)

ஒவ்வொரு அணியிலும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா 1 முறை மோத வேண்டும். 'லீக்' முடிவில் புள்ளிகள் அடிப்படையில் இரண்டு பிரிவிலும் முதல் 2 இடங்களை பிடிக்கும் நாடுகள் அரை இறுதிக்கு தகுதி பெறும்.

நாளைய தொடக்க நாளில் 2 ஆட்டம் நடைபெறுகிறது. 'ஏ' பிரிவில் உள்ள பங்காளதேஷ்- ஆப்கானிஸ்தான், ஆங்காங்- நேபாளம் அணிகள் மோதுகின்றன.

21-ந்தேதி வரை தகுதி சுற்று நடக்கிறது. அன்றே முதன்மை சுற்றும் தொடங்குகிறது. ஏப்ரல் 1-ந்தேதியுடன் 'லீக்' ஆட்டம் முடிகிறது. 3 மற்றும் 4-ந்தேதி அரை இறுதியும், ஏப்ரல் 6-ந்தேதி இறுதிப் போட்டியும் நடை பெறுகிறது.

# 108-வது கிரிக்கெட்...

இவரது 4-வது பந்தில் பிரியங்கன் ஒரு ஓட்டத்தை பெற்ற நிலையில் துவாரகசீலனிடம் பிடி கொடுத்து ஆட்டமிழக்க யாழ் மத்திய கல்லூரியின் இன்னிங்ஸ் நிறைவுக்கு வந்தது.

பதிலுக்கு ஆடிய சென் ஜோன்ஸ கல்லூரி 2விக்கட்டுக்கள், இழந்து 27 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது 7-வது ஓவரின் நான்காவது பந்தை மதுஷன் வீச துவாரகசீலன் எதிர் கொண்டார்.

இந்தப் பந்து விக்கட்காப்பாளரால் ஸ்டம்ப் செய்யப்பட ஆட்டமிழப்பிற்காக மத்திய கல்லூரி வீரர்கள் கோரினர்.

துணை நடுவர் (லெக் அம்பயர்) உடனே ஆட்டமிழப்பு வழங்க துவாரகசீலன் மைதானத்தின் பிச்சை விட்டு எல்லைக்கோட்டினை நெருங்கிச் செல்கையில் மீண்டும் அழைத்த நடுவர் அது ஆட்டமிழப்பில்லையெனவும் மீண்டும் ஆடுமாறும் பணித்தார். இதன்போது மைதானத்திற்குள் புகுந்த மத்திய கல்லூரி ஆதரவாளர களை துணை நடுவரை (லெக் அம்பயர்) தாக்கியதுடன் போட்டியை நடத்த அனுமதிக்கவில்லை. இந்தநிலையில் வெளியேறிய நடுவர்கள் இரு பாடசாலை அதிபர்கள்விளையாட்டுத் துறை முதல்வர்களுக்கிடையில் கூட்டம் இடம்பெற்றது.

கூட்டத்தில் 2 மணித்தியாலத்திற்கும் அதிகமாக தொடர்ச்சியாக கலந்துரையாடப்பட்டுக் கொண்டிருந்த வேளையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்த மைதானத்திற்கு வருகை தந்து கூட்டத்திலும் கலந்து கொண்டார். எனினும் எவ்வித சமரசங்களும் முடிவுகளும் எடுக்கப்படாமல் கூட்டம் முடிவுக்கு வந்தது.

இரு அணி ஆதரவாளர்களும் மோதல் நடவடிக்கைகளுக்கு தயாரானதன் காரணமாக கலகமடக்கும் பொலிஸார் உடனடியாக மைதான வாயிலில் நிறுத்தப்பட்டிருந்தனர்.

இரு அணிகளும் ஆதரவாளர்களும் பழையமாணவர்கள் கல்லூரிச் சமூகமும் ஒரு முடிவுக்கு வராமையால் போட்டி இடைநிறுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. (செ-6,23)

## ஒடுக்குமுறை தொடர்பான கருத்துரை இன்று

(யாழ்ப்பாணம்)

சமூக விஞ்ஞான படிப்பு வட்டம் ஏற்பாட்டில் சாதியம், பெண் ஒடுக்கு முறையின் சமகால நிலைமை தொடர்பாக கருத்துரை இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு திருநெல்வேலி ஆடியபாதம் வீதி பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முன்பாகவுள்ள செயல்திறன் அரங்க இயக்கத்தில் இடம்பெறவுள்ளது. இதில் தொடக்க உரையை எல்.மோகன்ராஜும் கருத்துரையை எவ்.அகல்யா ஆகியோர் வழங்கியுள்ளனர். (செ-11)

# இன்றைய போட்டி

(அளவெட்டி)

அளவெட்டி கும்பலை பாரதி விளையாட்டுக் கழகம் நடத்திய தாச்சி சுற்றுப் போட்டிகளின் இறுதிப் போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 3.30 மணி முதல் அளவெட்டி கும்பலை பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் முதலாவது திறந்த போட்டிகளின் இறுதிப் போட்டியில் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழகமும் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் அணியும் மோதவுள்ளன.

மற்றைய அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான போட்டியின் இறுதிப் போட்டியில் கோண்டாவில் மறுமலர்ச்சி அணியும் தையிட்டி வள்ளுவர் அணியும் மோதவுள்ளன.

இவ் நிகழ்வில் வலி வடக்கு பிரதேச சபை தவிசாளர் சொ.சுகிர்தன் யாழ் மாவட்ட தாச்சி சங்கத் தலைவர் சண்முகநாதன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொள்ள வுள்ளனர். (சு-23)

# புகையிரதத்துடன்...

கடக்க முற்பட்ட வேளையிலே புகையிரதம் இவரை வேகமாக மோதியுள்ளது.

நேற்றுக் காலை இடம்பெற்ற குறித்த சம்பவத்தில் படுகாயமடைந்த இவர் முதலில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தொடர்ந்து மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையிலேயே சிகிச்சை பலனின்றி நேற்று மாலை அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவித்த பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

பிரஸ்தாப குடும்பஸ்தர் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதுண்ட புகையிரதத்துடன் சிறிது தூரம் இழுத்துச் செல்லப்பட்டு சிதைந்த நிலையில் காணப்படுகின்றது. (செ-85,6,11)

# இளம் குடும்பஸ்தர்...

பலபேர் பார்த்திருக்க இடம் பெற்ற மேற்படி படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய எவரையும் பொலிஸார் கைது செய்யாமல் விட்டமையும் பாடசாலைச் சமூகத்தினர் தடுக்க முற்படாமல் அசண்டையினமாக இருந்தமையும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.



### போட்டி

யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை கல்லூரிக்கும் இடையிலான பொன்னணிகளின் போர் என்று வர்ணிக்கப்படும் ஒரு நாள் துடுப்பாட்டப் போட்டி நேற்றையதினம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

துடுப்பாட்டத்தில் சென் பற்றிக் கல்லூரி அணி ஆதிக்கம் செலுத்தியபோது பிற்பகல் 1.45 மணியளவில் யாழ்ப்பாண கல்லூரியின் பழைய மாணவர்கள் குழு மைதானத்திற்குள் நுழைந்தது,

### படுகொலைச் சம்பவம்

பார்வையாளர்கள் அரங்கில் சென் பற்றிக் கல்லூரி ஆசிரியர்களுடன் தனது கல்லூரி மாணவர்களின் துடுப்பாட்டத்தை பார்த்து ரசித்துக் கொண்டிருந்த வேளை அரங்கிற்கு கீழே பற்றிக்ஸ் மாணவர்கள் ஆரவாரப்பட்டுக் கொண்டிருந்தனர்.

இதன்போது குறித்த மாணவனும் கீழே இறங்கிவந்து அந்த மாணவனுடன் நின்ற வேளை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர்கள் குழு அங்குவந்து தாக்குதலில் ஈடுபட்டனர்.

மதுபோதையில் இருந்ததாக கூறப்படும் மேற்படி யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர் குழுவினர் தமது கையில் வைத்திருந்த ரம்ஸினால் அமலனின் தலையில் பலமாக அடித்துள்ளனர்.

இதனையடுத்து மூர்ச்சையாகி அவர் கீழேவிழுந்த போது 50க்கும் மேற்பட்டவர்கள் தொடர்ந்து தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

கைகளினால் அடித்தும் கால்களினால் உதைத்தும் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது சில நபர்களினால் அமலனின் அந்தரங்க உறுப்பின் மீதும் பலமாக காலினால் உதைக்கப்பட்டுள்ளது.

### வரும் வழியில்

சம்பவத்தில் படுகாயமடைந்த நிலையில் மயக்கத்திலிருந்தவரை உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லவோ அல்லது தாக்குதல்தாரிகளிடமிருந்து மீட்கவோ எவரும் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

இதனால் அவர் வைத்தியசாலைக்கு கொண்டுவரும் வழியில் பரிதாபமாக உயிரிழந்தார்.

### பொலிஸ் மீது குற்றச்சாட்டு

சம்பவத்தில் ஒருவரை பலர் பலபேர் முன்னிலையில் வைத்து கடுமையாக தாக்கும் போது பாதுகாப்பு கடமைக்காக வருகை தந்திருந்த வட்டுக்கோட்டை பொலிஸ்நிலைய பொலிஸார் சம்பவத்தை தடுக்கவோ தாக்குதல்தாரிகளை கைதுசெய்யவோ எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாது கை கட்டி வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்ததாக உயிரிழந்தவரின் உறவினர்கள் சரமாரியாக குற்றச்சாட்டை முன் வைத்தனர்.

அத்துடன் அவர்களின் கண்ணுக்கு முன்னாலேயே குறித்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அத்துடன் இறந்தவர்களின் நண்பர்கள் தாக்குதல் குறித்து பொலிஸாருடன் கூறியும் அவர்கள் எதுவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

அத்துடன் தகவல் வழங்கியவர்களை கைது செய்வோம் என எச்சரிக்கை செய்து அனுப்பியிருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த கும்பலுக்கு சம்பவ இடத்தில் சிவில் உடையில் நின்ற பொலிஸ் ஒருவரால் தொலைபேசி தகவல் [illegible] தப்பியோடி விட்டனர்.


எனினும் அவர்கள் வருகை தந்திருந்த மோட்டார் சைக்கிள்கள் மைதானத்திற்குள் நின்றதாகவும் பின்னர் பொலிஸாரினால் பொலிஸ்நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைவிட இரண்டு பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட எவரும் தாக்குதல் சம்பவத்தை கட்டுப்படுத்தவோ தாக்குதலுக்குள்ளானவரை காப்பாற்றவோ நடவடிக்கை மேற்கொள்ளவில்லை எனவும் குற்றம் சாட்டினர்.

இதேவேளை சம்பவம் தொடர்பில் நியாயம் கேட்கச்சென்ற போது பாடசாலை சமூகத்தினர் உரிய பதில் அளிக்கவில்லை எனவும் பொலிஸாரின் பாதுகாப்புடன் நின்று கொண்டு தம்மை விரட்டியதாகவும் குற்றம் சாட்டினர்.

### வைத்தியசாலை முற்றுகை

இதேவேளை மேற்படிச் சம்பவத்தில் உயிரிழந்த அமலனின் உடல் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காகக் கொண்டு செல்லப்பட்ட போது உறவினர்களும் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவர்களும் வைத்தியசாலையினை முற்றுகையிட்டதனால் நேற்று மாலை வைத்தியசாலையின் முகப்பு வாயிலில் பெரும்பரபரப்பு ஏற்பட்டதோடு வைத்தியசாலை பாதுகாப்பு ஊழியர்களுடனும் பொலிஸாருடனும் தள்ளுமுள்ளுப்பட்டனர்.



### ஒன்றரை வயதில் ஒரு பிள்ளை

துடுப்பாட்ட போட்டியினை பார்வையிடச் சென்ற யாழ். பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவரும் 24 வயதேயான இளம் குடும்பஸ்தருமான நேற்றையதினம் படுகொலை செய்யப்பட்ட யாழ்.மாட்டீன் வீதியைச் சேர்ந்த ஜெயரட்ணம் அமலனுக்கு ஒன்றரை வயதேயான ஆண்குழந்தையும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6,11,23)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**Mobile Repairing**
**100% Job Oriented Studies**
Duration - 2Months
SofTTech
புதிய பிரிவுகள் 18.03.2014 செவ்வாய் கிழமை முதல் ஆரம்பமாகின்றன
Tuesday, Thursday Evening : 4.00 - 5.30
Hardware and Software Complete Studies Package
14 வருட அனுபவமிக்க ஆசிரியர் மூலம் யாழ்ப்பாணத்தில் இதுவரை கற்பிக்கப்படாத கல்வி நுட்பங்களுடன் தொழில்முறை பயிற்சிகள் வழங்கப்படும்
அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன
மேலதிக விபரங்களுக்கு:
306. கண்டி வீதி, புங்கன்குளம் சந்தி, அரியாலை, யாழ்ப்பாணம்.
021-221-1220, 077-9122997
www.softtech-edu.com

மின்சார வசதியில்லாத பிரதேசங்களில் வாழும் கல்வி கற்கும் மாணவர்களிற்கான தீர்வு
**சூரிய மின்கலத்துடன் மின்குமிழ். மின்கலம் மற்றும் தேவையான உதிரிகளுடன்**
**ரூ. 9000.00**
Solar Panel with battery and light. (10 W Panel, 7A UPS battery, Charge Controller, 9W LED bulb) **Rs. 9000.00**
தொடர்புகளிற்கு :
யாழ்ப்பாணம் 0776 910215
கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு
சின்னக்கண்ணன்
கட்டட பொருட்கள் வாணிபம் விசுவமடு.
(5822)

## ஆங்கிலப் பேச்சு...

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன இதற்கான அனுமதியை அமைச்சரவையிடம் கோரியுள்ளார். அமைச்சரின் யோசனைப்படி அந்த பரீட்சை புறம்பான ஒன்றாக நடத்தப்படும்.'

இதேவேளை அடுத்த வருடம் முதல உள்ளூரில் இயங்கும் சர்வதேச பாடசாலைகளில் சமயம், வரலாறு மற்றும் தாய்மொழி போன்ற பாடங்களை கட்டாயப்படுத்தும் யோசனையும் அமைச்சரினால் முன்வைக்கப்பட்டுள்ளது. (செ-11)

## அம்புலன்ஸ்.....

வந்த 3 துவிச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றில் பயணித்தவர்களைப் பந்தாடியது.

இதில் மூவர் படுகாயமடைந்தனர். அதிலொருவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்ததாக வைத்திய சாலை வட்டாரங்கள தெரிவித்தன. (செ-11)

## நடுவர் மீது...

காப்பு கடமையில் இருந்தபோதும்மைதானத்தில் வைத்து நடுவர் மீது ரசிகர்கள் தாக்குதல் நடத்தியது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் விதிமுறைப்படி நடுவரின் தீர்ப்பே இறுதியானது ஆக இருக்கையில் ரசிகர்கள் இவ்வாறான அநாகரிகமான செயற்பாட்டில் ஈடுபட்டது கிரிக்கெட் வல்லுநர்கள் இடையே விமர்சனத்தை உண்டாக்கியுள்ளது.

மைதானத்தின் உள்ளேயும் வெளியேயும் பொலிஸார் பாதுகாப்பு கடமையில் இருந்த போதே மேற்படி தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (செ-11)

5வது ஆண்டில் சிகரம் காலடி வைத்ததை ஒட்டி
மார்ச் 24 முதல் 30 வரையில்
**ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நாடு**
அனைத்து முன்னணி நாடுகளுக்குமான
**வெளிநாட்டு கல்வி - தொழில் விசா அனுமதிகள்**
(உங்கள் தெரிவுக்கு 15க்கு மேற்பட்ட நாடுகள்)
Sikaram
Gateway to Education & Employment
America, Canada, Australia, UK, New Zealand, Switzerland, France, Germany, Italy, China, Latvia, Cyprus, Malaysia, Dubai, DOHA, Qatar, Bahrain, UAE உள்ளிட்ட பல நாடுகளுக்கான...
Student Visa, Dependant Visa, Work Permit, Skilled Migration Visit Visa & Visa Rejection Appeals
(நிராகரிக்கப்பட்ட விசா மீள்விண்ணப்பம்)
MBBS, Engineering, Business, IT, Hotel Management Diploma, Bachelors, Masters, PhD & Work Permits
உங்களுக்கு என்ன வேண்டுமோ... அத்தனையும் இனி எம்மிடமே...
முற்பதிவு அவசியம் 077 36 16 798 0777 324 004
அனுமதி பெறும் அனைவருக்கும் 3 மாத கால ஆங்கிலம். தொடர்பாடல் திறன்விருத்தி & ஆளுமை விருத்திப் பயிற்சி
**முற்றிலும் இலவசம்**
(C-6760)
**சிகரம்** கல்வி-தொழில் வாய்ப்புக்களுக்கான நுழைவாயில்
இல.153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
021 222 00 11 www.sikaram.lk fb: Edu Sikaram

**Jet D Express**
**Courier Service**
விரைவு பாதுகாப்பு உத்தரவாதம்

| | | |
|---|---|---|
| Sweeden | Over 5 Kg 1000/- | |
| Canada | Over 5 Kg 1100/- | |
| Norway | Over 5 Kg 1000/- | |
| Italy | Over 5 Kg 1000/- | |
| France | Over 5 Kg 1000/- | Over 11 Kg 750/- |
| Germany | Over 5 Kg 900/- | Over 11 Kg 700/- |
| London | Over 5 Kg 800/- | Over 11 Kg 650/- |
| Australia | Over 5 Kg 900/- | Over 11 Kg 750/- |
| Netharland | Over 5 Kg 1000/- | Over 11 Kg 800/- |
| Swiss | Over 5 Kg 1000/- | Over 11 Kg 850/- |
| Denmark | Over 5 Kg 1000/- | Over 11 Kg 800/- |

Note : 25Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட கட்டண சலுகை உண்டு.
உங்கள் உறவுகளுக்கு நீங்கள் அனுப்பும் பொருட்கள் 5 நாட்களில் சென்றடையும்..
*Note : கடலுணவு வகைகள் எல்லாவகையான பொருட்களும் அனுப்பிவைக்கப்படும். வெளிநாடுகளில் எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.
(C-6749)
உலகின் முன்னணி சேவையின் ஊடாக உங்கள் உறவுகளுக்கு பொருட்களை அனுப்பிக்கொள்ளலாம்
குறிப்பு : கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் வீடுகளில் வந்து பெற்றுக் கொள்ளப்படும்.
இல. 27, முதலாம் மாடி, நவீன சந்தை (தனம்ரெக்ஸ் மேல்) யாழ்ப்பாணம். 021 221 9150, 0772187 301
No. 77E, Manning Place, Wellawatta, Colombo - 06. T.P : 0112363873, 0776509909.

SPEED LANKA EXPRESS

**வெளிநாடுகளுக்கான**
தபால் பொதிகள் சேவை
- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்
(C-6748)
ஸ்பீட் லங்கா எக்ஸ்பிரஸ் கொரியர் & ரவல்ஸ்
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0772931062, 0776217926
www.speedlanka.net

**வெளிநாட்டில் உயர்கல்வி வேலைவாய்ப்புடன்**
UK Collaboration
* University of East London
* Bedfordshire University
* Glyndwr University
* CRIC - Anglia Ruskin University
* EIC - Edinburgh Napier University
* HIBT - University of Hertforshire
* ICP - University of Portsmouth
* LIBT - Brunel University
* PDIC - Plymouth University
Australia Collaboration
* James Cook University
* Curtin University
* MIBT - Deakin University
* ACN - La Trobe University
* PIBT - Edith Cowan University
* SIBT - University of South Australia
Swiss Collaboration.
* HTMi - Hotel Tourism Management Institute
* European University
New Zealand Collaboration
* UCIC- University of Canterbury
* NTEC
(C-6761)
**Study Hotel Management in Singapore & Malaysia with part time job**
Malaysia Collaboration
* APU (APIIT)
* Taylor's University
* INTI University
* SEGI University
* KDU University
Singapore Collaboration
* James Cook University
* Curtin University -Singapore
Poland, Lithuania, Latvia, Cyprus .....
Very Low Course Fee
# Entry with G.C.E O/L
# IELTS Not required **
# Free Accommodation **
# Very low Course fee **
# Credit Transfer to year 2 / 3 available
# Financial Sponsorships Available
** Conditions Apply
iCS Study Overseas
தொடர்புகளுக்கு
77, Clock Tower Road, Jaffna
021 7306000 , 077 3013060

## பூநகரியின் புகழ்மாலை கனடாவிலும்...

தென்னிந்திய இசையமைப்பாளர் அக்னி கணேஸ் அவர்களினால் இசையமைக்கப்பட்ட பூநகரியின் புகழ்மாலை இறுவெட்டு அறிமுக நிகழ்வு அண்மையில் கனடாவிலும் நடைபெற்றது. இந் நிகழ்வில் பாடல் ஆசிரியர்களின் ஆரம்ப கல்வி ஆசிரியர் திருமதி ஜெயதேவி அவர்கள் முதற் பிரதியை பெற்றுக் கொள்வதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.





(5804)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.